காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

மாசி - 2023

சிற்றிதழ் சிறப்பிதழ்

காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்

மாசி - 2023

படைப்புக்கள் அனுப்ப :
Neythal34@gmail.com
Mahendran54@hotmail.com

படைப்புக்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு.

- ஆசிரியர் : சோபா
- அட்டை ஓவியம் : muhammed sajid
- வடிவமைப்பு : நெகிழன்
- ஆலோசனைக்கு/நூல் அனுப்ப :
  R.Mahendran,
  34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk
- சந்தா : 12 இதழ்களுக்கு 8.00 பவுண்ட்
- R.Mahendran,
  A/C No: 90759821
  Sort.Code: 20-67-88,
  SWIFTBIC BUKBGB22
  IBAN GB80 BUKB 2067 8890 7598 21
  BARCLAYS BANK (PLAISTOW BRANCH)

வணக்கம்,

காற்றுவெளி மாசி(2023) இதழுடன் உங்களைச் சந்திக்கிறோம்.

அவ்வப்போது சிறப்பிதழ்களையும் தந்துகொண்டிருக்கிறோம்.

பலரால் ஏற்பட்ட சங்கடங்களையும் கடந்து வெளிவந்துகொண்டிருக்கும் காற்றுவெளி மின்னிதழுக்கு படைப்பாளர்களின் ஆதரவிற்கு எமது நன்றி.

பலருக்கு சிற்றிதழ் சிறப்பிதழ் பற்றிய தகவல்களையும் பரிமாறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அச்சிதழாகக் கொண்டுவருவதெனில் விளம்பரங்கள் கிடைக்கவேண்டும்.பின்னர் அது பற்றிச் சிந்திக்கலாம் என்றே நினைக்கத்தோன்றுகிறது.வடிவமைப்பில் மாற்றங்களையும் எதிர்பார்ப்போர் கொஞ்சம் பொறுத்தருள்க.

மேலும்,

எழுத்துரு மாற்றங்களால் வடிவமைக்கும்போது எழுத்துப்பிழை வந்துவிடுவது தவிர்க்கமுடியாதது. அதனை கூடியவரை திருத்தங்கள் செய்ய படைபாளர்களிடம் தனியே உதவக் கேட்கின்றமையினால் படைப்பாளர்களுக்கும் சங்கடங்கள் ஏற்படுவதை புரிந்துகொள்கிறோம்.

நூல்களுக்கான/சிற்றிதழ்களுக்கான இலவச விளம்பரங்களை ஒவ்வொரு இதழிலும் வெளியிட ஒரு பிரதி அதற்காக அனுப்புதல்வேண்டும்.

உலக நாடுகளை அச்சுறுத்தும் நோய்,யுத்தம் புதிய ஆண்டிலும் தொடரக்கூடாது என்பதே நமது பிரார்த்தனை.

ஈழத்தமிழர்களின் துயரம் நிறைந்த வாழ்விற்கான நிரந்தரத் தீர்வினை எதிர்பார்த்து இந்த ஆண்டும் விடிந்திருக்கிறது.தங்களின் இருப்பை தக்கவைத்துக்கொள்ளும் போட்டியே பலரிடமும் காணப்படுவதால் ஈழ மக்களின் கனவு தொடரக்கூடாது.புதிய தலைமுறை மேலெழுந்து வருதல்வேண்டும்.அப்போதுதான் புதிய நம்பிக்கைகளை வளர்த்தெடுக்க ஏதுவாகும்.

நம்பிக்கையுடன் காத்திருப்போம்.

நட்புடன்,

சோபா

01/02/2023

சிற்றிதழ்

சிறப்பிதழ்

படைப்புகளின் பங்குதாரர்கள்

கட்டுரையாளர்கள்:

1. மஞ்சுநாத்
2. திக்குவல்லை கமால்
3. முனைவர் செ. சு. நா.சந்திரசேகரன்
4. பாரதிசந்திரன்
5. நந்தவனம் சந்திரசேகரன்
6. சு.கருணாநிதி
7. சுலோச்சனா அருண்
8. கவிஞர் மாலதி இராமலிங்கம்
9. ஈழக்கவி
10. பாடும்மீன் சு.ஸ்ரீகந்தராசா
11. பாவலர் கருமலைத்தமிழாழன்(கவிதை)
12. பரிவை சே.குமார்
13. ஏ எம் கஸ்புள்ளா
14. கோவிலூர்.செல்வராஜன்
15. பொலிகை ஜெயா(சுவிஸ்)
16. என்.செல்வராஜா
17. அம்பலவன்புவனேந்திரன்
18. தமிழ் பாணன்

அகநாழிகையின் செப்பமும் திறனும்

ம ஞ் சு நா த்

“**ம**னிதன் மகிழ்ச்சியுடன் வாழவே படைக்கப்பட்டிருக்கிறான். மகிழ்ச்சியை உணர்ந்த மனிதர் கடவுளின் கட்டளையை நிறைவேற்றும் உரிமையை பெற்றவராகிறார்.

- தஸ்தாயெவ்ஸ்கி

மகிழ்ச்சி என்பது ஒருவரது வாழ்வின் தேடலாக மட்டும் இருக்குமேயானால் அதை நோக்கிய பயணத்திற்கு எல்லை என்பதே கிடையாது. முடிவில்லாத பயணம் சில சமயங்களில் சலிப்பைத் தந்து விடும். மாறாக எது நேர்ந்தாலும் ஒருவரது வாழ்வின் முழு செயல்வடிவமும் மகிழ்ச்சியின் வெளிப்பாடாக இருக்குமேயானால் அவரது வாழ்வின் தடயங்கள் பதிவு செய்யப்பட வேண்டிய தகுதியைப் பெறுகின்றன.

பொதுவாக இலக்கியச் செயல்பாடுகள் இருவிதமான வகைமைக்குள் எளிதாக அடங்கிப் போவதைக் காணமுடியும். ஒன்று மகிழ்ச்சியின் வெளிப்பாடு. மற்றொன்று மகிழ்ச்சிக்கான தேடல். ஆனால் இதில் பெரும்பான்மையான இலக்கியச் செயல்பாடுகள் மகிழ்ச்சியை நோக்கிய தேடலோடு நின்று விடுகின்றன. மகிழ்ச்சியின் வெளிப்பாட்டைப் பதிவு செய்யும் இலக்கியங்களைவிட வாழ்வின் துயரங்களை அழுத்தமாக வெளிப்படுத்தும் இலக்கியங்களே அதிகம். பெரும்பாலும் இவையே பேரிலக்கியங்களாகவும் கொண்டாடப்படுகின்றன. அவை வாழ்வின் ஒத்திசைவோடு பொருந்திப்போவது ஒருவிதமான காரணமாகக் கொண்டாலும், வாசிப்பின் ஆரம்பத்தில் உள்ள வாசகரை தன்வசப்படுத்திக் கொள்ளும் இத்தகைய இலக்கியங்கள் நுன்மைகளைத் தேடிக் கண்டடிவதற்கான வெறும் துவக்கப் புள்ளிகளாக மட்டும் நின்று விடுகின்றன. ஒரு முதிர்ச்சியடைந்த வாசகன் மீண்டும் மீண்டும் துயரத்தின் நிழலில் இளைப்பாறுவதற்கு விரும்புவதில்லை. ஆரோக்கியமான இலக்கிய சூழலும் அதன் தேடலும் புள்ளிகளோடு மட்டும் நின்று விடுவதில்லை.

வெளிச்சூழல், உள்சூழல், சமூகம், கலாச்சாரம் என எந்தவொரு தன்மையாக இருந்தாலும் வாசகனின் அக விசாரணைக்கான தூண்டுதல்களையும் கேள்விகளையும் அளிக்கும் மூலகமாக திகழ்பவை சிற்றிதழ்கள். திருப்திப்படுத்தக்கூடிய பதில்களையும், உணர்ச்சிகளைத் தூண்டும் படைப்புகளையும் வெளியிடுவது சிற்றிதழ்களின் செயல்பாடுகளை கலை வடிவில் இருந்து நகர்த்துகின்றன. இவ்வாறு இயங்கிய பல சிற்றிதழ்கள் இன்றைக்கும் தவிர்க்க முடியாத ஆவணங்களாக பாதுகாக்கப்படும் தகுதியை

இழந்து இலக்கிய கசடுகளாக நிராகரிக்கப்பட்டுள்ளன.

ஒரு சிற்றிதழ் இலக்கிய உலகில் நீடித்து நிற்பதற்கு வலுவான பொருளாதார பின்புலத்துடன் அதன் உள்ளடக்கமும் தவிர்க்க முடியாத காரணம். மாறிவரும் வாழ்வியல் சூழலுக்கு ஏற்ப இலக்கிய கருத்துருக்களும் அவ்வப்போது பெரும் மாற்றத்திற்கு உள்ளாகின்றன. புதிது புதிதாக துவங்கப்படும் பல சிற்றிதழ்களின் நோக்கம் வாசகனின் தற்கால சிந்தனை மரபிற்கு உற்சாகம் தருவதாக இல்லை. நுன்மையான பன்முகத்தன்மையுடன் கூடிய இலக்கிய பொதுப்பார்வையுடன் வெளிவரும் சிற்றிதழ்கள் மிகவும் அரிதாகி விட்டன.

தற்போதைய இலக்கிய சூழலில் பொதுப்பார்வை என்பது குழு மனப்பான்மை, பகைமை பாராட்டல், தனிமனித பன்புகளின் மீதான வன்மம் கலந்த விமர்சனம் என்கிற தவறான புரிதலில் கையாளப்படுகிறது. இதனால் தமிழ் இலக்கிய உலகம் வாசகர்களின் எண்ணிக்கையை கனிசமாக இழந்து வருகிறது. கனவுகளுடன் இலக்கிய உலகிற்குள் காலடி வைக்கும் வாசகனுக்கு இவர்கள் செய்யும் அரசியல் பெரும் அதிர்ச்சி அளிக்கிறது. ஆரம்பகட்ட தயக்கம் என்பது அவனது ஆர்வத்தை வற்றச் செய்து முற்றிலும் முடக்கியும் விடுகிறது. இளம் எழுத்தாளர்களுக்கு தமிழ் எழுத்துலகம் அளித்து வரும் அதிர்ச்சி இயல்பாகிப் போன வழமையான சூழலில் மிஞ்சிப் போனால் தொடர்ந்து வாசிக்கும் 300 தீவிர வாசகர்களை மட்டுமே கொண்ட தமிழ் வாசக பரப்பும் மெல்ல தகர்த்து வருகிறது.

விமர்சனங்கள் இலக்கிய சூழலின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு வித்திடுவன. ஒரு படைப்பு வாசிப்பிற்கு உள்ளாக்கப்படாமலே சண்டைக்கும் சச்சரவுக்கும் காரணமாகும் போது அங்கு இரு தரப்பிலும் ஒருவிதமான அரசியல் மட்டுமே முன் நிற்கிறது. இறுதியில் அரசியல் சர்ச்சைகள் விஸ்வரூபமாக்கப்பட்டு படைப்பும் படைப்பின் மீதான விவாதங்களும் பின்னுக்கு தள்ளப்படுகின்றன.

நுன்மையான பன்முகத்தன்மையும் இலக்கிய பொது பார்வையும் நிறைந்த அணுகுமுறைகளால் மட்டுமே தற்போதைய இளந்தலைமுறையின் வாசிப்பு வட்டத்தை பெரிதாக வளர்த்தெடுக்க முடியும். மெதுவாக செப்பனிடப்பட வேண்டிய மலைப்பு தரும் இச்செயலுக்கும் நீண்ட காலம் பிடிக்கும். இந்த மீட்டுருவாக்கத்தை யார் முன்னெடுப்பது என்றால் அது சிற்றிதழ்களில் இருந்து துவங்க வேண்டும் என்பது எனது கருத்து. சிற்றிதழ்களின் சிறப்பான பங்களிப்பின்றி ஒரு மொழியின் இலக்கிய வளர்ச்சி பாதையை சரியான திசையில் திருப்புவதும் தொடர்வதும் சாத்தியமில்லை. இத்தகையதொரு பொறுப்புணர்வுடன் துவங்கப்பட்ட அகநாழிகை இலக்கிய இதழ் துவக்க காலத்திலிருந்தே துடிப்பான சமநிலையுடன் செயல்படும் இதழாக உள்ளது. தேர்ந்த இலக்கியச் செறிவுகள் மிகுந்த படைப்புகளுக்கு முன்னுரிமை தரும் அகநாழிகை அனேக வாசகர்கள் சேகரித்து வைக்கும் சிற்றிதழ்கள் வரிசையில் முதன்மையானது.

அகநாழிகையின் துவக்க அறிமுகம் சுவாரசியமானது. சிறந்த சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள், கட்டுரைகள் என வாசர்களின் ரசனையை மேம்படுத்துவதற்காகவும், வாசித்தவைகள் மீதான கருத்துகளை தயக்கமின்றி பகிர்ந்து கொள்வதற்காகவும் எழுத்தாளர் ஞாநி தனது கேணி இலக்கிய அமைப்பின் மூலம் மாதம் ஒருமுறை இலக்கிய கூடுகைகளை நடத்தி வந்தார். இன்றைக்கு சிறப்பு முத்திரையுடன் வலம் வரும் பல எழுத்தாளர்களின் ஆரம்ப காலப் படைப்புகள் குறித்த அறிமுகக் கூட்டமாகவும் விவாதக் களனாகவும் கேணி இலக்கிய சந்திப்புகள் அமைந்தன.

நவம்பர் 2009-ல் நிகழ்ந்த இத்தகையதொரு கூடுகையில் எழுத்தாளர் பொன். வாசுதேவனை ஆசிரியராகக் கொண்ட 'அகநாழிகை' கலை இலக்கிய இதழ் மாத இதழாக முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. தீவிரமான இலக்கிய ஆக்கங்களுடன் பல புதிய எழுத்தாளர்களை அறிமுகம் செய்து வந்த அகநாழிகை இலக்கிய சிற்றிதழின் செயல்பாடுகள் 2017-ஆம் ஆண்டு வரை தொடர்ந்தது. அதன்பிறகு அதன் வருகையில் மிகப்பெரிய இடைவெளி...

சிற்றிதழ்களின் பயணம் தீர்த்த யாத்திரையைப் போன்றது. சேருமிடம் எது? எப்பொழுது நிறைவுறும்? போன்ற கேள்விகளுக்கு விடையிராது. அது போலவே அதன் பயணமும் தொடர்ச்சியற்றது. சிறிது கால இடைவெளிக்கு பிறகு மீண்டும் தொடரவல்லது. யாத்திரை தடைபடும் போதெல்லாம் யாத்ரீகன் எவ்வாறு தன்னை மீட்டெடுத்து முன்பைவிட அதிக வலுவுடன் பயணிக்கிறான் என்பதில் தான் அவனது தேடல் உயிர்ப்பாகிறது.

"அவ்வளவுதான் என்று நினைத்தேன். துயருற்று அலைகழிந்து மிகுந்த மனசோர்வுற்றுக் கிடந்த காலம் அது. உரத்த மவுனத்தைக் உள்குடைந்து சென்று தனிமைக்குள் தனித்திருப்பதையும் படித்துக் கொண்டிருப்பதையும் மட்டுமே செய்து கொண்டிருந்தேன். காலாவதியாகாத

கடன்களின் நூல் உருண்டையை பற்றியபடி முடிவற்றுத் தொடர்ந்து கொண்டேயிருந்தது நாட்கள். அகநாழிகை எப்பொழுது வரும் என்று கேட்கிற நேரங்களில் எல்லாம் உள்ளுக்குள் பெருங்காட்டில் கூடடைய திரும்பும் பறவையின் நடுக்கம் உள்ளுக்குள் வந்து செல்லும். பெரும் தியாகம் செய்துவிடவில்லை. ஒவ்வொரு பக்கத்திலும் எதிர்பார்ப்புகளோடு கேட்க நேரிடுகிற குரல்கள் நெருக்குதலை தந்தபடி இருந்தது. மிகுபோதையில் உள்ள ஒருநாள் 'சாவதற்குள் வந்துவிடும்' என்றொரு நண்பனிடம் சொன்னேன். முயற்சிகளை நிராகரிக்கிற காலத்தில் முன் எதிர்பார்ப்புகளை கடத்திக் காத்திருந்த காலங்கள் பழகிப்போயிருந்தது. (அகநாழிகை - மார்ச் 2014)

இலக்கிய சிற்றிதழ்கள் பல்வேறு காரணங்களால் தாமதமாக வெளிவந்தாலும் தொடர்ந்து கொண்டுவருவதில் தான் அது காலவோட்டத்தின் நீங்காத அங்கமாகிறது. எழுத்தாளர் பொன். வாசுதேவனின் நம்பிக்கையோடு கூடிய உழைப்பின் பெரும்முயற்சி அகநாழிகையின் மறுவரவை துவக்கி வைத்துள்ளது.

பொன். வாசுதேவன் எழுத்தாளர் மற்றும் கவிஞராக மட்டுமல்லாது நவீன பாணியிலான புத்தக முகப்பு அட்டை வடிமைப்பாளராகவும் திகழ்கிறார். அகநாழிகையின் தேர்ந்த படைப்புகளுடன் மாறுபட்ட முகப்போவியத்துடன் கூடிய கச்சிதமான உள்வடிமைப்பும் வாசகர்கள் மற்றும் எழுத்தாளர்களின் கவனத்தைப் பெறுகின்றன.

அகநாழிகையின் இரண்டாவது வருகை ஏப்ரல் 2022-ல் துவங்கியது. இதில் வெளியான அப்பாம்மை, உதிரும் உடல் போன்ற சிறுகதைகள் பல்வேறு விமர்சகர்கள் மற்றும் வாசகர்களின் ஆதரவையும் பாராட்டையும் பெற்றன. தரமான கட்டுரைகளுக்கு கவனம் தருவது போன்று தரமான கவிதைகளின் தேர்வுக்கும் முக்கியத்துவம் செலுத்த வேண்டும் என்கிற வாசகர்களின் கோரிக்கை ஜூலை 2022-ல் வெளியான இதழில் நிவர்த்திக்கப்பட்டது. இவ்விதழில் குறிப்பாக மூன்று தமிழ் சிறுகதைகளும் மூன்று மொழிபெயர்ப்புச் சிறுகதைகளும் வெளியாயின. அகநாழிகையில் இடம் பெறும் சிறுகதைகள் வாசகர்களின் அதிக கவனம் பெறுகின்றன.

பரிபூரணம் (அரிசங்கர்) : சிறைக்கம்பிகளுக்கு பின்னால் நிகழும் மரணங்களின் காரணத்தை சமூகம் நன்றாகவே அறியும். இதில் பெரும்பாலும் இழப்பின் பக்கம் மட்டுமே வெளிச்சம் காட்டப்பட்டு கதைகளாக்கப்படுவதையும் அறிவோம் ஆனால் இக்கதை இழப்பின் மறுபக்கத்தை காட்சிப்படுத்துகிறது. ஒரு காவல்துறை பணியாளர் பின்னால் அவர் குடும்பம் எதிர்கொள்ளும்

அகசிக்கல்களையும், உறவுகள் பிரச்சனைக்கு உள்ளானவரை எவ்வாறு எதிர்கொள்ளக்கூடும் என்பது குறித்தும் பேசுகிறது.

பெண்டுலம் (ஐ.கிருத்திகா):

தாய்மை வரத்திற்கு ஏங்கும் பெண் மனதின் பெண்டுல அசைவின் துல்லியத்தை ஒலிக்கும் கதை. பெண்களின் சுய எதிர்பார்ப்புக்கு பின்னால் மிகப்பெரிய துக்கம் மட்டுமல்ல சமூக வாழ்வின் அவலமும் மறைந்துள்ளது. புற்றீசல் போல் செயற்கை கருத்தரிப்பு மையங்கள் பல்கி பெருகி வருவதன் காரணத்தையும் காரணிகளையும் நம் அலட்சியப்படுத்துவதால் எதிர்காலத்தையும் சேர்த்து புறக்கணிக்கிறோம். இது உணர்வுகளை கச்சிதமாக வெளிப்படுத்தும் கதை.

கரோனாங் (இந்தோனேசியா):

இந்தோனேசியாவில் பிறந்த "எகா குர்னியவான்" அந்நாட்டின் மழைக்காடுகளின் சீரழிவால் அழிந்துவரும் அரிய வகை விலங்கினங்களுக்கு ஆதரவாக தொடர்ந்து எழுதி வருபவர். மாறுபட்ட இக்கதையை ச.வின்சென்ட் மொழிபெயர்த்துள்ளார்.

ஒரு சிறுகதை மாறுபட்டதாக இருக்கிறது என்பதன் பொருள் அக்கதை வழமையான சமூகத்திற்கு முரண்பட்டதாகவோ அல்லது பொருந்தாத கற்பனை உள்ளீடுகளையோ கொண்டிருக்கும் என்பது மட்டுமல்ல அதுவொரு வாசகனை விழிப்படையச் செய்ய பொறி. இக்கதையில் கரோனாங் என்கிற அரிய நாயினம் ஒரு குறியீடு. தனது இரண்டு கால்களை மட்டும் நடப்பதற்கு பயன்படுத்தும் கரோனாங் பலவிதங்களில் மனித உணர்வுகளை பிரதிபலிக்கிறது. இதற்கு மனிதனை போல் பல செயல்வடிவ பரிமாணங்கள் இருந்தாலும் இந்த நாய் துப்பாக்கியை பயன்படுத்தி தனது எசமானனின் நான்கு வயது குழந்தையை கொன்று விடுகிறது!

இதயம் சொல்லும் அந்தரங்கம் (ஆங்கிலம்): அமெரிக்க எழுத்தாளர் எட்கர் ஆலன் போ எழுதிய Tell-Tale Heart யை சித்தார்த்தன் சுந்தரம் மொழிபெயர்த்துள்ளார். சிறப்பான தேர்வு. ஆனால் அழுத்தமான சொற்களை தேர்வு செய்திருக்க வேண்டும். நிறைய மனிதர்கள் இதயம் திறப்பதில்லை. ஒருவேளை திறக்கும் பட்சத்தில் அது பைத்தியத்தின் சுவடுகளையே அதிகம் காட்டுகிறது. மனக்குழப்பங்கள் ஒருவகையான நோய் என்றால் இங்கு அனைவரும் மனநோயாளிகள். ஒரு மனநோயாளி தன்னை அதி தீவிரத்தன்மையுடன் வெளிப்படுத்திக்கொள்வதை சைக்கோத்தனம் என்கிறார்கள். வெளிப்படுத்துவது தான் இங்கு ஆபத்து. அவர் முகம் எனக்கு பிடிக்கவில்லை என்று கூறினால் பிரச்சனை இல்லை. ஆனால் அதன் விளைவாக அவர் முகத்தை தீயிட்டு கொளுத்துவேன் என்றால்...

"இப்ப சொல்லுங்க நான் பைத்தியமா?" என்று கதாபத்திரம் கேட்கையில் நாம் நிதர்சனத்தில் இருந்து விலகியோடுவது இக்கதையின் வெற்றி.

ஆரம்ப கால சுருதியின் முழக்கத்துடன் அக்டோபர் 2022 -ல் வெளியான அகநாழிகை இதழ் வாசகர்கள் பலரையும் ரசிகர்களாக்கி கொண்டது. இவ்விதழில் வெளிவந்துள்ள நெடுங்கதைகள் புதுமையான முயற்சி. கன்னடம் மற்றும் மலையாளத்திலிருந்து அதிகளவு

சிறுகதைகளும் நாவல்களும் தமிழுக்கு வந்துள்ளன. ஆனால் தெலுங்கிலிருந்து தமிழுக்கு வரும் இலக்கிய படைப்புகள் குறைவு. இந்த இதழில் பொருநை க.மாரியப்பன் மொழியாக்கத்தில் எழுத்தாளர் மெஹர் எழுதிய ஒரங்குட்டான் எனும் நெடுங்கதை வெளிவந்துள்ளது.

தனிமனித குணங்கள் மீது அலுவலக ரீதியான துன்பறுத்தல் வன்முறைக்கு வித்திட வல்லது. கும்பல் மனோபாவத்தால் மேலேழும் ஆளுமையே தனிமனிதர்கள் மீது அத்துமீறலாக பாய்கிறது. மனித உளவியலை சித்தரிக்கும் சிறப்பான நெடுங்கதை.

பொதுவாக நெடுங்கதைகளுக்கான பிரசுர வாய்ப்புகள் காலாண்டு இலக்கிய அச்சு இதழ்களில் குறைவு. அகநாழிகை அதற்கான வாய்ப்புகளை வழங்குவது மாற்றத்தின் தொடக்கம். குறிப்பாக ஒருசில இணைய இதழ்கள் மொழியாக்கம் செய்யப்பட்ட நெடுங்கதைகளுக்கு மட்டும் முன்னுரிமை அளிக்கின்றன. அக்டோபர் 2022 இதழில் புலம்பெயர்ந்த தமிழ் எழுத்தாளர் பொ.கருணாகரமூர்த்தி எழுதிய "தனிமைக்குள் நீந்தும் ஓங்கில் " நெடுங்கதையை இடம் பெறச்செய்து அகநாழிகை தனது மாறுபட்ட அணுகுமுறையை பதிவு செய்துள்ளது. இக்கதையின் கருவும் களமும் வெவ்வேறு வடிவங்களில் பலமுறை எழுதப்பட்டது என்றாலும் பிசறில்லாத விவரிப்புத் தன்மையால் கவனத்தை ஈர்க்கும் நெடுங்கதையாக மிளிர்கிறது.

நீண்ட இடைவெளிக்கு பின்பு வெளிவந்துள்ள அகநாழிகை இதழ்களின் உள்ளடக்கம், படைப்புகள் தேர்வு, வடிவமைப்பு என ஒவ்வொரு பகுதியும் பல வகையில் மேம்பாடு அடைந்துள்ளன. சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், மொழிபெயர்ப்பு படைப்புகள் என வழக்கமான உள்ளடக்கங்கள் தாண்டி நல்ல நூல்களை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தும் திறன் சிற்றிதழ்களின் இயல்பு. மலையாள எழுத்தாளர் ட்டி.டி.ராமகிருஷ்ணனின் ஐந்து நாவல்கள் குறித்து இலக்கிய விமர்சகர் சரவணன் மாணிக்கவாசகம் எழுதிய "எழுத்தின் கோணங்கள் " என்கிற விமர்சனக் கட்டுரை (அக்டோபர் 2022) சிற்றிதழ்களின் பழைய அடையாளத்தைக் காட்டுகிறது.

திடகாத்திரமான கட்டுரைகளுக்கு சிற்றிதழ்கள் தாய் வீடாக இருப்பது போல் எழுத்தாளர்களின் மனம்திறக்கும் ஜோடனையற்ற முகஸ்துதி இல்லாத நேர்காணல்களை சிற்றிதழ்கள் மட்டுமே கொண்டு வரமுடியும். நேர்காணல்களே இலக்கிய சர்ச்சைகளுக்கு வித்திட முடியும், இலக்கியம் விவாதங்களிலும் சர்ச்சைகளிலும் மட்டுமே தன்னை காலத்திற்கேற்ப மீட்ருவாக்கம் செய்து கொள்ளவதை மறந்துவிடக் கூடாது.

ஜனவரி 2023 இதழில் 2022-ஆம் ஆண்டின் சிறந்த மொழியாக்கத்திற்கான சாகித்தய அகாதமி விருது பெற்றுள்ள (யாத் வஷேம் - கன்னட நாவல்) மொழிப்பெயர்ப்பாளர் கே.நல்லதம்பியின் நேர்காணல் வரவேற்றகத் தக்கது.

மூத்த எழுத்தாளர்களின் காத்திரமான கட்டுரைகள், நேர்காணல்கள், வளர்ந்துவரும் இளைய தலைமுறை மற்றும் அறிமுக எழுத்தாளர்களின் சிறுகதைகள், கவிதைகள், சமகால பிறமொழி படைப்புகளுடன் இனி தொடர்ந்து வெளிவரப் போகும் அகநாழிகையின் புதிய முயற்சிகள் மாற்றத்தை புகுத்தட்டும்.

சிற்றிதழ் பட்டியலாக்கம் காலத்தின் தேவை

திக்குவல்லை கமால்.

சமயம் ,கல்வி ,மருத்துவம் ,உளவியல் ,இவ்வாறாகப் பல துறைகளிலும் சிறு சஞ்சிகைகள் காலந்தோறும் வெளிவந்த வண்ணமுள்ளன.சில நாலைந்து இதழ்களோடு முற்றுப் பெற்றுவிடும். இன்னும் சில வருடக் கணக்காக தொடர்ந்து கொண்டிருக்கும்.இங்கு நாம் கவனம் செலுத்தப் போவது இலக்கியம் சார்ந்த சிற்றிதழ்களைப் பற்றி மட்டுமே.இருந்தும் கல்வி ,உளவியல் , வரலாறு போன்ற பிற துறைகள்சார்ந்த விடயங்களும் ஓரளவுக்கு இலக்கிய சஞ்சிகைகளில் இடம் பெறுவது தவிர்க்க முடியாததே.

எத்தனை என்பதோ , எவ்வளவு காலம் என்பதோ இங்கு முக்கியமல்ல.எவரும் விளையாட்டுக்காகவோ ,விநோதத்திற்காகவோ இவ்வாறான காரியமொன்றில் இறங்குவதில்லை. குறிப்பிட்டதொரு இலக்கின் அடிப்படையிலேயே இவ்விடயத்தில் தனிப்பட்ட வகையிலோ பகுமுநிலையிலோ கால்பதிப்பர் என்பதில் எந்தவித சந்தேகமும் கிடையாது.

இருந்தும் பெரும்பாலான சஞ்சிகைகள் நாலோ ஐந்தோ இதழ்களோடு தம் பயணத்தை நிறுத்திக் கொள்வதை கண்டு வருகிறோம்.சந்தாதாரர் ,புத்தகக் கடைகள் ,விளம்பர உதவியின்மை போன்றன காரணிகளாக அமைகின்றன.இலாபம் பாராத நன்னோக்கத்திற்காக நேரம் , பணம் உழைப்பு போன்றவற்றை அர்ப்பணிப்பதில் என்ன அர்த்தமிருக்கிறது? என்ற கேள்விக்கு முன், பதிலற்றுப் போகிறார்கள் ஏற்பாட்டாளர்கள்.

இலங்கையில் மறுமலர்ச்சி,கலைச்செல்வி , சிரித்திரன் , தேன்மொழி , மலர் , மல்லிகை , போன்ற சஞ்சிகைகள் எமது இலக்கிய மேம்பாட்டுக்கு எவ்வளவு தூரம் உதவி இருக்கின்றன என்பதை , அவ்வப்போது இளைய தலைமுறையினர் மேற்கொள்ளும் தேடல் , ஆய்வுகள் மூலம் நாமறிவோம்.

ஆங்காங்கே சிறுசஞ்சிகை சேகரிப்பாளர்கள் இருந்து வருகின்றனர்.நூலகம் இணையத்தில் ஏராளமான சிறு சஞ்சிகைகள் பதிவாகி உள்ளன.சிறு சஞ்சிகையாளர் சங்கங்களும் செயற்படுகின்றன.வெளிவந்த வண்ணமுள்ள சஞ்சிகைகளும் சிற்றிதழ் சிறப்பிதழ்களை வெளியிடுகின்றன.

ஓரிரு பிரதிகள் வெளிவந்து கவன ஈர்ப்புக்கு உள்ளாகுமுன் காணாமல்போகும் சஞ்சிகைகள் பற்றி பெரிதாக எதுவும் பேசப்படுவதில்லை.அந்த வகையில் ஓரிரு பிரதிகள் மட்டுமே வெளிவந்த சில சிற்றிதழ்களை அறிமுகப்படுத்த முனைகிறேன்.

நினைவு :

குறிஞ்சிப் பண்ணை வெளியீடாக பண்டாரவளையில் இருந்து ‘ நினைவு ‘ வெளிவந்துள்ளது.ஏ.எஸ். கீர்த்திமணி அச்சிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் பெயர் விபரம் காணப்படவில்லை.நெஞ்சம்:1- நினைவு-2- செப்டெம்பர் என்று தரப்பட்டுள்ளது.ஆண்டு குறிக்கப்படாவிட்டாலும் 1972 என்று ஊகிக்க முடிகிறது.

இவ்விதழில் மலையக நாட்டார் பாடல்கள் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன.அவற்றில் ஒன்று :

புள்ளி ரவிக்கைக்காரி

புளியங் கொட்டைச் சேலைக்காரி

புள்ளி ரவிக்கையிலே

வில்லா வளையிரேன்டி

மற்றும் பசறையூர் க.கிருஷ்ணாவின் ‘சற்றே விழித்தெழும் காளையரே ‘ , கவிஞர் குமரனின் ‘ தானம் ‘ , மாத்தனை செல்வத்தின் ‘ காதல் க(ன்)னி ‘முதலியகவிதைகளும் அன்ஷா ஜீவனின் ‘ சிருஷ்டி’ , எஸ் ஐயாத்துரை யின் ‘ஒளி பிறந்தது ‘ஆகிய சிறுகதைகளும் இடம் பெற்றுள்ளன.

மேலும் , நினைவுக்கு- குமார இராமநாதன் , பூஞ்சிட்டு- கே.கந்தசாமி , தொழில் - ரோசா , நம்மைப்பற்றி - மெரீனா மனோகரன் போன்ற பல்தரப்பட்ட விடயங்களும் அடங்கி உள்ளன.

28-பக்கங்கள்.ஆனால் பக்க இலக்கங்கள் இல்லை. விலை-25சதம்.சித்திரமும் புகைப்படமுமான இரு வர்ண அட்டை.



நவயுகம் :

‘புதிய ஜனநாயக புரட்சியாளர்களின் உந்துகளம்‘ என்ற மகுட வாசகத்துடன் ஏயெம்மே.நஸீரைஆசிரியராகக் கொண்டு , மாளிகைக் காடு முகவரியிலிருந்து ‘நவயுகம் ‘ வெளிவந்துள்ளது.இது மூன்றாம் இதழ்.நவம்பர் -1975 ல் வந்துள்ளது.இரு வர்ண எளிமையான அட்டை.

‘சாகித்திய மண்டலமும் நமது பார்வையும்’-என்ற கனதியான ஆசிரியர் தலைப்பு. ‘தட்டி வேலிகள் தடம் புரள்கின்றன’- என்ற மருதூர்க் கொத்தனின் சிறுகதையுடன் மருதூர்க்கனி , சாருமதி , ரஞ்சினி ரத்னம் , மீலாத்கீரன் , சரவணையூர் சுகந்தன், மேமன்கவி போன்றோரின் கவிதைகள் இடம் பிடித்துள்ளன.

மேலும் , பலவீனம்-ஏ.கே.எம்.நியாஸ் , பொய்மையைப் புரட்டும் புதிய காற்று - காந்தன் முதலான விடயங்களும் இடம்பெற்றுள்ளன.

இருபது பக்கங்கள்.விலை 85 சதம்.

நளினி :

எம்.ஆர்.சந்திரனை ஆசிரியராகக் கொண்டு 'நளினி' வெளிவந்துள்ளது.அநேகமாக முதலாவது இதழாக இருக்க வேண்டும்.வெளிவந்த ஆண்டோ வெளியீட்டு முகவரியோ காணப்படவில்லை.

பாட்டுத் திறத்தாலே - நெல்லை க.பேரன், ஏட்டில் இருந்து - காசி ஆனந்தன் , பாதியிரா வேளையில் - புதுவை இரத்தினதுரை , போன்ற கவிதைகளும் ,உறங்கிவிட்டன - சி.கைலாயநாதன் , நினைவு தந்த உறவு - பாலசிங்கம் ஆரூரன் , கன்னித் திருட்டு - சர்வசித்தன் ஆகிய சிறுகதைகளும் பதிவாகியுள்ளன.

மேலும் , இந்திராவின் முன்னோடிகள் - நவம் , ஏன் புகை குடிக்கக் கூடாது - வித்தகன் , இலக்கிய மகளிர் இதய வேட்கை - நவசோதி போன்ற பலதரப்பட்ட விடயங்களும் இனிமையூட்டுகின்றன.

கறுப்பு- வெள்ளை அட்டை.48 பக்கங்கள்.விலை 50 சதம்தான்.

ரோஜா :

மூவர்ண அட்டையுடன் தென்மாகாணம் காலி நகரிலிருந்து மலர்ந்துள்ள 'ரோஜா' இதழின் ஆசிரியர் எம்.எஸ்.எம்.மஸாஹிர்.முதலாம் இதழ். ஜனவரி - 1971. பக்க இலக்கம் இடப்படவில்லை.

அரசியல்வாதிகள் , எழுத்தாளர்கள் பலர் இதற்கு ஆசியுரைகள், வாழ்த்துரைகள் வழ்கியுள்ளனர்.

பிரபல எழுத்தாளர் எச்.எம்.பி.முஹிதீன் வழங்கியுள்ள ஆசிச் செய்தியில் 'ஈழம் நம் தாயகம்.நாம் பிறந்த பெரும் பூமி.தேசாபிமானம் இளம் உள்ளங்களில் பாய்ச்சப்பட வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஈழத்தவரால் நடாத்தப்படும் பத்திரிகைகளால் மாத்திரமே இந்தப் பேருணர்வை நம் சந்ததிகளின் நாளங்களிலும் நரம்புகளிலும் பாய்ச்ச முடியும்.இன்றைய கட்டத்தில் நமது இலக்கிய ஓட்டத்திற்கு இது ஜீவநாடியாக அமைந்துள்ளது.' என்று குறிப்பிட்டுள்ளார்.

'தென்றல்' என்ற நாடக உருப்படியும் 'வாடா மலர் ' என்ற சிறுகதையும் மாத்திரமே இவ்விதழில் இடம் பெற்றுள்ளன.இரண்டுமே ஆசிரியருடையவைதான்.

44 பக்கங்கள். விலை 40 சதம்.



விடிவெள்ளி :

புத்தளம் விடிவெள்ளிகள் வெளியீடாக ‘கலை வெள்ளம் பாயட்டும் புது வெள்ளி பூக்கட்டும்’ என்ற வாசகத்துடன் ‘விடிவெள்ளி ‘ முதலாம் இதழ் அட்டையில் சிவப்பு நட்சத்திரம் ஒன்றுடன் வெளிவந்துள்ளது.வெளியீட்டுக் காலமோ பக்க இலக்கங்களோ குறிபக்கப்படவில்லை. இது ஒரு கவிதை இதழ் என்பது குறிப்பிடத்தக்கது.

‘கடல் கடந்த கவிமலர்கள்’ என்று ஒரு பக்கம் ஒதுக்கப்பட்டு அதில் , மீரா , அரங்கநாதன் , நீலவண்ணன் , கலையரசு , தமிழன்பன் , போன்ற மானுடம் பாடிகளின் கவிதைகள் சேர்க்கப்பட்டுள்ளன.மற்றும்ஜவாத் மரைக்கார் , மு.பசீர் , ஈழத்து நூன் , தில்லையடிச் செல்வன், நா.தர்மலிங்கம் , முருகபூபதி உள்ளிட்ட27 கவிஞர்களின் கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

பன்னிரு பக்கங்கள் .விலை குறிக்கப்படவில்லை.

கிறுக்கன் :

நகைச்சுவை மாத இதழான ‘ கிறுக்கன்’ முதல் இதழ் யாழ்ப்பாணத்தில் இருந்து1972- பெப்ரவரியில் மலர்ந்துள்ளது.ஆசிரியர் டி.ஸ்ரீஸ்கந்தராஜா.அட்டைப் படக் கவிதை , ரஜனி மணாளனின்- என்னை நீ ஏமாற்றாதே , சிரிகதை , ஒரு காதலனுன் ஏக்கம் - என்ற கவிதை , இனியவனின் ஒரு இலட்சிய புருஷனின் வீர வரலாறாக கலியுக விரதம் , முதலான விடயதானங்கள் இடம் பெற்றுள்ளன.நகைச்சுவைத் துணுக்குகள் நிறையவே இருக்கின்றன.

12 பக்கங்கள்.விலை 35 சதம்.

குறைநிறைகளைக் கொண்டிருந்த போதிலும் இந்த முயற்சியைப் புறம் தள்ளிவிட முடியாது.அது எமது தமிழ் இலக்கிய வரலாற்றைக் கண்டுகொள்ள மறுப்பதாக அமையும்.

பல்வேறு சஞ்சிகைகள்,

நிறுவனங்கள் , சிற்றிதழ் சங்கங்கள் எடுக்கும் முயற்சிகளால் தேடப்படும் சிறுசஞ்சிகைகள் தொகுக்கப்பட வேண்டும்.கால வரிசைப்படுத்தப்பட்ட பட்டியலாக்கம் காலத்தின் கட்டாய தேவையாகும்.(இலங்கைத் தாயகத்தை மனங்கொண்டே இவ்வாறு தெரிவிக்கிறேன்.)



சிற்றிதழ் சார்ந்த கூற்றுகள்”

முனைவர் செ. சு. நா.சந்திரசேகரன், திருநின்றவூர்

சிற்றிதழ் என்பதைச் சிறுபத்திரிகைகள் என்றும், சீரிதழ் என்றும் பெயரிட்டு வழங்குகின்றனர். இருப்பினும் இன்று ‘சிற்றிதழ்’ எனும் சொல்லாட்சியைப் பெரும்பான்மையான இதழாளர்கள் பயன்படுத்துகின்றனர். சிற்றிதழ் என்பதற்கான பொருளைத் தரும் பொழுது பொள்ளாச்சிநசன், “நடக்கின்ற நிகழ்வுகளைக் கவனித்து அடக்கு முறைக்காகக் கொதித்து எழுந்து மொழி, கலை, கலாச்சார வளர்ச்சிக்காகச் சிந்தித்து, உள்ளிருந்து எழுகிற உணர்வுகளை ஏதாவது ஒரு இலக்கிய வடிவ (கதை-கவிதை-நாடகம்) வழிப் பகிர்ந்து கொள்ள அச்சாக்கி, சுற்றுக்கு விடப்படும் பதிவுகளையே –பத்திரிகைகளையே ‘சிற்றிதழ்கள்’ எனலாம்”1 என்பர்.

“படைப்பிலக்கியத்தை நோக்கமாகக் கொண்டவையும், பிற கலைகளுக்கும் இடமளிப்பவையுமான வணிக நோக்கமில்லாத கலை இலக்கிய இதழ்களையே சிற்றிதழ்கள் என அழைக்கலாம்”2 எனச் சிற்றிதழ்களின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு பெயரமைந்த நிலையை விளக்குவார் பெருமாள் முருகன்.

சிற்றிதழ்கள் தமிழ்ச்சூழலில் மிகப் பெரிய மாற்றத்தையும், வளர்ச்சியினையும் ஏற்படுத்துகின்றவைகளாக அமைந்திருக்கின்றன. ‘சிற்றிதழ்’ என்பதற்குத் தமிழ் விக்கிபிடியா பொருள் தரும்பொழுது, “சிற்றிதழ் என்பது தீவிரமான உள்ளடக்கத்துடன் ஒரு குறிப்பிட்ட வாசகர்களைச் சென்றடையும் இதழ் ஆகும்”3 என்கிறது. சிற்றிதழ்களுக்கு என்று ஒரு கொள்கை உண்டு அது தமிழைச் சரியான பாதையில், சரியான எல்லைக்குக் கொண்டு செல்வது. வாசகரை, வாசகரின் இரசனையை, வாசகரின் படைப்பாற்றலை உயர்ந்த இடத்திற்கு அழைத்துச் சென்று அமர வைப்பது என்பதாகச் சிற்றிதழ்கள் செயல்படுகின்றன.

இலங்கை அறிஞர் கா.சிவத்தம்பி சிற்றிதழ்களின் தன்மையினைப் பின்வருமாறு விளக்குவது இங்கு எண்ணத்தக்கதாகும். “இலக்கியச் சிற்றிதழ்கள் இலக்கியத்தில் ஆர்வம் கொண்டவர்களுக்குப் பிரதான தொடர்புச்சாதனமாகும். இதனுள் படைப்பியல் அம்சங்களும் (ஆக்கங்கள்) விமர்சனவியல் அம்சங்களும் இடம்பெறும். தமிழ் இலக்கியச் சிற்றிதழ் வளர்ச்சியை நோக்கும் போது, அது. பிரதானமாக நவீன இலக்கியம் பற்றியதாகவும் அந்த இலக்கியத்தில் ஆர்வம் கொண்ட படைப்பிலக்கிய கர்த்தர்கள் விமரிசகர்கள், வாசகர்கள் சம்பந்தப்பட்டதாகவும் அமைவதைக் காணலாம்”4 இக்கருத்தின் மூலம் சிற்றிதழ்களின் படைப்பு முயற்சிகள் காலத்திற்கேற்ப புதுமையாக்கப்படுகின்றன என்பதை அறிய முடிகிறது.

முதுபெரும் எழுத்தாளர் வல்லிக்கண்ணன் சிற்றிதழ்களின் போக்குகள், வணிக இதழ்களுக்கு மாறாக அமைந்திருக்கும் முறையைக் கூறும் பொழுது, “ஜனரஞ்சகமாக, அதிக விநியோகம் உள்ள, பெரிய முதலீட்டுடன் பெரும் அளவில் நடத்தப்படுகிற, வியாபார ரீதியான பத்திரிகைகளுக்கு முற்றிலும் மாறானவை சிறுபத்திரிகைகள் ‘டுவைவடந ஆயபயணிநௌ’ எனும் ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கம் தான் இது. சிறுபத்திரிகைகள் லட்சியப் பிடிப்பும் கொள்கையில் உறுதியும், சோதனை முயற்சிகளில் ஈடுபாடும், புதுமைகளை வரவேற்பதிலும் வளர்ப்பதிலும் உற்சாகமும், புதிய திறமைகளைக் கண்டு ஊக்கம் தருகிற போக்கும் கொள்பவை”5 என்று கூறுவர். வணிக நோக்குடைய இதழ்கள் எவ்விதமான இலக்கிய வளர்ச்சிக்கும் உதவாதவையாகவும், பழமையினைக் காத்து, புதுமைகளை ஏற்காதவையாகவும், இளம் எழுத்தாளர்களுக்கு வாய்ப்பளிக்காதவையாகவும் அமைந்திருக்கின்றன. அவை, முழுக்க முழுக்க வணிக நோக்குடையவை. அவ்வகை மக்கள் தரப்பினரையும் திருப்திப்படுத்தக் கூடிய வகையிலேயே தங்கள் இதழ்களை வடிவமைக்கின்றனர் என்ற நிலைப்பாட்டை பல அறிஞர்களும் பதிவு செய்துள்ளனர்.

சிற்றிதழ்கள் வணிக இதழ்களுக்கு மாறாக அமைந்திருப்பதை, “வணிக இதழ்கள் அனைத்தும் வாசகனின் பையைக் குறிவைத்து பல்லிளித்தும் கையேந்தியும் குட்டிக்கரணம் போட்டும் தாயத்து விற்றும் தரகு நடத்தியும், கிச்சுக் கிச்சு மூட்டியும் பாம்புக்கும் கீரிக்கும் சண்டை நிகழ்த்தியும் எத்துவாளிப் பிழைப்பு நடத்துகையில், தமிழில் சிறுபத்திரிகைகள் தாம் தமிழனின் சிந்தனைத் தளத்தை உயர்த்த குறிவைத்து இயங்கின”6 என நாஞ்சில்நாடன் விளக்குகிறார்.

வணிக இதழ்கள் பலதரப்பு மக்களையும் திருப்திப்படுத்தி, அவர்களுக்குத் தேவையான செய்தி, பொழுது போக்கு அம்சங்கள், கவர்ச்சிப் படங்கள், அரசியல் என இலக்கியத்திற்கு அப்பாற்பட்டவற்றிலேயே கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலையில் அவை உள்ளன. இவ்வாறு வெளிவரும் இதழ்கள் அதிக அளவு இலாபத்தைக் கருத்தில் கொண்டு, விளம்பரங்களை வெளியிடுகின்றன. இச்சூழலில் வெளிவரும் வணிக இதழ்களின் போக்குகள் பற்றி வல்லிக்கண்ணன் கூறும்பொழுது, “வாசகர்களின் தரம் உயராமல் இருந்தால் தான், பத்திரிகையாளர்களின் மலிவான, தரம் குறைந்த, உற்பத்திச் சரக்குகள் எளிதில் விலையாகிக் கொண்டிருக்கும். வாசகர்களின் அறிவும் சிந்தனையும் ரசனையும் ஈடுபாடும் புதியனவற்றை – நல்லவனவற்றை – உயர்ந்து சிறந்தனவற்றை அறிந்து கொள்ள வேண்டும் எனும் ஆர்வமும் வளர்ந்து விடுமானால் பணஅதிபர்களின் ஆசைகள் பாதிக்கப்பட்டு விடும். இதனாலேயே பத்திரிகை நடத்துகிற பண அதிபர்கள் மக்களுக்குப் பிடிக்கிற – மக்கள் விரும்புகிற – சுவையான ரசம் நிறைந்த விஷயங்களையே நாங்கள் கொடுக்கின்றோம் என்று கூறிக் கொண்டு தங்களது வக்கிர ருசிகளையும், கோணல்தனங்களையும் கோளாறான நோக்குகளையும் கதைகள், கட்டுரைகள், செய்திகள், சித்திரங்கள் அனைத்திலும் திறமையாகப் புகுத்தி நாட்டு மக்களின் ரசனையையும் பண்பாட்டையும் அறிவையும் சிந்தனைத் திறனையும் மழுங்கி கொண்டிருக்கிறார்கள்”7 என ஆதங்கப்படுவார். இவ்வாறே வணிக இதழ்களின் போக்குகள் தமிழ்ச் சூழலில் காணப்படுகின்றன.

அடிக்குறிப்புகள்:

1. பொள்ளாச்சி நசன், ‘சிற்றிதழ்கள்’, ப.126
2. பெருமாள் முருகன், ‘ஆய்வுக் கோவை -89’, ப.618
3. www.ta.wikipedia.org.. பார்வை நாள்: 2.6.13
4. கா. சிவத்தம்பி, ஆளுமைநூல்: ‘தமிழில் இதழியல்’, ப.543
5. வல்லிக்கண்ணன், ‘தமிழில் சிறுபத்திரிகைகள், ப.11
6. நாஞ்சில் நாடன், ‘;தமிழில் சிறுபத்திரிகைகள்’, ப.112
7. வல்லிக் கண்ணன், ‘முற்போக்கு இலக்கியத்திறன்’, ப.52

1920–1930 வரையிலான தமிழ்ச்சிற்றிதழ்கள்

பாரதிசந்திரன்

சிற்றிதழ்கள் தமிழ்ச்சமூகத்தில் மிகப் பெரும்பான்மையான இலக்கிய முன்னேற்றத்தை அளித்து மொழிக்கு வளம் சேர்த்தன எனலாம்., காலந்தோறும் உலகின் ஏதோ ஒரு மூலையில் அதன் சீரிய முயற்ச்சியில் படைப்பாளர்களால் இலக்கிய இதழ்களாகவும், உணர்வு வெளிப்பாட்டு இதழ்களாகவும் வெளிவருகின்றன. அவ்வகையில் இவற்றைத் தொகுப்பதும், பதிவு செய்வதும் காலத்தின் அரியதொரு முயற்சியாகும்.

இம்முயற்சியைத் தொடர்ந்து ஆய்வு செய்கிறபொழுது, மறைந்து போகக்கூடிய நிலையில் உள்ள தமிழ் சார்ந்த சிற்றிதழ்கள் பாதுகாக்கப்பட்டும், தமிழுக்கு இந்தச் சிற்றிதழ்கள் செய்திருக்கிற மாபெரும் பணியையும், எதிர்காலச் சமூகத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். அசாத்தியமான பல முன்மாதிரிகளை இலக்கியத்தில் சிற்றிதழ்கள் செய்து பார்த்து இருக்கின்றன. மேலும், தமிழின் உயரத்தை உலகளாவிய அளவில் மேம்படுத்தவும் பாடுபட்டு இருக்கின்றன.

அவ்வகையில் 1920 களிலிருந்து 1930 வரையிலும் தமிழ் இலக்கிய உலகில் குறிப்பிடத் தக்க சிற்றிதழ்கள் பெரும் பணியினைச் செய்திருக்கின்றன. அவற்றைக் குறித்து இக்கட்டுரையில் குறிப்புகளாகக் காணலாம்.

‘ஒற்றுமை’ *-மாத இதழ் சென்னையிலிருந்து வெளிவந்தது. ஆசிரியர் வீரபாகு ஆவார். இந்த இதழில் இலக்கியக் கட்டுரைகள் அதிகமாக எழுதப்பட்டு வெளிவந்துள்ளன*

‘சகலகலாவல்லி’ *- மாத இதழ், தமிழ்நாட்டின் உசிலம்பட்டியிலிருந்து வெளிவந்திருக்கின்றது. ஆசிரியர் ராமகிருஷ்ணன் ஆவார்.*

'மதிபூரணி' -திருவள்ளூர் என்ற நகரிலிருந்து வெளிவந்துள்ளது. ஆசிரியர் எம். கே. ராஜம் அய்யங்கார். இவ்விதழில் நாடகம், நாவல், கதை, கட்டுரை இவைகள் சார்ந்த பல முன்னெடுப்புகள் எடுக்கப்பட்டுள்ளன.

'சித்தர் திருஉளம்'- சென்னையிலிருந்து வெளிவந்தது. பரஞ்சோதி என்னும் ஆசிரியர் இவ்விதழை நடத்தினார். சித்த வைத்தியக் குறிப்புக்கள், வைத்திய முறைகள் போன்றவைகள் கட்டுரைகளாக இந்தச் சிற்றிதழில் வெளியிடப்பட்டன.

வித்யாபிமானி -சென்னையிலிருந்து வெளிவந்தது இந்த இதழ். தத்துவார்த்தமான பல ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், சீர்திருத்தக் கருத்துக்களையும் உள்ளடக்கியதாக இருந்தது. இதனுடைய ஆசிரியர் பி. ஆர். சுந்தர ராஜு அய்யர் ஆவார்.

மனோரஞ்சனி -இதனுடைய ஆசிரியர் வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார். இது நாவல் குறித்தான இதழாக இருந்தது. நாவல்களை இதழ்களில் வெளியிட்ட முதல் இதழாகும். நீண்ட கதைகள் 64 பக்கங்களில் வெளியிடப்பட்டன.

வைசியரத்தினம் -சேலம் நகரிலிருந்து வெளிவந்தது. என்.ஏ.கே.சுப்பிரமணிய செட்டியார் ஆசிரியராக இருந்து இவ்விதழை நடத்தினார். ஆயிர வைசிய சமூக மேம்பாட்டின் ஒரு பகுதியாக இவ்விதழ் வெளியிடப்பட்டது.

வித்தியாபோதினி -மதுரையில் இருந்து வெளிவந்த மிகச்சிறந்த இதழாகும். விவசாயம், வணிகம், தொழில், கூட்டுறவு, மருத்துவம், அறிவு சார்ந்த பல தகவல்களைக் கொண்டு வெளிவந்தது. பல்துறை சாதனைகள் செய்த நபர்கள் குறித்தும் கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

ஆனந்த சாகரம் -இலங்கைப் பகுதியிலிருந்து வெளிவந்த மிகச்சிறந்த ஒரு சிற்றிதழ். பல்துறை சார்ந்த கட்டுரைகளைத் தாங்கி வந்த ஒரு இதழாகும்.1921 ஆம் ஆண்டு முதல் வெளிவந்துள்ளது.

கதாரஞ்சனி - கடலூர் திருப்பாதிரிப்புலியூர் என்ற நகரிலிருந்து இவ்விதழ் வெளியிடப்பட்டுள்ளது. தமிழ் நாவல்கள் குறித்தான பல்வேறு விமர்சனங்களும், சிறப்பான நாவல்களும் வெளிவந்துள்ளன.

குமரன் -செட்டிநாட்டுப் பகுதியான காரைக்குடி எனும் ஊரிலிருந்து இவ்விதழ் வெளிவந்துள்ளது. ஆசிரியர் சொ.முருகப்பச்செட்டியார் ஆவார். இலக்கியம் சார்ந்த பல திறனாய்வுக் கட்டுரைகள் வெளியிடப்பட்டன.

தமிழபிமானி -பாளையங்கோட்டையிலிருந்து வெளிவந்திருக்கின்ற சிறப்பான இதழ். தமிழ்பூஷனம் வாசுதேவராஜ் இவ்விதழை நடத்தினார். சமயக் கருத்துக்களைத் தாங்கி வந்திருக்கின்றது இவ்விதழ்.

இந்தியத்தாய் -திருச்சியில் இருந்து வித்துவான் அமிர்தம் சுந்தர நாதம் பிள்ளை அவர்களால் கொண்டுவரப்பட்ட இதழ். புராண வரலாறுகளைத் திறனாய்வு செய்தும், கதைகளை வெளியிட்டும் இதழ் வெளிவந்துள்ளது

சத்தியவாணி சென்னையிலிருந்து வெளிவந்த இதழ். ஆசிரியர் எஸ் என் வெங்கடேசஐயர். எல்லா சமய மக்களும் ஒன்றாக வாழ வேண்டும் என்கிற சமய ஒற்றுமைக் கருத்துக்கள் இந்த இதழில் வெளியிடப்பட்டுள்ளன. மறைமலையடிகள் இந்த இதழில் நிறையக் கட்டுரைகள் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சைவபரிபாலனம் -கரூர் எனும் ஊரிலிருந்து வந்தது. இதனுடைய ஆசிரியர் கந்தசாமித் தம்பிரான் ஆவார். இந்த இதழ்மூலம் சைவ சமயக் கருத்துக்களை மக்களுக்கு எடுத்துக் கூறும் விதமாக இவ்விதழ் வெளிவந்துள்ளது.

ஞானசூரியன் திருவாரூரிலிருந்து வெளிவந்துள்ள இதழ். இவ்விதழின் ஆசிரியர் கருணையானந்த மஸ்தான் சுவாமிகள். இஸ்லாமிய சமூகத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், வேதாந்த, சித்தாந்த சர்வ சமய நெறிகள் குறித்தான கட்டுரைகளையும், செய்திகளையும் தொடர்ந்து வெளியிட்டு வந்துள்ளது இவரின் சிறப்பான தமிழ்ப் பணியாகும்.

விவேகானந்தம் -சென்னையிலிருந்து வெளிவந்த இதழ். அறிவை வளர்க்கப் பல வகையான, பல்துறை சார்ந்த கட்டுரைகளை வெளியிட்டுள்ள இதழாகும். இவ்விதழில் கட்டுரைகள், கதைகள், புதுவகையான பாடல்கள் எனப் புதுமை இலக்கியங்கள்

வெளியிடப்பட்டுள்ளன.

ஜோதிட கலாநிதி -வேலூர் நகரிலிருந்து வெளிவந்த இதழ். வேலூர் பால ஜோதிடர் வ.கு.வேலு நாயக்கர் இந்த இதழ்மூலம் காலக்கணிதக் கலையை வளர்க்க வேண்டும் என்ற நோக்கில் இந்த இதழைக் கொண்டு வந்தார். ஜோதிட கலை சார்ந்த பல செய்திகள் தொடர்ந்து இவ்விதழில் வெளியிடப்பட்டுள்ளன.

திருக்குறள் விளக்கம் - சென்னையைச் சார்ந்த சி குப்புசாமி முதலியார் இந்த இதழைக் கொண்டு வந்தார். திருக்குறளின் கருத்துக்களை மக்களிடம் எடுத்துக் கூற வேண்டும் என்ற முறையில் இவிதழ் கொண்டுவரப்பட்டுள்ளது. மிகத் தரமான இதழ் என்று பாராட்டப்பட்ட இதழாகும்.

பைந்தமிழ் –எழுத்தாளர் ஜெகதீசன் இவ்விதழைக் கொண்டு வந்தார். சென்னையிலிருந்து வெளிவந்தது. பொது அறிவு சார்ந்த பல கட்டுரைகளும், படைப்புகளும் வெளிவந்துள்ளன

மெய்கண்டார் கொழும்பு நகரிலிருந்து வெளிவந்துள்ளது. சைவ சித்தாந்தக் கருத்துக்களைப் பரப்புவதற்கான மிகச் சிறந்த இதழாக இவ்விதழ் பயன்படுத்தப்பட்டது.

ஆரோக்கிய தீபிகை -சென்னையிலிருந்து வெளிவந்த இதழ். டாக்டர் ப. ராமாராவ், டாக்டர் கிருஷ்ணாராவ் இவர்கள் இருவரும் இணைந்து கொண்டு வந்த மருத்துவம் சார்ந்த இதழ் ஆகும்.

கல்விக்கடல் -திருநின்றவூர் என்ற ஊரிலிருந்து வெளிவந்துள்ளது. ஆசிரியர் எச்.தேவதாஸ் கல்வி தொடர்பான பல்வேறு தகவல்களை இவ்விதழ்கள் மூலம் கொண்டு வந்துள்ளார்

கம்பநாடார் -காரைக்குடியிலிருந்து வெளிவந்த இதழ். கோவிந்த ஐயங்கார் என்பவர் இவ்விதழை நடத்தினார் கவித் திறத்தைக் கம்பன் புகழ் பாடும் இதழாக இவ்விதழ் அமைந்திருந்தது

கொங்குவேள் -ஈரோட்டில் இருந்து வெளிவந்துள்ளது தி.அ.முத்துசாமி கோனார் இந்த இதழ்மூலம் கொங்கு வேளாளர் மக்களின் அறிய பல தன்மைகள் குறித்தும், அவர்களின் பழக்க வழக்கங்கள் குறித்தும் இவ்விதழ் மூலமாகச் சமூகத்திற்கு வெளிப்படுத்தினார்.

குணநீதி -தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர் எனும் ஊரிலிருந்து இவ்விதழ் வெளிவந்தது. ஆசிரியர் ம.சோ.பிச்சைய தேசிகர் ஆவார். கட்டுரைகள் அதிகமான அளவிற்கு இவ்விதழில் வெளியிடப்பட்டன.

சத்தியவாதி -காங்கேயம் எனும் ஊரிலிருந்து இதழ் வெளியிடப்பட்டுள்ளது. தொழில், வாணிகம், அரசியல், கல்வி, கதைகள் எனக் கட்டுரைகள் வெளியிடப்பட்டன.

பஞ்சாமிர்தம் -சென்னையிலிருந்து வெளிவந்த மிக முக்கியமான இதழாகும். ஆ.மாதையா ஆசிரியராக இருந்து கட்டுரைகள், கதைகள், தொடர்கதைகள் எனப் பலவற்றையும் கொண்டு வந்தார்.

புதுயுகம் -சென்னையிலிருந்து வெளிவந்துள்ள மாத இதழ். ராவ் சாகிப் கனகசபைபிள்ளை என்பவர் இந்த இதழினை நடத்தினார். உதய நட்சத்திர சங்கம் என்ற அமைப்புமூலம் இவ்விதழ் நடத்தப்பட்டு வந்தது.

கிராம பஞ்சாயத்து எனும் மாத இதழ் திருச்சி நகரிலிருந்து வெளிவந்தது. இதன் ஆசிரியர் எம் எஸ் ஆர் சந்திரன் ஆவார்.

சன்மார்க்க பானு மாத இதழ். வட ஆற்காடு ராணிப்பேட்டையிலிருந்து வெளியிடப்பட்டது. இதனுடைய ஆசிரியர் பண்டித மு சீனிவாசலு நாயுடு சன்மார்க்கக் கருத்துக்களைக் கூறும் பல கட்டுரைகள் இவ்விதழில் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழர் மாத இதழ் திருச்சி நகரிலிருந்து வெளிவந்தது. இதன் ஆசிரியர் வா. கா. பஞ்சரத்தினம். தனித்தமிழ் இயக்கமாகப் பலபணிகளைச் செய்தது இந்த இதழ்.

பாலபாரதி மாத இதழ் சேரன்மாதேவியிலிருந்து வெளியிடப்பட்டுள்ளது. அதன் ஆசிரியர் வ.வே. சுப்பிரமணிய ஐயர். மிக முக்கியமான எழுத்தாளர்கள் இதில் எழுதியுள்ளனர்.

வேதவித்யாபோதினி மாதஇதழ் சென்னையிலிருந்து வெளியிடப்பட்டது இதன் ஆசிரியர் பட்டூர் சண்முக முதலியார். ஆன்மீகம் சார்ந்த பல தகவல்களும்,

கட்டுரைகளும் இவ்விதழில் வெளிவந்துள்ளன

வைஷ்ணவன் மாத இதழ் திருநெல்வேலியிலிருந்து வெளிவந்துள்ளது. ஆசிரியர் டி ஆர் பெரியநம்பியாபிள்ளை. இதழின் மூலமாக வைஷ்ணவக் கொள்கைகளான தத்துவங்கள் எளிமையாக வெளியிடப்பட்டுள்ளன.

அமிர்தகுணபோதினி - சென்னையிலிருந்து வெளிவந்துள்ளது. மருத்துவம் சார்ந்த இதழ் இதுவாகும்.

இயற்கை மாதஇதழ் காஞ்சிபுரம் நகரிலிருந்து வெளிவந்தது. இதன் ஆசிரியர் சுத்தானந்த பாரதியார். மக்கள் இயற்கை முறையில் வாழ வேண்டும் என்பதற்கான பல கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. உடல் நலம் பேணுவது சார்பான பல கட்டுரைகள் வெளியிடப்பட்டன.

உதயபாரதி -நெல்லை மாவட்டம் சேரன்மாதேவி என்ற ஊரிலிருந்து வெளிவந்தது. ஆசிரியர் ப.ராமசாமி ஐயங்கார் ஆவார். இதழில் சிறுகதைகள், அரசியல், பொருளாதாரம், விவசாயம் தொடர்பான பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

சமரசம் மாத இதழ் விழுப்புரம் பகுதியிலிருந்து வெளியிடப்பட்டுள்ளது. இவ்விதழின் ஆசிரியர் எம். வரதராஜ முதலியார் இதன் மூலம் எல்லா சமயங்களிலும் உள்ள சிறந்த கருத்துக்களை வெளியிட விரும்பினார். சமூகம் ஒற்றுமையாக இருப்பதற்குப் பல கருத்துக்களைக் கட்டுரைகளாக வெளியிட்டுள்ளது.

சுதேசபந்து மாதஇதழ் சென்னையிலிருந்து வெளிவந்தது. இதன் ஆசிரியர் ஆர்.சுப்பிரமணியஐயர். இந்த இதழினைக் காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் நடத்தி வந்துள்ளனர்.

தொழில்கல்வி மாதஇதழ் கும்பகோணம் பகுதியிலிருந்து வெளிவந்துள்ளது. ஆசிரியர் ஏ.ராமசாமி முதலியார். கட்டுரை, இலக்கியம் இவ்விதழில் சிறப்பிடம் பெற்றது.

மாருதி மாதஇதழ் திருத்தணியிலிருந்து வெளிவந்துள்ளது. சமூகம் சார்ந்த முன்னேற்றக் கருத்துக்கள் படைப்புகளாக இருந்தன.

விவேகானந்தன் மாதஇதழ் கொழும்பு நகரிலிருந்து வெளிவந்தது. இந்த இதழினைக் கொழும்பு விவேகானந்தா சபையினர் நடத்தினர். சிறந்த கட்டுரைகள் இதழில் வெளியிடப்பட்டுள்ளன

வேளாளர் மித்ரன் கோவையிலிருந்து வெளியிடப்பட்ட இதழ். ஆசிரியர் எம்.ஏ.பாலசுப்பிரமணிய முதலியார். இந்த இதழ் வேளாண்மை முன்னேற்றத்திற்கு கொண்டுவரப்பட்ட அற்புதமான இதழாகும்.

அருட்பிரகாசம் மாதஇதழ் மாயூரம் நகரிலிருந்து வெளிவந்தது. ஆசிரியர் திரு தி. கோ. வரதராஜன் ஆவார். வடலூர் வள்ளலார், ராமலிங்க அடிகளார் கொள்கைகளை மக்களிடையே பரப்ப வேண்டும் என்ற நோக்கில் இவ்விதழ் கொண்டுவரப்பட்டது.

அன்பு மாத இதழ் ரங்கோன் நகரிலிருந்து வெளிவந்துள்ளது. சாமிநாத புலவர் இந்த இதழ் நாட்டு மக்களிடையே அன்பினை பரப்ப வேண்டும் என்ற நோக்கில் அன்பின் சிறப்பைக் கொண்டு வருவதற்காக இதனை நடத்தினார்

இஸ்லாம் எனும் மாதஇதழ் சென்னையிலிருந்து வெளிவந்தது. இஸ்லாம் சமயம் சார்பாகப் பல கட்டுரைகள் இவ்விதழில் வெளியிடப்பட்டுள்ளன.

காமதேனு கோபிசெட்டிப்பாளையம் என்னும் ஊரிலிருந்து இவ்விதழ் வெளிவந்தது. நிறைய அறக்கருத்துக்கள் கட்டுரைகளாக வெளியிடப்பட்டுள்ளன.

சிவனேசன் மாத இதழ் காரைக்குடி பகுதியில் உள்ள பலவான்குடி என்ற ஊரிலிருந்து வெளிவந்துள்ளது ராமசாமி செட்டியார் இவ்விதழை நடத்தினார். சைவமும் தமிழும் தளைத்தோங்க வேண்டும் என்கிற எண்ணத்தில் இந்த இதழ் சைவ சமயத்தைப் பரப்பியது.

அனுபவ ஆசான் என்ற இதழ் ஈரோடு நகரிலிருந்து வெளிவந்தது. ஆசிரியர் டி. சங்கரலிங்கம் அவர் இந்த இதழில் கல்வி தளம் எவ்வாறு அமைய வேண்டும் என்கிற சிந்தனை கட்டுரைகளாக இதில் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்கண்ட இதழ்களைப் போலத் தமிழகத்தின் மற்றும் தமிழ் மக்கள் வாழும் பிற நாடுகளில் தமிழ் இலக்கியத்தையும், தமிழ் மக்களின் முன்னேற்றத்தையும் கருதுகோளாகக் கொண்டு தொழில் சார்ந்து, இனம் சார்ந்து அவற்றின் முன்னேற்றத்திற்கான இதழ்களாகவும் பல்வேறு விதமான இதழ்கள் வெளிவந்துள்ளன.

குறிப்பாக 1920 மற்றும் 1930 களுக்கு இடையில் மேற்கண்ட இதழ்கள் மட்டுமல்லாது இவை போன்ற பல நூறு இதழ்கள் சிற்றிதழ்களாகத் தமிழகத்தில் மற்றும் தமிழ் மக்கள் சார்ந்த பல நாடுகளில் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தச் செய்திகள் மற்றும் வரலாறு எதிர்காலச் சமூகத்திற்குப் பயனளிக்கக்கூடிய செய்திகளாகும். இவற்றை இன்னும் ஆழமாக ஆராய்ந்து இலக்கிய வரலாறாகப் பதிவு செய்யப்பட வேண்டியது மிக முக்கியமான வரலாற்று ஆவணமாகும். சிற்றிதழ்கள் பேரிதழ்கள் செய்ய வேண்டிய அரிய பணியினைக் காலத்தின் தேவை கருதிப் பதிவு செய்து வைத்துள்ளன. அவற்றை நாம் இயன்றவரைப் பாதுகாத்து, வரும் தலைமுறைக்கு விட்டுச் செல்வோம்.

சமகால சிற்றிதழ்கள் ஓர் பார்வை

நந்தவனம் சந்திரசேகரன்

படைப்புத்தளத்தில் புதிய முயற்சிகளை முன்னெடுப்பது சிற்றிதழ்கள் மட்டுமே புதிய படைப்பாளிகளின் எழுத்து முயற்சிக்கு களமாக இருப்பதும் சிற்றிதழ்களே. சிற்றிதழ்களுக்கு வணிக நோக்கம் இல்லை வரலாற்றை பதிவு செய்ய வேண்டும். மொழியையும் கலை இலக்கியத்தையும் பாதுகாத்து வளர்த்தெடுக்க வேண்டும் என்பது மட்டுமே நோக்கமாகக் கொண்டுள்ளன. சிந்திதழ்களுக்கான ஆதரவும் வரவேற்றம் குறைவாக இருந்தாலும் தமிழ் இலக்கியத்திற்கு பல சீரியப் பணிகளை செய்வது சிற்றிதழ்கள் மட்டுமே. சிற்றிதழ்களின் வாழ்நாள் குறைவாக இருந்தாலும் வரலாற்றில் நிலைத்து நிற்கும் பெரும்பணியைச் செய்து வருவதை மறக்கமுடியாது.

ஒரு சிற்றிதழ் எந்தனைக்காலம் வெளிவந்தது என்பது முக்கியமல்ல என்னென் பணிகள் செய்தது என்பதே முக்கியம் ஒவ்வொரு சிற்றதழ்களுக்கும் ஒரு தனித்த அடையாளமும் இருக்கிறது இணையை வழியில் மின்னிதழ்களின் வருகை பெறுகிற அச்ச ஊடகங்களுக்கு இது சவாலான காலம் என்றாலும் சிற்றிதழ்களின் வருகையில் எந்தத் தடையும் இல்லை. தமிழ்நாட்டில் தொடர்ந்து முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளைக் கடந்தும் பல சிற்றிதழ்கள் தொடர்ந்து வெளிவந்து கொண்டே இருக்கின்றன .

இவ்வாறாக என்பார்வைக்கு வரும் சிற்றிதழ்கள் சிலவற்றைப் பற்றி பார்போம்

முகம்...

இந்த இதழ் தமிழ்நாட்டில் சென்னையிலிருந்து 40 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கிறது. முகம் மாமணி அவர்களால் தொடங்கட் பட்டு தற்போது முனைவர் இளமாறன் ஆசிரியராக இருக்கிறார். தமிழ்மொழியின் பாதுகாப்பு, தமிழ் கலாச்சாரத்தின் முன்னெடுப்பு, மரபுக்கவிதைகளுக்கு

முக்கியத்தும் கொடுப்பது மாதம் ஒரு தமிழ் அறிஞர் பற்றிய குறிப்புகளுடன் முகப்பில் வெளியிடுவது இச்சிற்றிதழின் தனிச்சிறப்பு

கவிதை உறவு..

கவிதைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளிவரும் ஒரே இதழ் கவிதை உறவுதான் கலை மாமணி ஏர்வாடி இராதாகிருஷ்ணன் இதன் ஆசிரியாராக இருந்து வெளியிட்டு வருகிறார் மரபுக்கவிதை, புதுக்கவிதை, ஹைக்கூ கவிதை என அந்தனை கவிதை வடிவங்களும் இவ்விதழில் வெளிவருகிறது. கவிதைகள் குறித்த கட்டுரைகள் கவிதை நூல்களின் விமர்சனம் என கவிதைகளுக்கான ஒரு இயக்கமாக கவிதை உறவு வெளிவருகிறது

கல்வெட்டுபேசுகிறது..

கவிஞர் சொர்ண பாரதி சென்னை வியாசர்பாடியிலிருந்து வெளிவரும் இச்சிற்றிதழில் நவீன படைப்பிலகியம் பற்றி நிறைய கட்டுரைளும் நவீன கவிதை நூல்கள் பற்றிய விமர்சனங்களையும் நிறைய பதிவு செய்வது கல்வெட்டு பேசுகிறது இதழின் தனிச்சிறப்பு என்றே சொல்லலாம் பக்கங்கள் குறைவுஎன்றாலும் மிகக் காத்திரமான படைப்புகளைக் காணலாம்

கனவு..

தமிழகத்தின் மிக முக்கியமான எழுத்தாளர்களில் ஒருவரான சுப்ரபாரதிமணியன் 36 ஆண்டுகளாக திருப்பூரிலிருந்து வெளியிட்டு வரும் எண் வழி இதழ் இதுவரை 107 இதழ்கள் வெளிவந்துள்ளது மிகச் சிறந்த கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், மொழிபெயர்ப்புப் படைப்புகளை இவ்விதழில் நிறைய காணலாம்

புதுகைத் தென்றல்...

புதுகை தர்மராஜனை ஆசிரியராகக் கொண்டு சென்னையிலிருந்து வெளிவரும் புதுகைத்தென்றால் பல்சுவையான படைப்புகளைக் காணலாம் குறிப்பாக தமிழ் அறிஞர்கள் பற்றி சிறப்பு மலர் வெளியிடுவது இச்சிற்றிதழின் தனிச்சிறப்பு என்றே சொல்லலாம்

பயணம்...

மார்க்சிய கண்ணோட்ட கத்துவ அரசியல் இலக்கிய இதழாக விருதுநகர் மாவட்டம் மல்லாங்கிணரிலிருந்து வெளிவரும் இந்த இதழில் அரசியல் விழிப்புணர்வுக்கட்டுரைகள் நிறைய இடம்பெறுகிறது தரமான சிறுகதைகளும் கவிதைகளும் வெளிவரும் இதழாக தனித்துவமாக இருக்கிறது

புதுவை பாரதி...

புதுச்சேரியிலிருந்து நீண்ட காலமாக வெளிவரும் புதுவை பாரதியில் இலக்கியப் படைப்புகளோடு குழந்தை இலக்கியத்திற்காகவும் சில பக்கங்கள் ஒதுக்கப்படுகிறது கட்டுரைகள், நூல் விமர்சனங்கள் மரபுக்கவிதைகள் மகாகவி பாரதி பற்றிய தகவல்கள் என நிறைய தகவல்களைக் காணலாம் எடுத்தாளர் பாரதிவாணர் சிவா ஆசியராக இருக்கிறார்

சங்கு...

கடலூரிலிருந்து கவிஞர் .வவை துரையனை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் காலாண்டு இதழ் சிறுகதைகள், கவிதைகள், நூல் விமர்சனம் என படைப்பிலயக்கியத்திற்காக வெளிவருகிறது தமிழகத்தின் பல முன்னை படைப்பாளிகளின் படைப்புகளும் சங்கில் வெளிவருகிறது

தமிழ்ப்பல்லவி..

எழுத்தாளர் பல்லவ குமாரை ஆசிரியாராகக் கொண்டு கடலூர் மாவட்டம் விருத்தாசலத்திலிருந்து வெளிவரும் கலை இலக்கிய காலாண்டிதழ். சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், நேர்காணல்கள் என மிகச்சிறந்த படைப்பிலக்கிய இதழாக வெளிவருகிறது

வெல்லும் தூய தமிழ்..

பிற மொழி கலப்பின்றி தனித்தமிழ் இதழாக புதுச்சேரியிலிருந்து வெளிவருகிறது வெல்லும் தூயதமிழ்

தமிழ் மாமணி முனைவர் க.தமிழ்மல்லன் இதன் ஆசிரியராக இருக்கிறார் கட்டுரைகள், மரபுக்கதைகள், மருத்துவக் குறிப்புகளுடன் தமிழ் இலக்கணக் குறிப்புகளும் வெளியிடப்படுகிறது

நம் உரத்தசிந்தனை...

வாசகர்களின் படைப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளிவரும் இதழ்களில் முதமையாகத் திகழ்கிறது. சென்னை பெரம்பூரிலிருந்து வெளிவரும் இந்த இதழின் ஆசிரியராக உதயம்ராம் இருக்கிறார். எழுத்துக்கு மரியாதை என வாசகர்களையும், எழுத்தாளர்களையும் கொண்டாடுவது இந்த இதழின் தனிச்சிறப்பு

இறுதியாக இனிய நந்தவனம் என்ற மக்கள் மேம்பாட்டு இதழை கடந்த 26 வருடங்களாக வெளியிட்டு வருகிறேன். கலை இலக்கியம், சுயமுன்னேற்றம், என்பதோடு மாதந் தோறும் சிறப்பிதழாக வெளிவருவதே இனிய நந்தவனத்தின் தனித்துவம் தமிழ்நாட்டுல் மட்டுமல்லாமல்லாமல் சர்வதேச அளவில் இனிய நந்தவனத்திற்கு வாசகர் வட்டம் இருக்கிறது. இங்கு குறிப்பிட்ட அனைத்து இதழ்களும் தற்காலத்தில் என்பார்வைக்கு வரும் இதழ்களே

இன்னும் நிறைய சிற்றிதழ்கள் தமிழ் வளர்ச்சிக்காக அர்பணிப்புடன் பங்காற்றி வருகின்றன என்பதையும் இங்கே குறிப்பிடுகிறேன். சிற்றிதழின் பங்களிப்பானது சமூக மாற்றுத்திற்கான முன்வாசல் என்றே குறிப்பிடலாம்.

பிரான்சிலிருந்து வெளிவந்த சிற்றிதழ்கள்

சு. கருணாநிதி

இலங்கையில் வீசிய போர்ப்புயலின் அகோரத்தால் அள்ளுண்டு பூமியின் மேற்பரப்பெங்கணும் ஏதிலிகளாய் பரவுண்டு, நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். மொழி, சூழல் , காலநிலை, மக்கள், பண்பாடு, கலாச்சாரம் யாவும் புதியனவாயிருக்கும் நிலத்தில் நாம் பிடுங்கிநடப்பட்ட பயிர்களாய் வேர்விட்டு தளைத்துக்கொண்டிருக்கின்றோம். இதனூடே பட்டஅனுபவங்கள் அவலங்கள் சொல்லிலடங்கா.இவைகளின் வெளிப்படுத்தல்களாக பத்திரிகை, வானொலி, சஞ்சிகை, தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் ஆங்காங்கு வெளிவந்திருந்தன.

பிரான்சில் இவ்வகைவெளியீடுகள் பற்றிய பதிவுகள், தரவுகள், யாரிடமாவது இருக்குமென்பது கேள்வியே. இன்று நவீன தொழில்நுட்பங்களின் வருகையால் இலத்திரனியல் ஊடகவளற்சியினுள் மறக்கப்பட்டனவாகிப்போயின. அச்சிற்றிதழ்களை மீள்நினைவூட்டலும் அறியப்படுத்தலுக்குமாக ஞாபகத்திலிருந்தனவற்றையும் தேடிக்கண்டடைந்தனவற்றையும் தொகுத்து உள்ளடக்கி இப்பத்தியினை எழுதமுனைந்திருக்கின்றேன்.இதழ்கள் சில கையெழுத்துப்பிரதிகளாவும் பல தட்டச்சுசெய்யப்பட்டவைகளாகவும் போட்டோக்கொப்பி வடிவத்தில் வெளிவந்திருந்தன.

தன்னார்வலர்களாலும், தமிழர் அமைப்புகளாலும், தனியார்வலர்களாலும் வெளிக்கொணரப்பட்ட இவ்விதழ்கள் அரசியல், விமர்சன, கலையிலக்கிய, சித்தாந்த, கொள்கைக்கோட்பாட்டு தளங்களிலிருந்து முகிழ்ந்திருந்தன. மாதாந்த, இருதிங்கள், காலாண்டு, என்ற காலக்கணக்கிடை கிரமமாகவும் நினைத்தநேரத்திலுமாக வெளியாகிருந்தன.

1. **எரிமலை** *; தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவால் 1982 ம் ஆண்டிலிருந்து பலதாசாப்தங்களாக தாயக யுத்த அரசியல் விமர்சன செய்திகளைத்தாங்கி வெளிவந்திருந்தது.*

2. **செய்திமுரசு** ; திரு. உமாகாந்தன் அவர்களை ஆசிரியராக்க் கொண்டு தாயக இயக்க அரசியல் விமர்சன ஆய்வு இதழாக வெளியாகியிருந்தது.

3. **எழில்** ; எம்.அரியநாயகம் அவர்களை ஆசிரியராகக் கொண்ட கலை இலக்கிய இதழாகவிருந்தது.

4. **கண்** ; இலங்கை மகளிர் அமைப்பினரால் கொண்டுவரப் பட்ட இவ்விதழ். ஆணாதிக்கத்திற்கெதிரான கட்டுமானங்களைத்தகர்க்கும் கருத்தாங்கங்களையும் பெண்ணிலைவாத சிந்தனைகளை உள்ளடக்கமாகக் கொண்டிருந்தது.

5. **தேடல்.** ; திரு.அருந்ததி அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளியாகியிருந்த அரசியல் சமூக விமர்சன இலக்கியவிதழாகவிருந்தது.

6. **சிந்து.** ; சு.கருணாநிதி சி.உதயகுமார் காந்திநேசன் ஆகியோரின் தன்னார்வமுயற்சியில் வெளிக்கொணரப்பட்ட கலையிலக்கிய இதழாகவிருந்தது.

7. **ஓசை** ; சி.மனோ அவர்களை ஆசிரியராகக் கொண்டு இலக்கிய சஞ்சிகையாக வெளிவந்திருந்தது.

8. **பள்ளம்.** ; திரு.கலைச்செல்வனால் வெளியிடப்பட்ட அரசியல் விமர்சன இலக்கியவிதழ்.

9. **மௌனம்.** ; கி.பி.அரவிந்தன் அவர்களால் வெளியிடப்பட்ட அரசியல் த்த்துவ விமர்சன இலக்கி ஆய்வு இதழ்.

10. **சமர்.** ; இவ்விதழ் பி.இராகரனால் வெளி\யிடப்பட்ட அரசியல் இயக்க விமர்சன கருத்தாங்கங்களைத்தாங்கி வந்திருந்தது.

11. **அம்மா** ; இவ்விதழாசிரியர் சி.மனோ அவர்கள். சிறுகளையிதழாக வெளிவந்து அய்ரோப்பா எங்கணும் பலரது மனங்களிலும் இடம்பிடித்த பலசிறுகதையாளர்களை உருவாக்கிய ஊக்குவித்த சிறுகதைக்கான முதற் சஞ்சிகை.

12. **அலை** ; ஏ.யோய் அவர்களை ஆசிரியராக்க் கொண்டு வெளியான கலை இலக்கிய இதழ்.

13. **சிரித்திரு** ; பிரியாலயம் துரை பி.லோகதாசு ஆகியோரால் வெளியிடப்பட்டது. நகைச்சுவை விடயங்களை முதன்மைப்படுத்தி கலையிலக்கிய இதழ்.

14. **வண்ணை** ; திரு.வண்ணைதெய்வம் அவர்களால் நினைத்த நேரம் வந்துகொண்டிருந்த கலையிலக்கிய நகைச்சுவையிதழ்.

15. **வான்மதி** ;.ரமேசு சிவரூபனது கலையிலக்கிய அரசியல் செய்தி இதழ்.

16. **சுட்டுவிரல்** ;செய்தி பத்திரிகையாக தொடங்கி சஞ்சிகை\யாக பரிணாமம் பெற்ற இவ்விதழ் திரு. இயல்வாணணை ஆசிரியராகக்கொண்டிருந்தது.

17. **கதம்பம்** ; தமிழ்க்கலைஞர்அறக்கட்டளையினரால் வெளியிடப்பட்ட பல்சுவையிதழ்.

18. **உயிர் நிழல்** ; அச்சுப்பதிப்பு. லக்சுமி கலைச் செல்வன் ஆகியோரால் வெளிக்கொணரப்பட்ட புலத்து புகலிடத்து உலக அரசியல் விமர்சன ஆய்வு நேர்காணல்களை உள்ளடங்கிய காந்திரமான இலக்கிய இதழ்.

19. **எக்சில்** ; அச்சுப்பதிப்பு. Exil அமைப்பினரால் கொணரப்பட்ட அரசியல் விமர்சன ஆய்வு விவாத இலக்கிய இதழாகி சமூகத்தினரிடையே சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்திய பரபரப்பான சஞ்சிகை.

20. **நண்பன்** ; அச்சுப்பதிப்பு. இலக்கிய நெஞ்சம் அமீன் அவர்களை ஆசிரியராகக்கொண்டு வெளிவந்திருந்த கவிதையை முதன்மைப்படுத்தி நின்ற இலக்கிய பல்சுவை சஞ்சிகை.

21. **கம்பன்** ; கவிஞர்.கி.பாரதிதாசனை ஆசிரியராகக்கொண்டு வெளிவந்துகொண்டிருக்கும் கம்ப காவிய மரபுக்கவிதை இலக்கண இலக்கிய சஞ்சிகை.

22. **வணக்கம்** ; வி.பாசுக்கரனை ஆசிரியராகக்கொண்டு வெளிவந்த கலை இலக்கியச்செய்தியிதழ்.

23. **வடு** ; இலங்கை தலித்சமூக மேம்பாட்டு முன்னணியினரால் வெளியிடப்பட்ட சஞ்சிகை. அரசியல் சமூக ஆய்வு விமர்சன பத்திகளை உள்ளடக்கமாக்கி வெளிவந்த இதழ்.இலக்கிய சமூகப்பரப்பினுள் சிந்தனைக்கிழறலை ஏற்படுத்திய ஒருவெளியீடு.

24. முற்றம் ; டேமியன்சூரி அவர்களை ஆசிரியராகக்கொண்டு திருமறைக்கலாமன்றத்தினரால் வெளியீடு கண்டிருந்த இதழ்.இயலிசை நாடக கூத்துக்கலை சம்மந்தமான செய்தி விமர்சன வரலாறுகளை உள்ளடக்கம் கண்டிருந்தது.

25. **உடல்** ; அச்சுப்பதிவு. எம்.அரியநாயகம் அவர்களை ஆசிரியராகவும் ஐரோப்பிய தமிழக கலைஞர்களின் ஒருங்கிணைப்பிலும் வெளிவந்திருந்த இதழ்.எமது பாரம்பரியகலைவடிவங்களான அரங்க நாடக கூத்து வில்லிசை போன்றனவற்றின் தொன்மை தொடர்களையும் முதன்மைப்படுத்தி தமிழகத்தில் அச்சாகி இலங்கை தமிழகம் ஐரோப்பா எங்கணும் விநியோகங்கண்ட காலாண்டிதழ். கலைஞர்களால் மதிக்கப்பட்டதும் ஆவணப்படுத்தப்பட்டதுமான இதழ்.

26. **நிலா** ; சங்கீதா அச்சகத்தினரால் வெளியிடப்பட்ட எமக்குத்தேவையான பிரெஞ்சு செய்திகளை தகவல்களை உள்ளடக்கி வெளியான இதழ்.

27. **முகடு** ; தன்னார்வலரின் கூட்டுழைப்பில் வெளிவந்த அரசியல் கலையிலக்கிய செய்தியிதழ்.

28. **ஆட்காட்டி** ;. தன்னார்வ ஆசிரியர் குழுவினரால் வெளியிடப்பட்ட அரசியல் இலக்கிய விமர்சன சஞ்சிகை.

தமிழ் ஆரம் சிறுவர் மலர்

சுலோச்சனா அருண்

தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் கனடா நாட்டில், ரொறன்ரோவில் இருந்து வெளிவரும் 'தமிழ் ஆரம்' என்ற சிறுவர் மலர், தமிழ் மொழியை இந்த மண்ணில் தக்க வைக்க வேண்டும் என்ற சிறந்த நோக்கத்தோடு ஒரு சிறுவர் இதழாக 2001 ஆம் ஆண்டு மலர்ந்தது. அரையாண்டு மலராக இருந்த இந்த மலர் அதன் பின் காலத்தின் தேவைகருதிக் காலாண்டு மலரானது. 24 பக்கங்களைக் கொண்ட சிறிய அளவு தொகையில் வெளிவந்த இந்த இதழ், இங்கே பிறந்த பிள்ளைகள் இளையோராக மாறியபோது, சிறுவர்களுக்கும், இளையோருக்கும் ஏற்ற மலராகவும் 'தமிழ் ஆரம் மலர்' உருப்பெற்றது. நான் சிறுமியாக இருந்தபோது, தமிழ் மொழி மீது கொண்ட ஆர்வம் காரணமாக, நானும் இலவசமாகக் கிடைத்த இந்த மலர்களைத் தேடி வாசித்துப் பலனடைந்தேன் என்பதால், எம்மினத்தின் புதிய தலைமுறையினரின் தேவை கருதி இந்தக் கட்டுரையை வரைகின்றேன்.



இந்த 'தமிழ் ஆரம்' மலரின் இணை ஆசிரியர்களாகத் திரு. குரு அரவிந்தன் அவர்களும், திருமதி. மாலினி அரவிந்தன் அவர்களும் கடமையாற்றுகின்றார்கள். திருமதி மாலினி அரவிந்தன் அவர்கள் கனடாவில் இருந்து வெளிவந்த, வண்ணப் பக்கங்களைக் கொண்ட 'தூறல்' இதழின் சிறுவர் பகுதி ஆசிரியராகவும், பீல்பிரதேச கல்விச்சபை சர்வதேச மொழித்திட்ட ஆசிரியையாகவும் கடமையாற்றினார். கனடாவில் இருந்து வெளிவந்த தமிழ் பெண்களின் முதலாவது சிறுகதைத் தொகுப்பான 'நீங்காத நினைவுகள்' என்ற, சொப்கா பீல் குடும்பமன்றம் வெளியிட்ட தொகுப்பில் இவரது சிறுகதையும் இடம் பெற்றிருக்கின்றது. 'பறவைகள்' என்ற சிறுகதைத் தொகுப்பு ஒன்றையும் சமீபத்தில் இவர் வெளியிட்டிருந்தார். ஆசிரியையான இவரிடம் கல்விகற்ற பெருமையும் எனக்குண்டு.

கனடாத் தமிழ்ச் சிறுவர் இலக்கியத்தின் முன்னோடியான, சிறுகதை வித்தகன் பிரபல எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்கள் கனடாவில் இருந்து வெளிவரும் 'தமிழ்மிரர்' பத்திரிகையின் இளையோர் பகுதிக்குப் பொறுப்பாகவும், ரொறன்ரோ கல்விச்சபை சர்வதேச மொழித்திட்ட ஆசிரியராகவும் இருக்கின்றார். எழுத்துத் துறையில் இவர் பல பரிசுகளும், விருதுகளும் பெற்றிருக்கின்றார். தமிழ் ஆரம் சிறுவர் மலரின் ஆலோசகர்களாகக் கற்றறிதோர்களான மகாஜனக்கல்லூரி முன்னாள் அதிபர் திரு. பொ. கனகசபாபதி, எழுத்தாளர் திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம், பண்டிதர் திரு. மா.சே.அலெக்ஸாந்தர், கவிஞர் திரு. வி. கந்தவனம், பேராசிரியர் திரு. இ. பாலசுந்தரம் ஆகியோர் அவ்வப்போது கௌரவப் பொறுப் பேற்றிருந்தார்கள்.

முக்கியமாகச் சிறுவர்களுக்கான இந்த 'தமிழ் ஆரம்' மலரில் தமிழ் மொழி கற்கும் எல்லா வயதினருக்கும் ஏற்ற அம்சங்கள் இடம் பெற்றிருக்கின்றன. சிறுவர் பாடல்கள், சிறுவர் கதைகள், சிறுவர் நாடகங்கள், கட்டுரைகள், சொல்தேடல் பயிற்சிகள், ஐயம் தீர்க்கும் வகையில், கேள்வி – பதில்கள் போன்றவை தமிழ் மொழியைக் கற்போருக்கு ஏற்றதாகவும், பயன்படக்கூடியதாகவும் அமைந்திருப்பது பாராட்டுக் குரியது. சிறியோர் மட்டுமல்ல, இளையோருக்கும் தமிழ் மொழியின் அவசியம் கருதி, அவ்வப்போது இளையோர் எழுதிய தமிழ் கட்டுரைகளும், தேவை கருதி சில ஆங்கிலக்

கட்டுரைகளும் இந்த மலர்களில் இடம் பெற்றிருக்கின்றன. அவ்வப்போது மிக அரிதான, சிறுவர்களுக்குப் பிடித்தமான மிருகங்கள், பறவைகள் பற்றிய, குறிப்பாகக் கோலாகரடி, பெங்குவின், ஒட்டகம், கங்காரு, காண்டாமிருகம் போன்றவற்றைப் பற்றிய விபரங்கள் அடங்கிய 'தமிழ் ஆரம்' விசேட மலர்களும் சில வெளிவந்தன.

இந்த இதழ்களில் அவ்வப்போது தமிழில் வெளிவந்த சில சிறுவர் நாடகங்கள் சிறுவர்களால் தமிழில் உரையாடி மேடையேற்றப்பட்டும் இருக்கின்றன. குறிப்பாகப் 'பொங்கலோ பொங்கல்,' 'தமிழா தமிழா,' 'பேராசை' போன்ற சிறுவர் நாடகங்கள் சொப்கா பீல்பிரதேச குடும்பமன்ற அங்கத்தவர்களாலும், பீல்பிரதேச கல்விச்சபை மாணவர்களாலும், வாட்டலூ தமிழ்ச் சங்க சிறுவர்களாலும் மேடையேற்றப்பட்டுப் பாராட்டுக்களையும் பெற்றிருக்கின்றன. புலம்பெயர்ந்த மண்ணில் பிறந்து வளர்ந்த பிள்ளைகள் இந்த நாடகங்களில் தமிழில் பேசி நடித்ததால், பலராலும் பாராட்டப் பட்டிருந்தனர்.

இதுமட்டுமல்ல, இந்த இதழ்களில் வெளிவந்த குரு அரவிந்தனின் சிறுவர் பாடல்களில் சில, முல்லையூர் திரு. பாஸ்கரன் அவர்களின் இசையோடு ஒலிவடிவம் பெற்று குறுந்தட்டுக்களில் இடம் பிடித்திருக்கின்றன. சில பாடல்கள் கனடிய வானொலிகளில் இப்பொழுதும் ஒலிபரப்பாகின்றன. சில பாடல்கள் ஒளிப்பதிவுக் கலைஞர் திரு. நேருவின் படப்பிடிப்பில் அழகாகக் காட்சிப்படுத்தப்பட்டு காணொளித் தட்டுகளாகவும் வெளிவந்திருக்கின்றன.

குறிப்பாக, இந்த இதழ்களில் வெளிவந்த சில பாடல்கள் ரொறன்ரோ மற்றும் பீல்கல்விச்சபைகளின் தமிழ் வகுப்புகளில் ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன. இந்தப் பாடல்களில் சில பதிவுகள், திண்ணை போன்ற மின் இதழ்களிலும் இடம் பெற்றிருக்கின்றன'. சிறுவர்களுக்கான பாடல் போட்டிகளின் போது, இந்தப் பாடல்களும் இடம் பெறுகின்றன. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வெளியிட்ட குழந்தைப் பாடல்கள் நூலிலும் சில பாடல்கள் இடம் பிடித்திருக்கின்றன. சில பாடல்கள் காட்சி வடிவம் பெற்றுக் காணொளிகளாகக் ஒளித்தட்டுகளிலும் இடம் பெற்றிருப்பதால், சிறுவர், சிறுமிகள் மிகவும் ஆர்வத்தோடு இந்தப் பாடல்களைக் கற்றுக் கொள்கிறார்கள்.

முக்கியமாக அதிகமான பிள்ளைகள் பாடமாக்கி வைத்திருக்கும் 'குவா குவா வாத்து', 'ஞாயிறு திங்கள் செவ்வாய்', 'தை பிறந்தால் வழிபிறக்கும் பொங்லோ பொங்கல்', 'காலை நேரம் மெல்ல அணைத்து என்னை எழுப்பும் அம்மா', 'எங்க வீட்டுத் தோட்டத்துச் சின்னச் சின்னச் செடிகளில் காலை நேரம் மலர்ந்திடும் வண்ண வண்ணப் பூக்களாம்' 'தாய் மொழியாம் தமிழ் மொழி' போன்ற சில பாடல்களைக் குறிப்பிடலாம். இது போன்ற ஒவ்வொரு பாடலையும்; பாடமாக்கும் போது, சுமார் அறுபதுக்கும் மேற்பட்ட புதிய தமிழ்ச் சொற்களைச் சிறுவர், சிறுமியர் அறிந்து கொள்வதன் மூலம் அவர்களின் தமிழ் மொழி ஆளுமையும் விருத்தி அடைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

'தமிழ் ஆரம்' சிறுவர் மலரில் இன்னுமொரு முக்கியமான பகுதி சொல்தேடல். சிறுவர்கள் பொழுது போக்காகச் சொல்தேடுவதற்கு ஏற்ற வகையில் தைப்பொங்கல், வருடப்பிறப்பு போன்ற தமிழ் பண்டிகைத் தினங்களில் பாவிக்கும் சொற்கள், தமிழ் இலக்கிய, இலக்கண நூல்களின் பெயர்கள், தமிழ் சான்றோர்களின் பெயர்கள், தமிழ் ஊர்களின் பெயர்கள், தமிழ் படங்களின் பெயர்கள், தமிழ் மாதங்கள், கிழமைகளின் பெயர்கள், குடும்ப உறவுகளின் பெயர்கள், காய்கறிகள், பழங்களின் பெயர்கள், மிருகங்கள் பறவைகளின் பெயர்கள் என்று தமிழ் மொழி விருத்திக்கு ஏற்றவாறு இச்சொல் தேடல் பகுதி அமைந்திருப்பதால், மாணவர்கள் இப்பயிற்சியைச் செய்வதன் மூலம் இலகுவாகப் பல தமிழ்ச் சொற்களை அறிந்து கொள்ள முடிகின்றது.

கனடா நாட்டிற்குத் தமிழ் மக்கள் புலம் பெயர்ந்த தொடக்கத்தில், இந்த மண்ணில் எங்கள் தமிழ் மொழியைத் தக்க வைக்க வேண்டும் என்ற இலட்சியத்தோடு பலரும் செயற்பட்டார்கள். ஆனால் காலப்போக்கில் தமிழ் உணர்வாளர்கள் பல்வேறு காரணங்களால் திசை திருப்பப்பட்டு விட்டார்கள். 1990 களில் தமிழ் மொழி கற்பதற்கான கல்விச் சாதனங்கள் இந்த மண்ணில் பெரிதாக இருக்கவில்லை. அதனால் அக்காலகட்டத்தில் சிறுவர்களுக்காகச் சில பக்கங்களை ஒதுக்கித் தமிழ் வளர்ப்பதில் ஆர்வம் காட்டிய அனேகமான கனடிய தமிழ் பத்திரிகைகள், இதழ்கள் எல்லாம் இப்பொழுது சிறுவர் பகுதியைக் கைவிட்டு விட்டன.

கனடாவில் தமிழ் ஆர்வலர்கள் பலர் வயோதிபம் காரணமாக எம்மை விட்டுப் பிரிந்ததும், கோவிட் - 19 நோயின் தாக்கத்தால் மக்கள் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டதும் இதற்கு முக்கிய காரணங்களாக அமைந்திருக்கலாம் என நான் நினைக்கின்றேன். ஏனெனில் 'தமிழ் ஆரம்' இதழும் கோவிட் - 19 காரணமாக, வெளிவருவது தற்காலிகமாகத் தடைப்பட்டிருக்கின்றது. எங்கள் தமிழ் மொழி புலம்பெயர்ந்த மண்ணில் நிலைத்து நிற்க வேண்டும் என்றால், 'இளமையில் கல்' என்பதை நினைவில் கொண்டு, இது போன்ற சிறுவர் மலர்கள் மீண்டும் வெளிவர வேண்டும் என்பதே தமிழ் ஆர்வலர்களின் விருப்பமாகும். இன்று இளையோராகிய நாங்கள், தாய்மொழியான தமிழ் மொழி அறிவை விருத்தி செய்ய முடிந்ததற்கு, தமிழ் ஆரம் போன்ற சிறுவர் இதழ்களும் முக்கிய காரணமாக அமைந்திருந்ததை மறுக்க முடியாது. புலம்பெயர்ந்த மண்ணில் தமிழ் மொழி நிலைத்து நிற்க, எமது தமிழ் சமூகத்தின் வளர்ச்சிக்காக நல்லதையே நினைப்போம், நல்லதைச் செய்வோர்க்குக் கைகொடுப்போம்! வாழ்க தமிழ்!! வளர்க தமிழ்!!!

தூவலுடன் தொடர்வோம்

கவிஞர் மாலதி இராமலிங்கம்,
புதுச்சேரி.

அறிவியல் வளர்ச்சியினாலும் தொழில்நுட்பங்களின் நுண்ணியத்தின் அளவு கூடியதினாலும் நம்முடைய வாழ்க்கை முறை எவ்வளவோ மாற்றங்களைக் கடந்து கொண்டே செல்கிறது. இதில் மொழியை, எழுத்துக்களை, எழுத்தாக்கங்களை, கலையை, சமூகச் சிந்தனைகளை எனப் பல்வேறு வகையில் கையிலெடுத்துச் சமூகத்திற்காகப் பங்களித்துக் கொண்டிருக்கும் எழுத்துலகின் நெடும் பரப்பிலிருந்து ஓரளவு தூரங்களை இந்த தூவலின் வழியே தொடர்வோம். அந்த வழியில் காற்றுவெளியுடன், வாசகர்களுடன் இணைவதில் மகிழ்வுறுகிறேன்.

காகிதத்துடனும், கறுப்பு மையுடனும், கண்ணானத் தமிழ் மொழியுடனும், மெய்வருத்தம் பாரா உழைப்புடனும், வாழ்வின் ஒரு முக்கியத் தேவையானப் பொருளையும் கருதாது, படைப்பாளர்களுக்கும், வாசகர்களுக்கும் இடையே உறவுப் பாலமாகவும், உணர்வுப் பாலமாகவும் தன்னை நிறுத்திக் கொள்கிற சிற்றிதழ்கள் பற்றியப் பார்வையைப் பகிர்வதே இந்த ஆய்வு கட்டுரையின் நோக்கமாகும்.

பேரிதழ்கள் எத்தனையோ வணிக வழியில் தங்களை நிறுத்திக் கொண்டாலும் கொள்கை, கோட்பாடு, வரையறை, நெறிமுறை என்று சிற்றிதழ்கள் அன்றிலிருந்து இன்று வரை தனக்கென்று படைப்பாளர்களையும் வாசகர்களையும் கொண்டு தனித்துவமாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. எழுத்துக்களுடன் இணைந்து மகிழும் படைப்பாளர்கள் பலரை பெயர் அறியாத நிலையில் இருந்து பெயர் எடுக்கும் வகையில் ஒரு பயிற்சிப் பட்டறையாக, அவர்களை வைரமாக்க, பட்டை தீட்டும் மற்றொரு வைரமாகவே, வரமாகவே இருப்பவை சிற்றிதழ்கள் என்பது மிகையே இல்லை.

கட்டுரை, கருத்துரை, விமர்சனம், திறனாய்வுத் துறை, ஆய்வு, விவாதம், நேர்காணல், செய்யுள், கவிதை, உரைவீச்சு, சிறுகதை, தொடர்கதை, கேள்வி - பதில், துணுக்குகள், நகைச்சுவை, சித்திரக் கதை, ஓவியம், செய்திகள், போட்டிகள் எனப் பலவிதமான வேறுபட்ட ஆக்கங்களைத் தாங்கிக் குறிப்பிட்ட வாசகர்களைச் சென்றடையும் இதழே சிற்றிதழ் எனப் பெயர் கொண்டு வெளி வருகிறது.

இன்று அலைபேசியிலேயே மின்னிதழாகத் தொடங்கி வெளிவருவதற்கு இருக்கும் வசதிகளைப் போல சிற்றிதழ்களின் தொடக்க காலம் என்பது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. பல்வேறு வழிகளில் சிரமமே. அச்சகமும், அஞ்சலகமும் என சிற்றிதழ்கள் கடந்த தூரங்களும், இதழாசிரியர்களின் துவளாத உழைப்பும் அதிகம். தற்போது இருக்கும் அச்சு வடிவத்திற்கு முன்பு வேறு விதமான அச்சுமுறைகளும் இருந்தன.

இத்தகைய சிற்றிதழ்கள் புதுவையில் இருந்தும் வெளிவருகின்றன. அவற்றில் "புதுவை பாரதி" என்ற சிற்றிதழைப் பற்றி இங்கு பதிவு செய்ய விழைகிறேன். அதற்கானக் காரணங்கள் கவனிக்கத்தக்கவை. 300 வது இதழைத் தாண்டி தடம் பதித்து கொண்டிருக்கும் "புதுவை பாரதி"யின் சாதனைகள் நம்முடைய கவனத்தை ஈர்ப்பதில் சலனமே இல்லை. மேலும், மற்ற காரணங்களையும் இந்த எழுத்தாக்கத்தின் ஊடே அறியலாம்.

இதழ் தொடங்கப்பட்ட நாள் 01-10-1985. தொடக்கத்திற்கு பெரும் ஊக்கியாக இருந்த வாய்ப்பையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இதழாசிரியரின் இளமையில் தன்னுடையப் படைப்புகள் பிரபல இதழ்களில் பிரசுரம் ஆகவில்லையே என்ற ஆதங்கத்தில், அந்தப் பணியை நாமே மேற்கொண்டு இதழ் தொடங்கி நடத்தினால் என்ன என்று தன்னைத் தான் வினவிய வினாக் குறியில், இந்த இதழ் உருவாவதற்கான முற்று புள்ளி முதல் புள்ளி ஆனது.

கையெழுத்துப் பிரதியே முதல் வடிவம்! அட்டையை அலங்கரிக்க ஆசிரியரின் அழகுமிகு ஓவியம்! கைப்படி என்ற முதலுருவில் இருந்து தட்டச்சுப் பணியினால் எழுத்துக்கள் இதழ்களில் பதியத் தொடங்கின. அடுத்த நிலையில் ஆயத்த அட்டைகள் அறிமுகம்! பின்பு, நகல் இதழுக்கு நகர்ந்தவை அச்சகத்தை நோக்கி அடுத்த படியாக படையெடுத்தன. இதனுடைய வளர்ச்சி நிலைகள் இவ்வாறு இருக்க, இந்தப் படைப்பாக்கம் வாசகர்களைச் சென்றடையக் கையாண்ட வழிகளும் படிப்படியாக உயர்ந்தன. முதலில் ஒவ்வொரு வாசகரிடத்தும் சுழற்சி முறையில் என ஆரம்பித்து, பின் தனித்தனியே இதழ்களைக் கொடுத்து அதன் பிறகு அஞ்சல் வழியில் வாசகர்களின் இல்லங்களைத் தொட்டு வாசகர்களின் கரங்களில் தவழ்ந்து கொண்டிருப்பது இன்றும் தொடர்கிறது.

மேற்கண்டவை யாவும் நிதானமாக ஒவ்வொரு அங்குலமாக, அடியாக அதே சமயம் இதழை நிலைநிறுத்துவதாக இதழின் வேகமும், அத்துடன் வாசகர்களின் வட்டத்தின் ஆரத்தினையும் விரிவாக்கிக் கொண்டே மலர்ந்துக் கொண்டிருந்தது.

இதுவரை நாம் கண்ட இதழின் பல்வேறு அவதாரமும் அது ஆசிரியரிடமிருந்து ஆக்கம் படைத்தோரையும், மொழியின் மீது ஈடுபாடும், இதழின் கண் கொண்ட நேசத்தாலும் ஆர்வம் கொண்ட வாசிப்போரைச் சென்று சேர்ந்த விதங்களுமே! இனிதான் இந்த எல்லாவற்றிற்கும் பலம் சேர்த்த "புதுவை பாரதி" இதழின் உள்ளடக்கத்தைப் புரிந்துகொள்ளவும், இதன் அடித்தளமான ஆசிரியரின் அயராத உழைப்பினையும் உணரப் போகிறோம். ஏனெனில், அச்சிலிருந்து அகிலத்திற்கு ஒவ்வொரு இதழ் வெளியீட்டின் போதும் அட்டைப் படத்திலிருந்து உள்ளீடாக அறத்தைக் கொண்டு ஒரு குழவியைப் பிர(சுர)சவிக்கும் ஒரு தாயின் ஆவலும் அதனுடனே பிணைந்திருக்கும் அக்கறை கூடிய அனுபவத்தையும் கொடுக்கும் வண்ணம் இருக்கும் என்பது அனைவரும் அறிந்ததே! அதனை இனிக் காண்போம்.

ஆசிரியர்க் குழு மற்றும் தொடர்பு விபரங்கள்:

ஆசிரியர் / நிழற்படக் கலைஞர்: பாரதிவாணர் சிவா

தலைமை நிருபர்: திருமதி. இராஜேஸ்வரி சிவா, உதவி ஆசிரியர்: பாவலர் ந. ஆறுமுகம்

கைப்பேசி: 99765 96563

மின்னஞ்சல்: bharathivanarsiva@yahoo.in

முகவரி: "புதுவை பாரதி", 77, மூன்றாவது குறுக்குத் தெரு, பாரீசு நகர், மூலைக்குளம், புதுச்சேரி – 605 010.

சிற்றிதழின் பெயர்:

"புதுவை பாரதி" - இந்தியாவின் தெற்கே வங்கக் கடலோரம், அமைந்துள்ள வீதியழகுடையப் புதுச்சேரி, கலாச்சாரம், இலக்கியம், ஆன்மீகம் என எத்தனையோ விதங்களில் வளர்ச்சியையும், வரலாறுகளையும் கொண்ட மண்ணாகும். அத்தகைய சிறப்புகளைக் கொண்ட புதுவை, இந்த இதழின் பெயரில் உள்ளது. எட்டயபுரத்தில் எழுந்த பாரதியின் வாழ்க்கையில் புதுவையிலும் அவர் வாழ்ந்த காலம் குறிப்பிடத்தக்கது. புரட்சி, புதுமையெனப் பாடல்கள் வழியே பல வகைகளில் தன்னுடையப் பங்கினை நாட்டுக்கு அளித்த பாரதியின் பெயரும், இந்த இதழுக்குச் சிறப்பளிக்கிறது.

அட்டைப் பக்கங்கள்:

இதழின் அட்டையில் வெளிப்புற மற்றும் உட்புற முன், பின் பகுதி வெற்று அலங்காரமாக இல்லாமல் சிறப்பு நிகழ்வுகளையும் ஒளிப்படங்களையும் கொண்டு இந்த பல்சுவை மாத இதழ் மிளிர்கிறது. அட்டையின் முகப்பில் முதன் முதலில் ஆசிரியரின் ஓவியத்தில் பாரதியே தோன்றினார். தேசத்தின், அரசியலின், ஆன்மீகத்தின் தலைவர்கள், பிரபல மனிதர்கள், அறிவியல் விஞ்ஞானிகள், கவிஞர்கள் என முகப்பில் முன் நின்றவர்களுடன், சிற்பங்கள், ஓவியங்கள், நினைவிடங்கள், ஆன்மீகத் தலங்கள் என அந்தந்த காலகட்டத்தில் தேவையான செய்திகளுக்காக ஓவியங்கள், ஒளிப்படங்கள் இடம் பிடிக்கின்றன. இந்த இதழின் விலை ரூபாய் 10/-. இந்தப் பத்து, போதுமா? ஆச்சர்யக் குறியே எஞ்சுகிறது.

தலையங்கம்:

ஆசிரியரின் அரியாசனம்! செறிவானக் கருத்துகளில், சமூக அக்கறையைத் தூவலில் தோய்த்து எடுத்தத் தலையங்கமாக, ஆசிரியரின் பங்கு இங்கு பதிகிறது. விழிப்புணர்வினைத் தூண்டக் கூடிய தலையங்கமும் மற்றும் "கவனம் தேவை" பகுதியும் சிறப்புப் பார்வையைப் பெறுகிறது.

பாரதியாரின் படைப்புகள் ஒரு பார்வை:

இதழாசிரியர், பாரதியாரின் நூல்களைப் படித்து, உள்வாங்கி, அவற்றில் உள்ள கருத்துகள், அந்த காலத்தில் பாரதியார் எழுதியவை, இந்த காலத்திலும் எவ்வாறு பொருந்தி வருகின்றன என்பதை விளக்கி மெய்ப்பிக்கும் வண்ணம் இந்தப் பகுதியைப் படைத்துள்ளார். இதுவரை பாரதியாரின் 10 நூல்களை இதழாசிரியர் படித்து எழுதியுள்ளார் என்பது பெயரளவில் மட்டும் பாரதியை நிறுத்தாது உள்ளத்தினுள் நிறுத்துமளவிற்கு இந்தப் பகுதி இருப்பதற்கு இதழாசிரியரின் பங்கே காரணம்.

கருத்துப் படம்:

உலகத்தின், நாட்டின், அரசியல், சமூகச் சீர்கேடு, சுற்றுப்புற சூழல், கல்வியின் நிலை, எனப் பல்வேறுக் கூறுகளை படிக்காதப் பாமரனுக்கும் புரியக் கூடிய வகையில் ஓவியக் கலையின் மூலமாக எடுத்துக் கூறி விழிப்புணர்வு கொள்வதற்கு இந்தக் கருத்துப் படம் உதவுகிறது. ஒரு செய்தியும், ஓவியமும் அதற்குப் பொருத்தமான வாசகங்களுடன் சட்டென விளக்கும் இப்பகுதியின் ஓவியர் ந.மா. அருள்சோதியன் ஆவார்.

நூல் நயம் மற்றும் இதழ் அறிமுகம்

நூல்களுக்கு அறிமுகம், அவற்றின் உள்ளடக்கத்தின் சிறப்பு என நூல்களைப் படித்து படைப்பாளர்களையும், படிக்கும் வாசகர்களையும் ஊக்குவிக்க நயம் பட உரைக்கும் தொடர் பகுதி! 300 ஆவது இதழ் வரை கிட்டத்தட்ட 1700 நூல்களுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. இன்னும் நூல்கள் வந்துகொண்டு இருப்பதால், இன்னும் எத்தனையோ நூல்களை வெளிப்படுத்தக் கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன.

இதழாய்வு:

வாசகர்களும் படைப்பாளர்களும் கடந்த இதழைப் படித்து அவரவர் பார்வையின் கோணத்தில் கண்டவற்றின் கருத்துகளை, பாராட்டுதல்களை கடிதத்தின் வழியே ஆசிரியருக்கு அனுப்புகிறார்கள். பல்வேறு பகுதியிலிருந்து வாசகர்கள் அனுப்பும் கடிதங்கள் மூலம் இந்த இதழுக்கான வரவேற்பை உணரலாம். அத்துடன், இதழை மேலும் மெருகூட்ட உதவுகிறது.

சின்னஞ்சிறு மலர்:

வருங்காலத் தூண்கள் எனும் சிறுவர்களுக்கு நல்வழி காட்டும் படைப்புகள், செய்திகள், இளம் படைப்பாளர்களின் எழுத்தாக்கங்கள், ஓவியங்கள் இன்னும் பலவற்றை இங்கு சிறுவர்களின் உலகமாகத் தொடர்ந்து இச்சின்னஞ்சிறு மலரெனும் பகுதியில் படிக்கலாம். மேலும், சிறுவர்

இலக்கியங்களுக்கானப் படைப்பாளர்களையும் ஏத்துவதை இங்கு காணலாம். இதில் முத்தாய்ப்பாகப் படக் கதை. இதனை விரும்பாதோர் எந்த வயதினரிலும் இல்லையே! இதில் கதை, வசனம் ஆசிரியரின் எண்ணம். குழந்தைகளின் பாசமிகு இன்னொரு நேரு மாமாவாக ஆசிரியர் திகழ்கிறார் என்பது இங்கே உறுதிப்படுத்தப்படுகிறது.

விருது மற்றும் பாராட்டு நிகழ்வுகளின் செய்திகள்:

மற்றவர்களைப் பாராட்டுவதும், பெருமைப்படுத்துவதும், உயர்த்தி மகிழ்வதும் என "புதுவை பாரதி" இதழ் தனித்தன்மையோடு தொடர்ந்து, பெருமிதம் கொள்ளும் வகையில் செய்திகளை வெளியிடுவது ஆகச்சிறந்த மனிதத்தின் வெளிப்பாடாகும். ஒளிப்படங்களுடன் நிகழ்வின் விபரம், யார், எங்கு, எதற்கு, சிறப்புகள் என்னென்ன என்ற விபரங்கள் இங்கே பதிவு செய்யப்படுகிறது.

கவிதைப் பூங்கா:

கவிதைகளின் பலவித வகைமைகளை வற்றாதத் தமிழ் மொழியின் வளத்தை, பரிமாறும் படைப்பாளர்களை என இத்துடன் போட்டி நிகழ்வுகள், பரிசு மற்றும் அளிக்கப்பட்ட விருதுகளின் விபரங்கள் யாவையும் இந்தக் "கவிதைப் பூங்கா"வில் படித்து அறியலாம்.

இன்னும் தொடர்ந்து, பல்விதப் படைப்புகள், சிறுகதைகளின் பக்கங்கள் என இதழின் உள்ளடக்கம் நீள்கிறது.

வடிவமைப்பு:

இதழின் ஆசிரியர், ஓவியர் என்பதால் வடிவமைப்பில் இயல்பாகவே அழகு மிளிர்வதைக் காணலாம். ஒவ்வொரு பக்கத்திலும், தெளிவான, எளிமையான, விதவிதமான எழுத்துகள், வெவ்வேறு பகுதிகளில் வித்தியாசமாகக் கருத்தைக் கவருகின்றன.

சிரமங்களும் சிறப்புகளும்:

இதழ்ப்பணி என்பது சாதாரணமானது அல்ல என்பது அனைவரும் அறிந்ததே. இத்தனை ஆண்டுகளாக இடையறாது இதழினைத் தயாரித்து வெளியிடுவதற்குப் பொருள் என்பது முக்கியமானது என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனியே! இதற்கானப் பணிகளுக்காக இதழின் ஆசிரியர் நடத்தும் ஓவியப் பள்ளியிலிருந்து கிடைப்பதைக் கொண்டு நடத்திக் கொண்டு வருகிறார். தட்டச்சு, அச்சு வேலைக்காக கடந்த 37 ஆண்டுகளில் இதுவரை 12 இடங்களில் "புதுவை பாரதி"க்காக, இதழாசிரியர் படிகள் படிகளாக, ஏறி இறங்கி இவ்விதழுக்கு உயிரூட்டிக் கொண்டிருக்கிறார். அனைவராலும் மறக்கவியலா தீநுண்மிக் காலத்திலும் எத்தனையோ இடர்களுக்கு இடையில் இதழ் வந்திருந்தது.

காரைக்காலில் இருந்து இதழ்களை வாசகர்களிடம் கொண்டு சேர்த்து பணியாற்றியோர் திருமிகு. நா. மனோகர் அவர்கள் (இதழாசிரியரின் தம்பி) மற்றும் இதழாசிரியரின் நண்பர், தேசிய நல்லாசிரியர் துரை. இராமலிங்கம் அவர்கள்.

கையெழுத்துப் பிரதியிலேயே பரிசுப் போட்டிகள் துவங்கியது. ரூ. 5/-ல் தொடங்கி தற்போது ரூ. 12,000/- வரை வெற்றியாளர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இந்த இதழுக்கான அங்கீகாரமாகச் சுழற்கேடயம், பரிசுகள், பட்டயங்கள், விருதுகள் பல்வேறு இடங்களிலிருந்து கிடைத்துக் கொண்டிருப்பது பெருமைக்குரியவை ஆகும். "பாரதி" என்ற பெயரில் தொடர்ந்து இதழ்ப் பணி மேற்கொண்டதால் புதுவை இளைஞர் அமைதி மையம் சார்பில் தமிழ் மாமணி, புலவரேறு அரிமதி தென்னகனார் அவர்களால் இதழாசிரியருக்கு "பாரதிவாணர்" பட்டம் 12-03-1994ல் வழங்கப்பட்டது.

மாத இதழாக வருகையில், நகலிதழ் வடிவம் கடந்து, அச்சிதழாக மாறி வரும்போது சில காலங்கள் காலாண்டிதழாக வந்திருக்கிறது. 40 ஆண்டுகளை நெருங்கப் போகும் இந்த இதழின் விழா நிகழ்வுகளும் சமூகத்தில் உள்ள பல அரங்கங்களில் நடந்துக் கொண்டிருக்கின்றன. இவ்விதழில் இடம் பெற்ற சில தொடர் பகுதிகள் நூலாக்கம் பெற்று இதுவரை 12 நூல்கள் வெளிவந்துள்ளன என்பது குறிப்பிடத் தக்கதாகும். அவ்வப்போது தனித்துவமானச் சிறப்பிதழ்களும் வெளிவருகின்றன.

இதழாய்வுப் பகுதியின் வழியே இவ்விதழுக்குச் சிறப்பு சேர்த்தவர்களில் சிலரின் பெயர்கள்: மகாகவி பாரதியார் அவர்களின் பேத்தி, திருமிகு. லலிதா பாரதி அவர்கள், நெல்லை, திருமிகு. தி.க.சி. அவர்கள், மகாகவி பாரதியார் அவர்களின் பேரன் திருமிகு. பி. கே. சுந்தரராஜன் அவர்கள், இலக்கியத் தேனி வல்லிக்கண்ணன் அவர்கள், கப்பலோட்டிய தமிழர் வ. உ. சி. அவர்களின் பேரன் திருமிகு. வ. உ. சி. வாலேஸ்வரன் அவர்கள், எழுத்தாளர் பொன்னீலன் அவர்கள், மதிப்புறு முனைவர் லேனா தமிழ்வாணன் அவர்கள், முனைவர் தேவி நாச்சியப்பன் அவர்கள் (காரைக்குடி, குழந்தை கவிஞர் அழ வள்ளியப்பாவின் திருமகள்), பூதலூர் முத்து அவர்கள், திருமிகு. க. ப. அறவாணன் அவர்கள் - முன்னாள் துணைவேந்தர், திருமிகு. பாவண்ணன் அவர்கள், பெங்களூரு, மேலாண்மை பொன்னுசாமி அவர்கள், டாக்டர் பூவண்ணன் அவர்கள், கோவை, கவிஞர் காரை ஏ.ஏ. அலீம், பத்திரிக்கையாளர் இன்னும் பலர்.

வாசகர்களோடும், படைப்பாளிகளோடும், நல்லுறவு கொண்டு, சிற்றிதழின் மூலம் சமூகத் தொண்டினை ஆற்றிக் கொண்டிருக்கும் பாரதிவாணர் சிவா அவர்களும், அவரது இணையர் ராஜேஸ்வரி சிவா அவர்களும், இதழாசிரியரின் தந்தை (நினைவில் வாழும்) திருமிகு. சு. நாகலிங்கம் அவர்களும், மாமனார் (நினைவில் வாழும்) திருமிகு. க. நடராசன் (எ) புதுவை மீனம் அவர்களும், மற்றும் அவரது குடும்பத்தார்களும், இதழாசிரியரின் நண்பர், தேசிய நல்லாசிரியர் துரை. இராமலிங்கம் அவர்களும், உதவி ஆசிரியர் பாவலர் ந. ஆறுமுகம் அவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

சி. வி. வேலுப்பிள்ளையின் மாவலி

ஈழக்கவி

'மா வலிகளையும் தாண்டி...'
From time to time
From the highway
I shall strike
Upon my harp
And sing my song....
I sing of Lankas's
Born of
The paddy field,
The patnos
The tea
And rubber land;
Yes, the men I love

C.V.Velupillai

நாழிக்கு நாழி
வீதியில் நின்று – என்
யாழினை எடுத்து
கீதத்தை இசைப்பேன்...
ஈழத்தின் மானுடர்க்காய்
வயல் புல்வெளிகளிலும்
தேயிலை, ரப்பர்,
தோட்டங்களிலும்
பிறந்திட்ட மானுடர்க்காய்...
ஆம் நான் காதலிக்கும்
அவர்களுக்காய்...

தமிழாக்கம் : சக்தீ அ. பால ஐயா

('மாவலி' முன்அட்டை; ஆகஸ்ட் – செப்டம்பர் 2014)

ஈழத்தின் மானுடர்களுக்காய் உலகே அறிய உரத்து குரல் கொடுத்த ஒரு உன்னத கவிஞர் சி.வி. வேலுப்பிள்ளை (கண்ணப்பன் வேல்சிங்கம் வேலுப்பிள்ளை; 1914.09.14 – 1984.1119). நமது மண்ணின் துயரை (குறிப்பாக, தேயிலைத் தோட்ட துயரை, தெளிவத்தை ஜோசப் இன் வார்த்தைகளில் ('தேயிலை தேசம்' நூல் முன்னுரை; 2003: x) சொன்னால், 'மலையகத் தோட்டத்தில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் வஞ்சிக்கப்பட்ட வாழ்வினை') சர்வதேசம் அறியும் வண்ணம் ஆங்கில மொழியில் கவிதைகளாக வெளிப்படுத்தியவர். அவரது 'In Ceylon's Tea Garden' (1952) என்ற புகழ் பெற்ற ஆங்கில நெடுங்கவிதை காலத்தை வென்று நிலைத்திருக்கும் ஒரு காவியம். இதனை 'இலங்கைத் தேயிலைத் தோட்டத்திலே...' என்று சக்தீ அ. பால ஐயா 'தமிழ்' படுத்தியுள்ளார் (இதனை 'மொழி பெயர்ப்பு' என்பதைவிட 'தமிழ் பெயர்ப்பு' எனக்குறிப்பதே பொருந்தும். ஏனெனில், இது மொழி பெயர்ப்பாக அன்றி, தழுவலாகவே அமைந்துள்ளது. சக்தீ பால ஐயா உம் இதனை ஏற்றுள்ளார்). இரு தசாப்ததிற்கு முன், இக்கவிதையின் ஆறுபகுதிகள் உயர்தர தமிழ் பாடத்திட்டத்தில் சேர்க்கப் பட்டிருந்தது. 2000ஆம் ஆண்டு முதல் இக்கவிதையை நானும் தொடர்ச்சியாக கற்பித்து வந்தேன். அந்த கவிவரிகளின் 'உயிர்ப்பை' அணுஅணுவாய் அனுபவித்திருக்கிறேன். தேயிலைத் தோட்டத்தின் துயர்தோய்ந்த வாழ்வியலை இதுவரை யாரும் இத்தனை உயிரோட்டத்துடன் 'கவிதை' ஆக்கிவிட வில்லை என்பது என் அபிப்பிராயம். என் மனதை விட்டகலா கவிவரிகள் இவை:

புழுதிப் படுக்கையில்
புதைந்த என் மக்களைப்
போற்றும் இரங்கற்
புகல்மொழி இல்லை
பழுதிலா அவர்க் கோர்
கல்லறை இல்லை
பரிந்தவர் நினைவுநாள்
பகருவார் இல்லை
ஆழப் புதைந்த
தேயிலைச் செடியின்
அடியிற் புதைந்த
அப்பனின் சிதைமேல்
ஏழை மகனும்
ஏறி மிதித்து
இங்கெவர் வாழவோ
தன்னுயிர் தருவன்

(பார்க்க, 'அலை'; பங்குனி- 1985: 746)

'மாவலி' இரண்டாவது இதழில் இக்கவிதையின் தமிழ் பெயர்ப்பின் 14 பகுதிகள் மீள பிரசுரம் கண்டுள்ளது. சிவியின் இக்கவிதைப்பற்றி பேராசிரியர் சபா ஜெயராசா பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "சி.வியின் கவித்துவம் தனித்துவம் மிக்கது. கிராமிய மணமும் உலக இலக்கியப் புரிதலும் மலையக வாழ்வின் துயரங்களுடன் இணைந்த எழுச்சிச் சிறகடிப்பும் கொண்ட செலுங்கலவைப் படையலைச் சமூகத்தின் அடித்தளத்தில் வாழும் மக்களின் காலடிகளில் வைக்கும் பரவலாக அவரது கவிதைகள் அமைந்துள்ளன... எலியட்டின் ஆங்கிலக் கவிதைகளின் அழகியற் பாங்கோடு சி.வியின் கவிதைகள் ஒப்புமை கொள்ளத்தக்கவையாய் இருப்பினும் உள்ளடக்க நிலையில் அவர் இயற்கையோடு உறவாடும் மனோரதியக் கவிஞராக இருக்கவில்லை. ஒடுக்குமுறை அவலங்களும் அவற்றை விடுவிக்கும் உணர்ச்சிக் கொப்பளிப்பும் கொண்ட கவிஞராகவே அவர் விளங்கினார். சி;வியின் கவிதைப் படிமங்களை இலங்கையின் புகழ்பூத்த ஓவியராகிய மன்யுசிறி ஓவியப் படிமங்களாகிய நிலையில் 1956ஆம் ஆண்டில் இலங்கைத் தேயிலைத் தோட்டத்திலே முதற்பதிப்பு வெளிவந்தது. இரண்டாவது பதிப்பு 2007 ஆம் ஆண்டில் அந்நூல் பாக்கியா பதிப்பத்தால் வெளியிடப்பட்டது" (பார்க்க, 'மாவலி' ஆக. செப். 2014: 34).

மலையகத்தில் தலவாக்கொல்லை, மடக்கொம்பரை என்ற கிராமத்தில் பிறந்த சி.வி. வேலுப்பிள்ளை (சிவி), கொழும்பில் நாலந்தா கல்லூரியில் கற்றவர். 'மலைநாட்டு இந்திய வம்சாவளி யினர் மத்தியில், ஆங்கிலத்தில் படித்து அந்த மொழியில் கவிதை படைத்த ஒரே நபர்' என சாரல் நாடன் ('இலங்கை மலையகத் தமிழ் இலக்கிய முயற்சிகள்'; 2014:208) குறிப்பிடுகின்றார். . 1934 ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்ற ரவீந்திரநாத தாகூர் இலங்கைவந்த சமயத்தில் (1934) அவரை நேரில் சந்தித்து, தான் எழுதி வைத்திருந்த Vismadgenee (1934, விஸ்மாஜினி) என்னும் இசைநாடக நூலை அவரிடம் வழங்கி ஆசிபெற்றிருக்கிறார். தன்னுடைய ஐம்பது வருடத்திற்கும் மேற்பட்ட இலக்கிய செயற்பாட்டில், 28 ஆண்டுகள் ஆங்கிலத்திலேயே எழுதியுள்ளார். Way Ferer, Tagore at A Glance, Ananda's Dream, Born to Labour (1970, ஆங்கில நடைச்சித்திரம்; தமிழாக்கம்: மு.சிவலிங்கம்; 'தேயிலை தேசம்'; 2003), Borderland (எல்லைப்புறம்: நாவல்) முதலியன இவரது ஆங்கில எழுத்துக்களாகும். "ஆங்கிலத்தின் எழுதியதன் மூலம் துயரம் தோய்ந்த இம்மக்களின் வாழ்வை, தமிழின் எல்லைகளுக்கப்பாலும் கொண்டுசென்ற பெருமைக்குரியவர் சி.வி. என்பது ஒருபுற மிருக்க, ஆங்கிலத்தில் எழுதிய ஒரே காரணத்தால் மலையகம் அல்லாத மற்றைய இலக்கியகாரர்கள் மத்தியில் ஒரு பரவலான அறிமுகத்தையும் எழுத்தாள அந்தஸ்தையும் சி.வி. பெற்றிருந்தார். ஆனால், மலையகத்தமிழ் எழுத்து, இலக்கியத்தைப் பொறுத்தவரை ஓர் அந்நியராகவே இருந்திருக்கின்றார். அறுபதுக்குப்பின் சிலிர்த்துக் கொண்டெழுந்த மலையக இலக்கியம் கண்டு பூரித்துப்போன சி.வி. புதியவர்களுடன் தன்னைப் பரிச்சியம் செய்துகொண்டார். புதுமை இலக்கியம் என்று அதற்குப் பெயரிட்டுப்போற்றினார். தன்னுடைய எழுத்துக்கள் தமிழில் வரவேண்டிய அவசியத்தை உணர்ந்தார்" என்று மலையகத்தின் மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் தன்னுடைய 'மலையகச் சிறுகதை வரலாறு' என்னும் நூலில் பதிவுசெய்துள்ளார்.

சிவி தன்னுடைய அந்திம காலத்தில் சுயமாக தமிழிலும் எழுதத்தொடங்கினார், 'வாழ்வற்ற வாழ்வு', 'காதல் சித்திரம்', 'வீடற்றவன்', 'பார்வதி', 'இனிப்படமாட்டேன்' போன்றன இவரது நாவல்க ளாகும். இதில், 'வீடற்றவன்', 'பார்வதி', 'இனிப்படமாட்டேன்' போன்றன நேரடியாகவே சிவி தமிழில் எழுதியவை. ஏனையவை ஆங்கில மூல நாவல்கள். பொன்.கிருஸ்ணசாமி அவர்களினால் மொழி பெயர்க்கப்பட்டவை. மலையக நாட்டார் பாடல்களையும் தொகுத்து (மலைநாட்டு மக்கள் பாடல்கள் - 1963) வெளிக்கொணர்ந்துள்ளார். இந்தியாவின் ஜக்மோகன் வாச்சானி பி.லால் போன்ற பத்திரிகை ஆளுமைகளுடனும், பேராசிரியர் வி.சூரிய நாராயணன், பேராசிரியர் எஸ்.ராமகிருஸ்ணன், திருமதி.லக்ஸ்மி கிருஸ்ணமூர்த்தி போன்றோருடன் அதிகளவான கடிதப் பரிமாற்றத்தை மேற் கொண்டுள்ளார். புகழ்பெற்ற ஓவியரும் கவிஞருமான 'ஜோர்ஜ் கீற்', சிவியுடன் நட்பு கொண்டிருந்த துடன் கடிதப் பரிமாற்றங்களையும் செய்துள்ளார். புகழ்பெற்ற எழுத்தாளர் மார்ட்டின் விக்கரமசிங்க, சி.வி. யின் 'Born to Labour' என்ற படைப்பை, 'தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வியல் குறித்த முக்கியமான பதிவு' என பாராட்டியுள்ளார். சிவி அவர்களும் தலாத்துஓயா கே.கணேஸ் அவர்களும் சமகால மலையக எழுத்தாளர்கள். இவர்கள் இருவரினதும் முக்கியத்துவம் என்னவெனில் இருவரும் ஆங்கிலப்புலமையுடன்

இலக்கியப்பரப்பில் இயங்கியமையாகும். “சி;வியின் பன்முக ஆளுமைப் பரிமாணங்களை மாமன் மகளே முன்னுரையில் பேராசிரியர் க.கைலாசபதி பின்வருமாறு குறிப்பிடுகிறார், ‘ஆசிரியராய், தொழிற் சங்கவாதியாய், நாடாளுமன்ற உறுப்பினராய், அரசியல் பிரமுகராய், இலக்கிய கர்த்தாவாய், பத்திரிகை எழுத்தாளராய்’ என்று அடுக்கிச் செல்கின்றார் (‘மாவலி’ ஆக. செப். 2014: 34).

சோல்பரி அரசியலமைப்பின் (1947) பிரகாரம் நடந்த சட்டசபைத் தேர்தலில் மலையகத்தி லிருந்து தெரிவான ஏழு பிரதிநிதிகளுள் சிவியும் ஒருவர். தலவாக்கலை தொகுதியிலிருந்து தெரிவான சிவி, அன்றைய ஐக்கிய தேசியக்கட்சி பதிவியிலிருந்த காலத்தில் நிறைவேற்றப்பட்ட குடியுரிமைச் சட்டத்தால் அந்த வாய்ப்பை இழக்கநேர்ந்தது. அந்தச்சட்டம்தான் மலையக தமிழ் தோட்டத் தொழிலாளர்களை நாடற்றவர்களாக்கியது. அதன்பின்னர் சிவியின் தொழிற்சங்க நடவடிக்கைகள் தீவிரமடைந்தன. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமையில் வலதுசாரிப்போக்குள்ள தொழிற்சங்கமாக இயங்கியதனால், சிவி, வி.கே.வெள்ளையன் முதலான வர்களிடமிருந்து முற்போக்கான தொழிற்சங்கமாக ‘தொழிலாளர் தேசிய சங்கம்’ உருவானது. மீண்டும் புதிய அரசியலமைப்பின் பிரகாரம் 1977 இல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் நுவரெலியா தொகுதியில் போட்டியிட்டு தோல்வி கண்ட சிவி. அரசியல், தொழிற்சங்கம், இதழியல், படைப்பி லக்கியம், மற்றும் சமூகப்பணிகளில் முழுமையாய் இயங்கலானார்.



காங்கிரஸின் உத்தியோகபூர்வ ஏடான ‘Congress News’ என்னும் ஏட்டில் ஆசிரியராக இருந்த சிவி, ‘கதை’ என்னும் இலக்கிய இதழ், ‘மாவலி’ என்ற மாத இதழ் ஆகியனவற்றினதும் ஆசிரியராக இயங்கினார். எழுபதுகளின் ஆரம்பத்தில் “தொழிலாளர் தேசிய சங்கம்” என்ற தொழிற்சங்கத்தின் வெளியீடாக கொழும்பிலிருந்து (முகவரி: அறை 1, மாடி 2, ஃபேலரிட் கட்டிடம், காலி வீதி, கொழும்பு – 3.) வெளிவந்த மாவலி, ‘தொழிலாளர் தேசிய சங்கத்தின்’ உத்தியோகபபூர்வ ஏடாக திகழ்ந்தது. ‘மாவலி’யின் நிர்வாக ஆசிரியர் சிவி. அதன் இணையாசிரியர் சக்தி பால ஐயா. ‘வெறுமனே தொழிற்சங்கப் பிரசார்த்துக்காகவும், தலைவர்களின் சுயபுராணங்களை பாடுவதற்காகவும், வெறும் விளம்பரங்களுக்காகவும் செயற்படாமல் மலையக மக்களின் விழிப்புணர்வுக்கும் கலாசார வளர்ச்சிக்குமான பங்களிப்பிபற்காக முனைப்புடன் செயலாற்றி யமையாலேயே ‘மாவலி’ பற்றி பேசப்பட வேண்டிய’ (‘இருபதாம் நூற்றாண்டின் ஈழத்து இதழியலும் இலக்கியமும்’ நூலில் தெளிவத்தை ஜோசப்) உந்துதலை உருவாக்கியுள்ளது. ‘இலங்கை மலையகத் தமிழ் இலக்கிய முயற்சிகள்’ நூல், மலையகம் தொடர்புடைய 228 தமிழ் இதழ்களை பட்டியல் படுத்தியுள்ளது. ஏ.எல்.அபூபக்கர் 1918ஆம் ஆண்டு கொழும்பிலிருந்து வெளியிட்ட ‘லங்கா மித்ரன்’ முதல் இதழாக குறிப்பிடப்பட்டுள்ளது. ‘மாவலி’ 128ஆவது இதழாகியுள்ளது.

‘மாவலி’ முதல் இதழ் ஜுலை 1973ஆம் ஆண்டு 32 பக்கங்களுடன் வெளிவந்தது. முன்னட்டை மலையகத்தின் எழிலை வெளிக்கொணரும் ஓவியமாக வண்ணப் பொலிவுடன் வடிவமைக்கப் பட்டிருந்தது. நிர்வாக

ஆசிரியர் சி.வி.வேலுப்பிள்ளை என ஆங்கிலத்தில் இதழின் இறுதிப்பக்கத்தின் கீழ் மிகச்சிறு எழுத்தில் பதியப்பட்டிருந்தது. 'தொழிலாளர் தேசிய சங்கத்தின் சிற்பி, தியாகச் செம்மல் அமரர் திரு.வி.கே.வெள்ளையன் அவர்களின் நினைவஞ்சலியுடன் 'மாவலி' முதல் வெளியீட்டினைச் சமர்ப்பணஞ் செய்கிறோம்.' என எழுதப்பட்டு, வெள்ளையன் அவர்களின் புகைபடம் முதல் பக்கத்தை அலங்கரித்தது.

"தமிழுக்குக் கதி நீதான் தமிழா - வீரத்

தமிழனுக்கது அல்லால் வேறேது கதியே"

என்னும் "சக்தீ"யின் கவிவரிகள் இதழின் மகுடவாசமாகியது. 'மாவலியின் பவனி' பற்றி ஆசிரியர் தலையங்கம் சுட்டிநிற்கிறது. "தொழிலாளர்களைப் பயிற்றுவித்திடவும் பிரச்சினைகளை விளங்கி ஆராய்ந்து அவனது பிரச்சினைகளுக்கு அவனே தீர்வு காணும் வழிவகைகளை ஆக்கத்தர முற்படும்" என்பதே ஆசிரிய தலைப்பின் சாரமாகும். 'மாதச்சம்பளம் நமது இலட்சியம்?', 'இலங்கை இந்திய உறவில் சந்தேகம் ஏனோ இலங்கைக்கு?', 'மலையகப் பெண்களுக்கு எழுத்தறிவு', 'சட்டங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்' ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றிருந்தன. ஜி.ஏ.ஞானமுத்து எழுதிய "சட்டத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்" என்ற கட்டுரை முதல் இதழிலிருந்து தொடர் கட்டுரையாக எழுதப்பட்டது. இலங்கையில் குடியேறும்படி இந்தியத் தொழிலாளர்களை ஊக்குவிக்கவும், இந்திய அரசு அவர்களின் வருகையை கட்டுப்படுத்த எடுத்த முயற்சிகளை முறியடிக்கவுமாக 1923 இல் இயற்றப்பட்ட தொழிலாளர் குடியேற்றச் சட்டத்திலிருந்து இக்கட்டுரை தொடங்குகிறது. சிவியின் 'உழைக்கப் பிறந்தவர்கள்' நூலைப் பற்றி காத்திரமான ஒரு விமர்சனத்தை பொ.கிருஷ்ணசாமி எழுதியுள்ளார். "இன்பமும், துன்பமும், அழகும், அவலமும் நன்கு கலந்து தீட்டப்பட்ட ஓவியமாக அமைந்துள்ள புத்தகம் உழைக்கப்பிறந்தவர்கள்" என்றெதுகிறார் பொ.கிருஷ்ணசாமி. செய்திக் கடிதம் என்ற தலைப்பின் கீழ் இலங்கை – இந்திய பிரச்சினை, தோட்டச் சவீகரிப்பு, உணவு உற்பத்தி ஆகிய விஷயதானங்கள் சொல்லப்பட்டுள்ளன. யமுனா துரைராஜ் 'ஏ – க் – க – ம்' என்ற உருவகச் சித்திரத்தினை எழுதியுள்ளார். "மலையகத் தொழிலாளியைப் பிரதிபலித்திடும் சீவாதாரக் கருத்துக்களை கட்டுரைகளை, விரிவுரைகளை மாவலி தாங்கி பவனிவரும்" என்ற ஆசிரியர் தலைப்பு குறிப்பிட்ட கருத்துக்கு ஏற்ப முதலாவது 'மாவலி' அமைந்திருந்தது.

'மாவலி'யின் இரண்டாவது இதழ் ஆகஸ்ட் 1973இல் 44 பக்கங்களுடன் வெளியானது. முன்னட்டையில் மலையக எழில் தோற்ற ஓவியம்; அதற்குள் வி.கே. வெள்ளையன் புகைப்படம் பதிகை கண்டுள்ளது. "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்ற மகாகவி சுப்பிரமணிய பாரதியின் கவிவரி இவ்விதழின் நோக்கக்கூற்றாயிற்று (தொடர்ந்து வந்த இதழ்களின் மகுடவாசகம் இதுவே). இதில் 21 ஆக்கங்கள் இடம் பெற்றுள்ளன. "மலையகத்தின் மாண்புமிக்க உணர்வுகளைத் தன்னுணர்வாகத் தாங்கி தியாக உள்ளம் படைத்த தளபதி திரு. வி.கே.வெள்ளையன் அமரராகிவிட்ட போதிலும், அவரது உணர்வுகளால் நாம் உந்தப்படுகிறோம். மலையக மக்களின் துயர் துடைத்திடத் துணிந்த அன்னாரின் இதயக்குரலை அவரது இக்கட்டுரை எதிரொலிக்கிறது" என்ற குறிப்புடன் அமரர் வி.வெள்ளையன் எழுதிய 'வஞ்சிக்கப்படும் மலையகம்' என்னும் கட்டுரை தரப்பட்டுள்ளது. தொழில் ஆணையாளர் லக்ஷ்மன் த.மெல் எழுதிய "தேயிலைத் தொழில்துறை" என்ற கட்டுரை தேயிலை தொழில்துறை எவ்வாறு தொடங்கப்பட்டு வளர்ச்சியடைந்தது என்பதை வரலாற்று கண்ணோட்டத்துடன் அணுகியுள்ளது. 'தொழில் துறை நல்லுறவு வளர்ச்சி' எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்ட இக்கட்டுரை அடுத்தடுத்த இதழ்களுக்கும் தொடர்கிறது. சிவியின் 'தேயிலைத் தோட்டத்திலே...' கவிதையின் 56 வரிகள் இதழை கனதியாக்கியுள்ளது.

1973 ஒக்டோபரில் 'மாவலி'யின் மூன்றாம் இதழ் வெளியானது. 'நியமனப் பதவியா? தொழிலாளர் நலனா?' என்ற வினா தொடுப்போடு ஆசிரியர் தலையங்கம் ஆக்கப்பட்டுள்ளது. "இலங்கை தேசியப் பேரவையில் நியமனப்பதவிக்காகப் போட்டா போட்டியிடும் இருபெரும் தொழிற் சங்கங்களும் இருபெரும் அரசியல் கட்சிகளின் கூட்டுச்சேர்கையுடையன. ஆனால் தோட்டத் தொழிலாளிக்கு எந்த அரசு வந்தாலும் அவன் வாழ்க்கை மட்டும் சீரடைந்ததாகக் காணப்பட வில்லை..." எனத்தொடர்கிறது ஆசிரியர் தலைப்பு. 42 பக்கங்கள் கொண்ட இவ்விதழில் 11 கட்டுரை களும், எட்டு கவிதைகளும், ஆசிரியருக்கு, செய்திக்கடிதம், மாவலி சித்தர் பதில், அறிவுரைகள் ஆகிய தலைப்பில் கடிதங்களும் அதன் உள்ளடக்கமாகியுள்ளன. லக்ஷ்மன் த.மெல் இன் 'தேயிலைத் தொழில் துறை', ஞானமுத்து இன் 'சட்டங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்' ஆகிய தொடர்கட்டுரைகள் இதழுக்கு சிறப்பு சேர்க்கின்றன. மகாகவி ரவீந்ரநாத் தாகூர் ஆங்கிலத்தில் எழுதிய 'கீதாஞ்சலி' இன் சில வரிகளுக்கு சக்தீ பால ஐயா தமிழ்வடிவம் தந்துள்ளார்.

"நான் பாடும்போது எனது பாட்டிலே தாங்கள் மகிழ்ச்சியடைகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும்.

தங்களின் தோற்றத்தின் முன்னே

ஒரு பாடகியாக மட்டுமே வருகிறென்பதும் எனக்குத் தெரியும்.

தங்களின் திருவடிகளை அடைவேனென்று எப்போதுமே கண்ணால் பார்த்திட

முடியாதிருந்த நான் வெகு தொலைவிற்கு விரியும்

எனது பாடலின் சிறகுகளின் முனையால் தங்களின் திருவடிகளைத் தொடுகிறேன்.

எனது பாட்டின் ஆனந்த அமுதை அருந்தி, எனை மறந்து என் தோழா! என் பிரபுவே! என்று தங்களை அழைத்துக் களிப்படைகிறேன்......''

'மாவலி' நாலாவது இதழின் (1974 ஏப்ரல்) ஆசிரியத் தலையங்கம் ''நல்லதைச் சொல்லிக் கெட்டதைச் செய்தல்'' என்னும் தலைப்பில் தீட்டப்பட்டுள்ளது. ''ஒரு கெட்ட காரியத்தை நல்ல நோக்கைக் காட்டி செய்வது பற்றி கேள்விப்பட்டிருக்கின்றோம். நாட்டு மக்களின் நலனுக்காக தேயிலைத் தோட்டங்களைச் சுவீகரிக்கின்றோம் என்று கடந்த இரண்டு வருடங்களாக எடுத்து வரும் நடவடிக்கைகள் இவைகளில் ஒன்று. தேயிலைத் தோட்டங்களை சுவீகரிப்பதற்கு ஏற்பாடுகள் நடத்திய போது தொழில் சங்கங்கள் எந்த வித எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை. ஏனெனில் இந்த சுவீகரிப்பின் மூலமாக ஜாதிக் குழப்பத்தை ஏற்படுத்தக் கூடிய பயங்கரமான வித்து இந்தச் செய்தியில் புகுத்தப் பட்டிருந்தது. தப்பித் தவறி யாராவது தோட்டச் சுவீகரிப்பின் மூலம் தோட்ட தொழிலாளர்களுக்கு தீமை இழைக்கப்படுகின்றது என்று கண்டனம் தெரிவித்து இருந்தால், அது சிங்கள மக்களுக்கு விரோதமாக எடுத்த துரோகச் செயல் என்று பழிசுமத்தி இனக்கலவரத்திற்கும் வழி வகுத்திருக்கும். எனவே கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் தோட்ட சுவீகரிப்பால், தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட சகல இன்னல்களையும் மகஜர் மூலம் முன்னணி தொழில் சங்கங்களும் அவைகளோடு தோழமை கொண்ட நடுநிலை சங்கங்களும் பிரதமருக்கு சமர்ப்பித்தன. இந்த மகஜருக்கு இதுவரை பரிகாரம் கிடைக்கவில்லை. தோட்டங்களை சுவீகரிக்கும் அமைச்சர் ''இந்த நிலங்கள் சிங்கள மக்களிட மிருந்து பறிக்கப்பட்டவை. அவைகளை மீட்டுக் கொள்கின்றோம் என்று சொல்லும் கூற்று உண்மைக்கும், சரித்திரத்திற்கும் நேர்மாறானது. இப்போது எடுக்கப்பட்ட பல தோட்டங்கள் அந்தக் காலத்தில் மனிதர் நடமாடாத காட்டுப் பிரதேசங்கள். பலனை கணவாய்க்கு மேல் எந்த வித விவசாயமும் செய்யப்படவில்லை என்று சரித்திரம் கூறுகிறது'' – என்றெழுதுகிறார் ஆசிரியர். ''அடிதடிக் கதை பரவ சுரண்டி வாழும் சுயநலப் புலிகள் முதலைக் கண்ணீர்விட'' வி.கே.வெள்ளையன் 06.10.1971இல் எழுதிய கட்டுரையை அதன் முக்கியத்துவம் கருதி மீள தந்துள்ளார்கள். ''அன்று தொழிலாளிக்குச் செய்த துரோகத்தை யாராலும் எக்காலத்திலும் மன்னிக்க முடியாது! இன்று அவன் முதுகின் மேல் ஏறி கொடி பிடிப்பதா?'' என்ற ஆக்கம் டி.அய்யாத்துரை உடையது. மெய்யன், அவன் மனைவி அஞ்சலை ஆகியோரது 'திண்ணை' உரையடலை சாவி உரைத்துள்ளார். மலையகத்தின் நடைமுறை இருத்தலையும், சிந்திக்கத் தூண்டும் கருத்துக்களையும் சாவி உயிர்ப்போடு சொல்லியுள்ளார். சித்திரப்போட்டியில் வெற்றிகண்ட த.நடராஜாவின் ஓவியம் அட்டைப்பட மாகியுள்ளது. அந்த சித்திரம் பற்றி ஓவியர் எழுதிய குறிப்பு 15ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது. ''தோட்டக்காட்டில் அழகிய அணங்குகள் இருக்கிறார்கள். இவர்கள் கரங்கள் காமதேனுக்கு ஒப்பானதாகும். நாட்டின் நலன்களை அயராது கண்காணிக்கும் இனத்தை சேர்ந்த பெண்மணியின் உருவத்தை அனுப்பியுள்ளேன். வெய்யிலிலும், மழையிலும் காலை ஏழரை மணி முதல் மாலை ஆறு மணிவரை கொழுந்து பறிக்கும், இப்பெண் முக்காடு இட்டு தேயிலைச் செடிகளுக்கு மத்தியில் எதிர்காலம் எப்படியோ என்று சிந்திப்பதை நீங்கள் காணுவீர்கள்''.

'நூற்றி எட்டு உரு' என 'மாவலி' ஐந்தாம் இதழின் (1974 ஆகஸ்ட்) ஆசிரியர் தலையங்கத்தை சிவி தீட்டியுள்ளார். தொழிலாளர்களின் சம்பளச் சிக்கல் வரலாற்று நோக்கில் அவதானிக்கப் பட்டுள்ளது. ''நாள் சம்பளம் 58 சதமாக ஆவதற்கு 75 வருடங்கள் ஆகின (1870-1945). இச்சம்பளம் 1950ல் 1.10 சதமாகக் கூடியது. இதற்குப்பின் 1954ல் 15 சதம் இதில் கூட்டப்பட்டது. எனவே, இச்சம்பளத்தில் 13 வருடத்தின் பின் 1967ல் 10 சதம் கூடியதால் தொழிலாளிக்கு 1-35 சதம் சம்பளமாக கொடுக்கப்பட்டது....'' 'தொழிற்சங்கம் அதன் கடமை' என்ற வி.கே.வெள்ளையன் 24.10.1969இல் எழுதிய கட்டுரை மீள பிரசுரம் கண்டுள்ளது. 'இலங்கை இந்தியப் பிரச்சனை' பற்றி பி.பெருமாள் எழுதும் தொடர் செய்திக்கடிதம் இடம்பெற்றுள்ளது. ஆர்.தியாகராஜாவின் 'முன்னேற்றமடைந்து வரும் சமுதாயத்தில் தொழிற்சங்கங்க ளின் பொறுப்பான பங்கு'', பெ.பெருமாளின் 'இலங்கை தொழிற்சங்க வரலாறு'', டி.ஐயாத்துரையின் 'இலங்கை மன்றக் கல்லூரி', பி.வி.கந்தையாவின் 'தொழிற் சங்கமும் அரசியல் கட்சியும்' முதலான கட்டுரைகள் இதழை சிறப்பிக்கின்றன.

மாவலி ஆறாவது இதழ் (1974 டிசெம்பர்) ஆண்டு மலராக மலர்ந்துள்ளது. ''இலங்கையிலும் தமிழகத்திலும் எத்தனையோ தமிழ் வார, மாத ஏடுகள் வெளியாகின்றன. அவை பல்சுவை விருதுகளையும் படைக்கின்றன. ஆயினும் பாட்டாளி மக்களின் கண்ணீர்க் கதையை எடுத்துச்சொல்லி அவர்களது வாழ்விலே மறுமலர்ச்சியை ஏற்படுத்தப்பாடுபடும் ஒரே தமிழின் ஏடு தங்கள் 'மாவலி' தான் என்பது பெருமைப்படக் கூடியது'' என்று ஓராண்டு மாவலிக்கு, வீரகேசரி, மித்திரன் பிரதம ஆசிரியர் கே.வி.எஸ்.வாஸ் வாழ்த்து தெரிவித்துள்ளார். ஆசிரியர் தலையங்கம் 'அஞ்சலி செய்ய வாரீர்' என்கிறது. ''தொழிற் சங்கம் தொழிலாளர்களின் சொத்தாக இருக்க வேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத்தோடு 1942 முதல் தொழிற் சங்கத்துறையில் வீ.கே.உழைத்து வந்தார். தன்னையும் தொழிற் சங்கப் பணிக்கே அர்ப்பணித்து தனது இல்லற வாழ்க்கையையும் துறந்து பிரம்மச்சாரியாக வாழ்ந்தவர். அவர் எப்போதும் சிந்திப்பது நசுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு, புழுங்கும் தோட்டத் தொழிலாளியைப் பற்றியேதான்...'' என்று வி.கே. வெள்ளையன் பற்றி எழுதுகின்றார் சிவி. ''அமரர் வி.கே.வெள்ளையன் அவர்கள் இன்று நடப்பதை தீர்க்கதரிசனமாக 7.11.69-லேயே கூறிவிட்டார். மலையக மக்களுக்கு என்றைக்குத்தான் மனம் நிறைந்த தீபாவளி வரும் என்பதை இக்கட்டுரை சுட்டுகிறது. இக்கட்டுரையில்

எப்படி சம்பளம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது, அதை அமுல் நடத்துவது யார் என்பதை யெல்லாம் தெளிவு படுத்தியுள்ளார்'' என்ற ஆசிரியர் குறிப்புடன், வி.கே. வெள்ளையன் எழுதிய ''மலையக மக்களுக்கு மனம் நிறைந்த தீபாவளி என்றைக்கு'' எனும் கட்டுரை மீள பிரசுரிக்கப்பட்டுள்ளது. மாவலி மலர் பற்றிய குறிப்பினை சிவி எழுதியிருக்கிறார். 'தொழில் துறையில் பெண்கள் பங்கு' என்ற கே. பெர்ணாண்டு இன் கட்டுரை இடம் பெற்றுள்ளது. இன்னும் பல கட்டுரைகளுடன், கவிதைகள், மாவலிக்கு ஓராண்டு வாழ்த்துக்கள், சங்கச் செய்திகள், விலைவாசியைக் குறைக்க தமிழக தொழில் அமைச்சர் திரு. மாதவன் வெளிநாட்டு பேட்டி ஒன்றுக்குக் கூறியது, எண் ஞானம் – சோதிடம், அமரருக்கு அஞ்சலி முதலான விடயங்களும் மலரில் இடம் பெற்றுள்ளன.

தேயிலைத் தோட்ட (குறிப்பாக, தொழிலாளர்களின்) பிரச்சினைகளை, அதன் நியாயப்பாடுகளை, ஆழ அகலங்களை, எமாற்றுப் பேர்வழிகளின் சுயநல அரசியலை, உரிமைகளை வென்றெடுக்கும் முறைமையை எடுத்துக்காட்டுகின்ற, விவரிக்கின்ற, விவாதிக்கின்ற கட்டுரைகளை 'மாவலி' தாங்கி வந்துள்ளது. மலையத்தின் 'மா வலிகைளையும் தாண்டி' 'மாவலி' பிரவாகமெடுத்திருக்கிறது. 'மாவலியின் பிரதம ஆசிரியராகத் திகழ்ந்தவர் மக்கள் கவிமணி சி.வி. வேலுப்பிள்ளை என்பதுவும் கூட மாவலியின் சிறப்புக்கும் முக்கியத்துவத்துக்குமான ஒரு காரணம் என்பதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதே' என்கிறார் தெளிவத்தை ஜோசப். சிவியால் வெளிக்கொணரப்பட்ட 'மாவலி' இதழ்கள் முழுமையாக தொகுக்கப்படுதல் (பையன்ட் வால்யூம்) வேண்டும்.

'மா வலிகளையும் தாண்டி...' 2014 மார்ச் முதல் 'மாவலி' மீள்வருகையைத் தொடங்கிற்று. அதன் நிர்வாக ஆசிரியர் எஸ்.பிலிப். ஹட்டனிலிருந்து வெளியானது. 'மாவலி' மீள் முதல் ஊற்றில் சாரல் நாடனின் சில ஆக்கங்களை நன்றியுடன் பிரசுரித்திருந்தது. 'மாவலி'யின் மீள் ஓட்டம் 3 அதாவது மூன்றாவது இதழ் 'மக்கள் கவிமணி' அமரர் சி.வி.வேலுப்பிள்ளை நூற்றாண்டு விழா (1914- 2014) சிறப்பிதழாக (ஆகஸ்ட் – செப்தம்பர் 2014) மலர்ந்தது. இச்சிறப்பிதழ் கனதியாகவும் நேர்த்தியாக வும் அழகியல் நுட்பத்துடனும், 66 பக்கங்களில் உருவான இவ்விதழின் முன்னட்டை சி.வி.இன் புகைப் படத்துடனும் அவரது கவி வரிகளுடனும் (ஆங்கிலம், தமிழ்) வடிவமைக்கப்பட்டிருந்தது. ''மாவலியின் மீள்வருகையின் மூன்றாவது இதழை சி.வி. நூற்றாண்டு சிறப்பிதழாக வெளிக்கொண்டு வருவதில் பெருமகிழ்ச்சி. கடந்த மே மாத இதழுக்குப்பின் ஜுலை ஆகஸ்ட் இதழாக வெளிவந்திருக்க வேண்டிய இதழ் சி.வி.நூற்றாண்டு பணிகள் நிமித்தம் சற்றே தாமதமாகியது. அதேநேரம் அந்த இதழையும் இணைத்ததாக அளவில் பெரியதான கனதியான இதழை கொண்டுவரும் வாய்ப்பையும் அது ஏற்படுத்திவிட்டது. சி.வி. அவர்களுடன் தொழிற்சங்க பணியில் இணைந்து பயணித்த முன்னாள் நிதிச்செயலாளர் பெருமாள் அவர்களினதும் இலக்கிய, இதழியல் பணியில் இணைந்து பயணித்த சக்தி பால அய்யா அவர்களினதும் பதிவுகள் சி.வி. நூற்றாண்டு சிறப்பிதழ் உள்வாங்கிக் கொள்கின்றமை மறைந்த அந்த ஆளுமைகளுக்கு மேலும் பெருமை சேர்ப்பதாக உள்ளது. அந்த இரு கட்டுரைகள் தவிர்ந்த ஏனைய அனைத்துக் கட்டுரைகளும் சி.வி.எனும் மகா கவிஞனின் எமது தொழிலாளர் தேசிய சங்கத்தின் முன்னாள் மதியுரைஞரும் நிர்வாக பொறுப்பாளருமான சி.வி. வேலுப்பிள்ளை நாமம் தழுவிய சிறப்பிதழாக இந்த இதழ் அமைந்திருக்கிறது'' என்று நிர்வாக ஆசிரியர் எஸ்.பிலிப் எழுதியுள்ளார்.

சிறப்பிதழின் முதல் பக்கத்தில் சிவி குடும்ப புகைப்படம் பிரசுரிக்கப்பட்டு, அதன் கீழ் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது: ''படத்தில் அமர்ந்திருப்பவரில் மூன்றாவதாக அமர்ந்திருப்பவரே சி.வியின் பாட்டனாரும் மடக்கம்பரைத் தோட்டத்தின் பெரிய கங்காணியுமான குமரன். அவருக்கு இடதுபுறம் பாட்டி. வலதுபுறம் தாயார். நிற்பவர்களில் முதலாவதாக இருப்பவர் தாய்மாமன் சின்னனையா. அவருக்கு முன்னால் இருப்பவர் மாமி, மடியில் குருபரன். அடுத்தவர் சி.வியின் சகோதரன். அடுத்ததாக எமது நாயகன் சி.வி.காந்தி குல்லாவுடன். அடுத்தவர் மாமன் சுப்பிரமணியம். அவருக்கு முன்னாள் மாமி. அவரது மடியில் தற்போது ''சுடரொலி'' பத்திரிகையின் ஆசிரிய பீடத்தில் கடமையாற்றும் சி.எஸ்.காந்தி அவர்கள். முன்னால் பாயில் இருப்பவர் பாட்டனாரது வளர்ப்பு பிள்ளை. 1950ம் ஆண்டு ஸி;வியின் பாட்டனார் மரணிக்கும் வரை அவரின் அரவணைப்பிலேயே ஸி.வி.வாழ்ந்தார்.'' இத்தகைய அரிய புகைப்படங்களும், முக்கிய ஆவணங்களும் (சிவியின் பிரஜாவுரிமைச் சான்றிதழ்; கலாநிதி குமாரி ஜயவர்தன, ஜோர்ஜ் கீட், லங்காதீப பத்திரிகையின் ஆசிரியரான ஏ.பி.தனபால ஆகியோர் சிவிக்கு எழுதிய கடிதங்கள்; சிவிக்கு இந்திய அரச, பத்திரிகை, பதிப்பகத் தொடர்புடைய கடிதங்கள்; பாராளுமன்றம் சார்பான பிரதிகள்; இந்திய கேசரியில் வெளியான செய்தி...) இவ்விதழில் பதிவு பெறுவது பெறுமதியானது..

சிவியின் பன்முக ஆளுமையை எடுத்துக்காட்டும்

15 கட்டுரைகள் இவ்விதழில் காணப் படுகின்றன. ஆங்கிலத்தில் எழுதப்பட்ட (எம்.வாமதேவன்) ஒரு கட்டுரையும், சிங்களத்தில் எழுதப்பட்ட (எரந்தன ஹேமவர்தன) ஒரு கட்டுரையும் இதில் உள்ளடங்குகின்றது. பேராசிரியர் சபா ஜெயராசாவின் "மலையகத்தின் விசைத் தளத்தை வடிவமைத்த சி.வி.", பி.பி.தேவராஜின் "நிலை மாற்றம் கண்டு வரும் மலைநாட்டு தமிழர்", "மலையக இலக்கியம் எனும் மரபுக்கு வித்திட்ட சிவி", மல்லியப்பு சந்தி திலகரின் "ஸி.வி.வேலுப்பிள்ளையின் பன்முக ஆளுமையும் பணிகளும்" போன்ற கட்டுரைகள் சிவி பற்றிய புதிய தகவல்களுடனும் ஆய்வுநுட்பத்துடனும் எழுதப்பட்டுள்ளன. சிவி எழுதிய 'மலையத் தமிழரின் இன்றைய பிரச்சினைகள்" என்ற கட்டுரை மீள் பிரசுரம் கண்டுள்ளது. 'வாழிய சி.வி. நற்பெயரே!' என்ற நீண்ட கவிதையை ஏ.பி.வி.கோமஸ் யாத்துள்ளார்.

'உரிமைப் போராட்டங்களை முன்னெடுத்து மலையகத்துக்கு பெருமை சேர்த்தவர் தொழிற்சங்க வாதி பெருமாள்' என்ற கட்டுரை பி.ஸ்ரீதரனால் எழுதப்பட்டுள்ளது. 'சக்தியும் தீயுமாய் வாழ்ந்த சக்தீ பாலஐயா' என்ற நினைவுக்குறிப்பினை மனத்திரையில் விரிந்துச் செல்லும் காட்சி ரூபமாக மல்லியப்புசந்தி திலகர் சித்திரித்திருக்கிறார். இந்த குறிப்பினை படிக்கையில் சிவி பற்றி அ.யேசுராசா 'அலை' பதிவுகளில் (அலை; பங்குனி – 1985: 180,181) எழுதிய வரிகளை நினைத்துப் பார்க்கிறேன்: "அவர் (சிவி) இறப்பதற்குச் சுமார் இரண்டு மாதங்களின் முன்னாக இருக்கலாம். கொள்ளுப்பிட்டியில் 'டேடன்ஸ்' தனியார் மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்த போது, ஒருநாள் இரவு எட்டரைமணிபோல் நுஃமானும், நானும் அவரைப் பார்க்கச் சென்றிருந்தோம். மெலிந்து போய், மிகப் பலவீனமாய் படுக்கையில் இருந்தார். மனைவியைக் கூப்பிட்டு அறிமுகப்படுத்தினார். ('தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களுக்காக உழைப்பதற்கு வாழ்க்கையை அர்ப்பணிதுள்ள நீங்கள், வாழ்க்கைத் துணையாக ஒரு சிங்களப்பெண்ணை ஏன் தெரிந்தீர்கள்?' என்று ஒருவர் கேட்டபோது, "அவள் ஒரு பெண்ணாக இருப்பதுதான் காரணம்" என்ற அவரது பதில், எனக்கு நினைவுக்கு வந்தது.) இரு தலையணைகளைப் பக்கவாட்டில் வைத்துச் சிறிது சரிந்துபடுத்தபடியே எம்முடன் கதைத்தார். 'கைலாசபதி'யின் மரணம் பற்றிக் கவலையுடன் நினைவு கூர்ந்தார்.... அவருக்குச் சிரமமாயிருப்பதால், ஒய்வாக விட்டுச்செல்வதைத் தெரிவித்தபோதும் எம்முடன் அவர் உரையாடவிரும்புவதை அறிந்தோம். அவரது 'வீடற்றவன்' இரண்டாம் பதிப்பும், 'இனிப்பாடமாட்டேன்' நூலும் வெளிவந்துள்ள தாகக் குறிப்பிட்டபோது 'தான் இன்னும் பார்க்கவில்லை' என்று சொன்னார். (சில நாட்களின் பின்னர் நண்பர் பத்மநாப ஐயர் கொடுத்துவிட்ட 'வீடற்றவன்' பிரதியை, நுஃமான் அவரிடம் சேர்ப்பித்தார்.... பத்மநாபன் 'இனிப் பாட மாட்டேன்' நாவலை சி.வி. யிடம் சேர்ப்பிக்குமாறு தந்தார். அதைத் தொழிற்சங்க அலுவலகத்தில் சேர்ப்பித்தேன்.) வெகுநேரமாகிக் கொண்டிருப்பதால் சென்று வருவதாக நாங்கள் சொன்னபோது, நுஃமானின் கையைப் பற்றியபடி சிறிதுநேரம் கண்களை மூடினார். கண்களை திறந்தபோது "Bring hope from outside" அவரது மெலிந்த குரலும், தோற்றமும் திரைப்படத்தின் 'உறைகாட்சி'போல் மனதில் பதிந்திருக்கிறது..." இத்தகைய அணுகுமுறையில்தான் சக்தீ பற்றி திலகரும் விவரணப்படமாக்கியிருக்கிறார்.. அவர் குறிப்பிடும் ஒவ்வொரு சம்பவமும் 'திரைப்படத்தின் உறைகாட்சி'போல்' மனத்திரையில் பதிகிறது. சக்தீயின் பன்முக ஆற்றலை தன் குறிப்பில் ஆங்காங்கு சுட்டிக்காட்டவும் திலகர் தவறவில்லை. ஒரு சிறு எடுத்துக்காட்டு: "சி.வி.யின் In Ceylon Tea Garden' "இலங்கைத் தேயிலைத் தோட்டத்திலே" எனும் தமிழ் வடிவம் பெற்றது வெறுமனே சக்தீக்கு ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கு மொழி பெயர்க்க முடியும் என்பதனால் மட்டுமான ஒரு விடயமல்ல. அது சக்தீயின் கவிதை ஆளுமையுடன் தொடர்புடையது என்பது எனது கணிப்பு. எனவே "புழுதிப் படுக்கையில... புதைந்த என் மக்களை.' சி.வியின் சிந்தனையிலும் சக்தீயின் கவிதை ஆளுமை யினாலும் எழுந்த வரிகள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டியவர்களாகவே உள்ளோம்" (18).

'சி.வி. அவர்கள் தொடங்கி நிர்வாக ஆசிரியராக பணிசெய்து வெளியிட்ட மாவலியை இப்போது மீள கொண்டு வந்திருப்பதும் எமது சங்கத்தின் சாதனைத்தான். 2014 ஆண்டு இது மூன்றாவது இதழ். முதல் இரண்டு இதழ்களையும் விட இன்னும் நேர்த்தியாக அமைவதையிட்டு மகிழ்ச்சி' என்று நிர்வாக ஆசிரியர் குறிப்பிட்டதற்கு அமைய இவ்விதழ் அழகியல் நேர்த்தியுடனும் ஆழம் பொதிந்த ஆக்கங்களுடனும் ஆகியுள்ளது. '2014-09-14 ஸி.வி. நூற்றாண்டு நினைவு நாள்' எனும் மகுடத்தில் சிவியின் 'இலங்கைத் தேயிலைத் தோட்டத்திலே' (In Ceylon Tea Garden; 1952) எனும் நெடுங்கவிதையின் இறுதி வரிகளை (ஆங்கிலம், தமிழ்) இவ்விதழ் 37ஆம் பக்கத்தில் பதிகை செய்துள்ளது. அதிலுள்ள சில தமிழ் கவிவரிகளுடன் இக்குறிப்புகளை நிறைவு செய்கிறேன்.

"நூறாண்டு காலமாய்
நுழைந்த இவ்விருட்டை
வேரோடழிக்க
என்தமிழ் மக்கள்
கூறுவர் சிகர
உச்சியில் ஏறிக்
கூறுவர் திடல்கள்
யாங்கணு மடுக்கவே
விடுதலைக் குரலிது
வெற்றிக் குரலிது
வீரக்குரலிது
விரைந்தெழுவீர் கேட்பீர்!"

அவுஸ்திரேலியாவில்
தமிழ்ச் சிற்றிதழ்கள்

சட்டத்தரணி, பாடும்மீன் சு.ஸ்ரீகந்தராசா

ஒன்பது கோடித் தமிழ் மக்கள் உலகெங்கும் பரந்து வாழ்கின்றார்கள். தமிழகமும், இலங்கையும் தமிழரின் பாரம்பரியத் தாயகங்கள். அந்தத் தாயகங்களுக்கு வெளியே எண்பதுக்கு மேற்பட்ட நாடுகளில் தமிழ் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள்.

உலகின் மூலை முடுக்குக்களிலெல்லாம் தமிழன் தன் காலைப் பதித்திருக்கிறான். காலைப் பதித்த இடமெல்லாம் வாழத் தலைப்பட்டுவிட்டான். வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களில் வாழ்வாதாரங்களுக்காகத் தாயகங்களைவிட்டு இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் நிலை பிறழ்ந்து போனார்கள். மொழியிழந்து போனார்கள். இனம் மறந்து போனார்கள். சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் குடிபெயர்ந்த தமிழ்மக்கள் தாயகங்களோடு தொடர்பிழந்து போனாலும் மொழி மறந்துபோகாமல், இனப்பிறழ்வுக்கு ஆளாகாமல் இன்னும் தமிழராய் இருக்கின்றார்கள். தென்னாபிரிக்காவில், மலேசியாவில், சிங்கப்பூரில் இலங்கையின் மலையகத்தில் எல்லாம் இனத்துவ அடயாளங்களைப் பேணி அந்த மக்கள் தனித்துவத்துடன் வாழ்கின்றார்கள். அண்மைக்காலத்தில் தாயகங்களில் இருந்து, குறிப்பாகத் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் அனைத்துலக நாடுகள் பலவற்றில் அவ்வந்த நாடுகளின் பிரசைகளாக மாறியவர்களாகவும், மாறாதவர்களாகவும், அகதிகளாகவும் வாழ்கின்றார்கள். அவர்களெல்லாம் தாயகங்களோடு இணைந்தவர்களாகவும், தாயக நினைவுகளைச் சுமந்தவர்களாகவும், தாய்மொழிப்பற்று மிகுந்தவர்களாகவும் அந்த நாடுகளில் தம் வாழ்வினைத் தொடர்கின்றார்கள். வாழுகின்ற நாடுகளில் வழங்குகின்ற மொழிகளிலே படிக்கவும், எழுதவும், பேசவும் வேண்டியது புலம்பெயர்ந்தவர்களுக்கு இன்றியமையாததாகின்றது.

அத்தகைய தமிழ்மக்கள் கணிசமான தொகையினராய் வாழ்ந்துவருகின்ற ஒரு நாடாக அவுஸ்திரேலியாவும் திகழ்கின்றது. அவுஸ்திரேலியத் தமிழ் மக்கள் தம் இனத்தைப்பற்றியும், தம்மொழியைப்பற்றியும் மிகுந்த அக்கறை கொண்டவர்களாயிருக்கின்றார்கள். தம் எதிர் காலச் சந்ததிகளிடம் தமிழ் மொழியைக் கற்க வைப்பதற்கும், தமிழ்ப் பண்பாடுகளைத் தக்க வைப்பதற்கும் அவர்கள் எடுக்கின்ற அயராத முயற்சிகள் கொஞ்ச நஞ்சமல்ல.

அவுஸ்திரேலியாவில் தமிழ் மக்களின் குடியேற்றம் 1965 ஆம் ஆண்டிலிருந்து இடம்பெற்றிருக்கிறது. ஆரம்பத்தில் இலங்கைத் தமிழர்கள் தொழில் வாய்ப்புப்பெற்று



அவுஸ்திரேலியாவுக்கு வரத் தொடங்கியிருந்தாலும், 1970 ஆம் ஆண்டு குடியுரிமைபெற்று வாழக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டதற்குப் பின்னரே அத்தகைய தமிழர்களின் குடியேற்றம் அதிகரிக்கத் தொடங்கியிருக்கின்றது. ஆனால் 1983 ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தினைத் தொடர்ந்து ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கில் இலங்கைத் தமிழர்கள் அவுஸ்திரேலியாவுக்குப் புலம் பெயர்ந்தனர். 2009 ஆம்ஆண்டுக்குப் பின்னர் இலங்கையிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் இலங்கைத் தமிழர்கள் படகுகளிலும் வரத் தொடங்கினார்கள்.

அவுஸ்திரேலியாவில் ஆறு மாநிலங்களும், இரண்டு மண்டலங்களுமாக மொத்தம் எட்டு சமஸ்டி அரசாட்சிப் பிரிவுகள் உள்ளன. இந்த நாட்டின் சனத்தொகை ஏறத்தாழ இரண்டரைக் கோடியாகும். அதாவது, அண்ணளவாக இலங்கையின் சனத்தொகைக்கு ஒப்பானது. ஆனால். நிலப் பரப்பளவில் அவுஸ்திரேலியா, இலங்கையைப் போல ஐம்பத்தியிரண்டு மடங்கு பெரியது.

அவுஸ்திரேலியத் தமிழர்களின் மொத்த எண்ணிக்கையினரில் நான்கில் மூன்றுக்கும் அதிகமானோர் சிட்னியைத் தலைநகராகக் கொண்ட நியூசவுத் வேல்ஸ், மெல்பேண் தலை நகராகவுள்ள விக்ரோறியா ஆகிய இரு மாநிலங்களிலும் செறிந்து வாழ்கின்றனர். மேற்கு அவுஸ்திரேலியா(பேர்த்), குயீன்ஸ்லாந்து(ப்றிஸ்பேண்), தெற்கு அவுஸ்திரேலியா(அடிலைட்), தலைநகர மண்டலம்(கன்பரா), வடமண்டலம்(டார்வின்), தஸ்மேனியா(ஹோபாட்) ஆகிய மற்றைய மாநிலங்களிலும் தமிழர்கள் வாழ்கின்றனர். 2021 ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின்படி 1, 50, 000 தமிழ் மக்கள் இங்கு வாழ்கிறார்கள். இலங்கைத் தமிழர்களே இதுவரை இங்கு அதிகமானவர்களாக இருந்தார்கள். 2021 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பில்தான் முதன் முதலாக இந்தியத் தமிழர்களின் தொகை இலங்கத்தமிழர்களைவிடச் சற்று அதிகமாகியிருக்கிறது. மலேசியா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா, பிஜித் தீவுகள், மியன்மார்(பர்மா) ஆகிய நாடுகளிலிருந்தும் தமிழ் மக்கள் இங்கு குடியேறியுள்ளனர்.



பத்திரிகைகளும், சிற்றிதழ்களும்

இங்கு வாழும் தமிழர்கள் தாயக நினைவுகளை மறவாது வாழவும், தமது இனத்தின் அடையாளங்களை நிலையாகப் பேணவும் தமிழ்மொழி ஊடகங்களையும் துணையாகக் கொண்டுள்ளார்கள்.

தனித் தமிழ்த் தொலைக் காட்சிச் சேவைகள், வானொலி பரப்புக்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், இணையத் தளங்கள் என்றெல்லலாம் பரந்துபட்ட ஊடகங்களைச் சிறந் தமுறையில் நடாத்துகின்றார்கள்.

அவுஸ்திரேலியாவில் முதல்முதல் வெளியிடப்பட்ட மாதப்பத்திரிகை "தமிழ்க்குரல்" ஆகும். பிரபல எழுத்தாளர், மாத்தளை சோமுவால் 1987 ஆம் ஆண்டு புகைப்படப் பிரதிகளாக வெளியிடப்பட்ட இந்த இதழின் விலை ஒரு வெள்ளியாக இருந்திருக்கிறது.

அதே காலப்பகுதியில் மெல்பேணில் இருந்து, மக்கள் குரல், செய்திச் சுடர் ஆகிய கையெழுத்துப் பத்திரிகைகள் வெளிவந்ததாகவும் அறியக்கிடக்கின்றது.

அரவிந்தனின் "மரபு", யாழ் எஸ்.பாஸ்கரின் அக்கினிக்குஞ்சு அகிய சஞ்சிகைகள் 1990 களில் வெளிவந்துகொண்டிருந்தன. காலப்போக்கில் நின்றுவிட்டன. அக்கினிக்குஞ்சு இப்பொழுது இணையத்தளத்தில் வந்துகொண்டிருக்கின்றது.

சட்டத்தரணி, பாடும்மீன் சு.ஸ்ரீகந்தராசாவை ஆசிரியராகக்கொண்டு, மருத்துவர் பொன்.சத்தியநாதன் அவர்களால் 1994 ஏப்பிரல் மாதத்திலிருந்து வெளியிடப்பட்ட "தமிழ்உலகம் (Tamil World)" என்ற இருமொழிப்பத்திரிகை, இருவாரங்களுக்கு ஒருதடவை என்ற வகையில் வெளிவந்தது. அதன் ஆங்கிலப் பகுதியின் ஆசிரியராக, சீவநாயகம் அவர்கள் ஆரம்பகாலத்தில் சில மாதங்கள் பணிபுரிந்தார். ஒருவருடம் தொடர்ந்து வெளிவந்த தமிழ்உலகம் பின்னர் நின்று போயிற்று. "உதயம்" என்றபெயரில் 1997 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு மருத்துவர் எஸ்.நடேசன் அவர்களால் வெளியிடப்பட்ட மாதப்பத்திரிகை பதினான்கு வருடங்கள் தொடர்ச்சியாக வெளிவந்தது. 2010 ஆம் ஆண்டு அதுவும் மூடுவிழாவை நடாத்திவிட்டது. தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஆதரவுடன் 1999 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட"ஈழமுரசு" என்னும் மாதப்பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்தது.

இப்பொழுது அதுவும் நின்றுபோயிற்று.

இவை அனைத்தும் மெல்பேணைத் தளமாகக்கொண்டு வெளியிடப்பட்டவையாகும்.



2008 ஆம் ஆண்டிலிருந்து சிட்னியிலிருந்து, இந்தியத் தமிழரான திரு சுப்பிரமணியம் அவர்களால் பிரசுரிக்கப்படும் "தமிழ்ஓசை" என்ற மாத சஞ்சிகை, தமிழ் இலக்கிய விடயங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, தவறாமல் வெளிவந்துகொண்டிருக்கின்றது. மாத்தளை சோமு அவர்கள் அதன் ஆசிரியராகவுள்ளார். மற்றும், திரு.ஜோண் நிவேன் அவர்களின் "தென்றல்" என்ற சஞ்சிகை சிட்னியில் இருந்து வெளிவருகிறது. "தமிழ் அவுஸ்திரேலியன்" என்ற சஞ்சிகை கடந்த 2013 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்திலிருந்து சட்டத்தரணி சந்திரிகா சுப்பிரமணியம் அவர்களை முதன்மை ஆசிரியராகக்கொண்டு சில வருடங்கள் வெளிவந்தது.

1994 ஆம் ஆண்டு, சிட்னி பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டு, இப்பொழுது அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர்சங்கத்தினால் கொண்டு நடாத்தப்படும் "கலப்பை" என்னும் காலாண்டுச் சஞ்சிகை தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கின்றது. இந்தியத் தமிழரான அரவிந்தனின் "மெல்லினம்" என்ற சஞ்சிகையும் மெல்பேணிலிருந்து வெளியிடப்படுகின்றது. இவை இரண்டும் சந்தாதாரர்களுக்கு மட்டுமே விநியோகிக்கப்படுகின்றன.

சந்ததாதாரர்களுக்கு மட்டும் விநியோகிக்கப்படும் வகையில் வெளிவந்துகொண்டிருந்த "உதயசூரியன்" மாத சஞ்சிகை சிட்னியிலிருந்து திரு.குணரெட்ணம் அவர்களால் சில வருடங்கள் தொடர்ந்து வெளியிடப்பட்டது. இப்பொழுது மாத சஞ்சிகையாக அல்லாமல் அவ்வப்போது வெளிவந்துகொண்டிருக்கிறது.

2004 ஆம் ஆண்டுக் காலத்தில் "பாலம்" "தரிசனம்" ஆகிய சஞ்சிகைகளும் சிட்னியிலிருந்து வெளிவந்ததாக அறியக்கிடக்கின்றது. சிட்னியில் இருந்து பாலசிங்கம் பிரபாகரனை ஆசிரியராகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட "இன்பத்தமிழ் ஒலி" மாத சஞ்சிகை சில மாதங்கள் வெளிவந்து பின்னர் தொடராமல் போயிற்று. தெய்வீகன். பிரசாந்த் ஆகியோரால் வெளியிடப்பட்ட "எதிரொலி" மாதப் பத்திரிகை 2017 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது.

இணையத்தளச் சஞ்சிகைகளாக, உலகளாவிய விடயங்களைத் தாங்கிவரும் அக்கினிக்குஞ்சு, உள்ளூர்த் தகவல்களைப் பெரும்பாலும் உள்ளடக்கி திங்கட்கிழமைதோறும் பிரசுரமாகும் அவுஸ்திரேலிய முரசு ஆகியவை வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவை தமிழ் மொழி, இலக்கியம் சம்பந்தமான ஆக்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளிவருகின்றன.



கடந்த சில வருடங்களாக மெல்பேணிலிருந்து, சிறுவருக்கான சிற்றிதழ், "இளவேனில்", கேசீ தமிழ் மன்றத்தினரால் வெளியிடப் பட்டு வருகின்றது.

இவை தவிர இங்கு இயங்கிக்கொண்டிருக்கும் அமைப்புக்கள் தமது அங்கத்தவர்களிடையே விநியோகிக்கும் நோக்கத்திற்காக, ஆண்டிதழ்களையும், காலாண்டிதழ்களையும், மாத இதழ்களையும் வெளியிட்டு வருகின்றன. அவற்றில் அமைப்புக்களின் செய்திகள் மட்டுமன்றி, சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் என்பனவும் இடம்பெறுவது வழமையாகும். உதாரணமாக, விக்ரோறிய ஈழத்தமிழச் சங்கத்தின் "தமிழ் முரசு", அவுஸ்திரேலிய தமிழர் ஒன்றியத்தின் "அவுஸ்திரேலிய முரசு" ,கன்பரா மூத்தபிரசைகளின், "காவோலை" சிட்னி மூத்தபிரசைகள் சங்கத்தினரின் "உறவு", அவுஸ்திரேலிய மூத்தபிரசைகள் சங்கத்தினரின் "உறுதி", விக்ரோறிய தமிழ் மூத்தபிரசைகள் தோழமைக்கழகத்தின் மாதாந்த சஞ்சிகை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

ஆரம்பிக்கப்பட்டுச் சில மாதங்களிலும், சில வருடங்களிலும் தடைப்பட்டுப்போன பத்திரிகைகள், சஞ்சிகைகள் பல. அவை அவ்வாறு நின்றுபோனமைக்கு ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு காரணங்கள் இருக்கமுடியும் என்றாலும், எல்லாவற்றுக்கும் பொதுவானதும் அடிப்படையானதுமான காரணம் போகிய நிகி வளம் இல்லாமைதான். ஆனால், அவற்றில் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தமிழ்மொழி, கலை, இலக்கியம் என்பவற்றின்மீதுள்ள தணியாத அக்கறையும், அவற்றைப் பேணவேண்டும் என்ற அவர்களின் ஆர்வமும், தமிழ் இனப் பற்றும்தான் அவற்றை ஆரம்பிப்பதற்குக் காரணமாக இருந்தன என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.



சீரிதழ்களே சிற்றிதழ்கள்

பாவலர் கருமலைத்தமிழாழன்

மணிக்கொடியாம் காலமென்றே இன்றும் பேச
மணியாக இலக்கியத்தை வளர்த்தார் அன்று
அணியாகத் தமிழுக்கே ஆக்கம் சேர்க்க
அருங்குயிலைப் பாவேந்தர் அளித்தா ரன்று
தணியாத தாகத்தால் புதுமை செய்யத்
தந்தார்கள் கசடதபற எழுத்தாம் ஏட்டை
பிணிபோக்கும் அமுதமெனக் கடிதம் தென்றல்
பின்னாளில் கண்ணதாசன் வந்த திங்கே !
கவிதையெனும் கவியேட்டை தெசிணி நல்க
காவியப்பா வையைக்கபில வாணன் நல்க
கவியமுது கனிச்சோலை புன்ன கையும்
கருத்தாழத் தேனமுது வானம் பாடி
புவிவியந்த தமிழ்ப்பாவை யாதும் ஊரே
பூக்காடு பூஞ்சோலை தும்பை என்றே
நவில்கின்ற படியிங்கே இலக்கி யத்தை
நன்றாக வளர்த்தனவே சிற்றி தழ்கள் !
தென்மொழியும் தமிழ்ப்பணியும் முல்லைச் சரமும்
தெளிதமிழும் கண்ணியமும் கவிதை உறவும்
இன்னமுதாய் செந்தமிழாம் செல்வி யோடு
இலக்கியப்பீடம் கணையாழி தமிழின் ஓசை
கன்னலென இலக்கியத்தை வளர்த்து நம்மின்
கண்ணான தமிழ்மொழியை தமிழப் பண்பை
நன்முறையில் சிற்றிதழ்கள் வளர்ப்ப தாலே
நல்லொழுக்கம் அறிவுதனில் திகழ்கின் றோம்நாம்

சிற்றிதழ் - மனசு ஒரு பார்வை

பரிவை சே.குமார்

இன்றைய இணையத்தில் தினம் ஒன்றாய் மலரும் இதழ்களின் முன்னோடியே சிற்றிதழ்கள்தான் எனலாம். அன்று இணைய வசதியற்ற நிலையில், எழுதும் எல்லாருக்கும் பத்திரிக்கைகளில் வாய்ப்பு - இப்போது கூட பல பத்திரிக்கைகள் புதியவர்களைவிடப் பிரபலங்களுக்கே வாய்ப்புக் கொடுக்கின்றன என்பதை அறிவோம் - கிடைக்காத காரணத்தாலும் தங்கள் பகுதியில் எழுதும் ஆர்வமுள்ளோருக்காகவும் தங்கள் நட்புக்களுடன் இணைந்து ஆரம்பித்த சிற்றிதழ்களே அதிகம். இச்சிற்றிதழ்கள் மழைக்கால ஈசலைப் போலத்தான் நிறைய மலரும் ஆனால் நிறைவாய், நீடித்து நிற்பது ஒரு சிலவை மட்டுமே.

இப்போது கல்லூரிகளில் சிற்றிதழ்கள் வருகின்றனவா என்பது எனக்குத் தெரியவில்லை என்றாலும் இன்றைய மாணவர்கள் எல்லாம் ரீல்ஸ், யூடிப் வீடியோக்கள் எனச் செல்போனுடன் சிநேகம் கொண்டிருக்கும் போது கல்லூரிகளில் சிற்றிதழ்கள் கொண்டு வருவதற்கான வாய்ப்புகள் ரொம்பக் குறைவாகத்தான் இருக்கும் என்றுதான் தோன்றுகிறது. அப்படியே கொண்டு வந்தாலும் அன்றைக்கு மலர்ந்தவை போல் ஒரு அர்ப்பணிப்போடு தயார் செய்யப்படுமா என்பதும் கேள்விக்குறிதான், இதில் ஒரு சில விதிவிலக்குகள் இருக்கலாம்.

சிற்றிதழ்கள் குறித்து காற்றுவெளியில் சில வருடங்களுக்கு முன் எழுதியிருந்தேன். இப்போது எழுத ஆரம்பிக்கும் போது மீண்டும் அதையே எழுத வேண்டாமே என்று நினைத்ததால் சிற்றிதழ்களின் தோற்றம் வளர்ச்சி, அதை எந்த எந்தப் பிரபலம் நடத்தினார்கள் என்றெல்லாம் எழுதாமல் நாங்கள் கல்லூரியில் நடத்திய சிற்றிதழ் - கையெழுத்துப் பிரதி - குறித்து எழுதலாம் என்று நினைத்தேன்.

நாங்கள் கல்லூரியில் முதலாம் ஆண்டு படிக்கையில் நூலகம் சென்றால் ‘நீ’ என்றொரு கையெழுத்துப் பிரதி ஒரு கை நம்மைச் சுட்டிக் காட்டுவதைப் போன்ற அட்டைப் படத்துடன் மேசையில் கிடக்கும், அதுவே பெரும்பாலான மாணவர்களின் விருப்ப வாசிப்பாகவும் இருக்கும். அந்த வயதுக்கேற்ற காதல்

கவிதைகளை அதிகம் தாங்கி இருக்கும்.

அந்தக் கையெழுத்துப் பிரதியை இரண்டாம் ஆண்டு தமிழ்துறையைச் சேர்ந்த அண்ணன்கள் நவநீதன், அசோக்குமார் இருவரும் நடத்தினார்கள். ஒருவரைத் தமிழாசிரியராகவும் மற்றொருவரைச் சினிமா நடிகராகவும் காலம் மாற்றியிருக்கிறது. அதை வாசிக்கும் போது அட எவ்வளவு அழகான கவிதைகளாகத் தொகுத்திருக்கிறார்கள் எனத் தோன்றியதுடன் நாமளும் இப்படி ஒரு இதழை நடத்தினால் என்ன என்ற எண்ணமும் எனக்கும் என் நண்பன் முருகனுக்கும் எழுந்தது. அதன் காரணமாக இரண்டாவது செமஸ்டரில் எங்கள் நண்பர்கள் அறுவரை இணைந்துக் கொண்டு ‘மனசு’ என்னும் கையெழுத்துப் பிரதியை ஆரம்பித்தோம்.

அறுவரின் படைப்புக்கள் மட்டுமின்றி யார் எழுதிக் கொடுத்தாலும் இதழின் பக்கங்களைப் பொறுத்து எல்லாருக்கும் வாய்ப்புக் கொடுத்தோம். முதல் இதழைக் கல்லூரி நூலகம் மட்டுமின்றி துறைச் சுற்று, பொது நூலகம், மேல்நிலைப்பள்ளி நூலகம் என கொஞ்சம் விரிவாகக் கொண்டு சென்றோம். அதற்கான பயனாக மனசு எல்லோர் மனதிலும் நிற்க ஆரம்பித்தது. பேராசிரியர் போற்றும் இதழாக உயர்ந்து நின்றது. பொதுமக்களிடமிருந்து படைப்புக்களைப் பெற்று பிரசுரித்ததால் எல்லாரும் விரும்பும் இதழாகவும் மாறியிருந்தது.

இதழ் தயாரிப்புக்காக நண்பனின் வீட்டில் இரவு முழுவதும் பேப்பரில் நாலு பக்கமும் கோடுகள் போட்டு எழுதுவதுண்டு. எழுதியதை மறுநாள் காரைக்குடிக்கு கொண்டு சென்று – அங்குதான் காப்பி எடுக்க விலை குறைவு – ஆறு காப்பிகள் போடுவோம். இதழ் வெளியான பின் அடுத்த இதழுக்கான வேலைகளை ஆரம்பித்து விடுவோம். எங்களை மனசு கோஷ்டி என அழைக்கும் ஆரம்பித்திருந்தார்கள் கல்லூரி நட்புக்கள்.

மனசு வெளியான ஒரு சில மாதங்களில் ரோஜா, கவி’தா’, அன்னம் என்றெல்லாம் புதிய கையெழுத்துப் பிரதிகள் மற்ற துறை நண்பர்களால் ஆரம்பிக்கப்பட்டன. இதில் ரோஜா முழுக்க முழுக்க கவிதை இதழாக மலர்ந்தது. ரோஜாவை நடத்தியவர் இப்போது தினத்தந்தியில் பணிபுரிகிறார்.

மற்ற இதழ்கள் எல்லாம் ஒரு சில நண்பர்கள் கூட்டாக இணைந்து நடத்தியபோது கவி’தா’வைப் பொருளாதாரம் படித்த பரக்கத் என்னும் ஒரு மாணவர் மட்டுமே நடத்தினார். மிகச் சிறப்பான இதழாகக் கொண்டு வந்ததுடன் கல்லூரியில் ஒரு சிறுகதைப் போட்டி நடத்தி, அதில் வென்ற கதைகளுக்கு சிறப்பு விருந்தினர்களை அழைத்து வந்து விழா வைத்து, பரிசு கொடுத்ததுடன் பத்துக் கதைகளைத் தொகுத்து புத்தகமாகக் கொண்டு வந்தார். இப்போது அவர் எங்கிருக்கிறார் என்ன வேலை பார்க்கிறார் என்பது தெரியவில்லை.

என்ன காரணமோ தெரியவில்லை மற்ற இதழ்கள் எல்லாம் பாதியில் நிறுத்தப்பட்டன. நீ- இதழ் இறுதி ஆண்டு வரை தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. அதேபோல் எங்களது ‘மனசு’ம் நண்பர்களுக்குள் பிரச்சினைகள் எழுந்து ஆறு பேர் மூன்று பேரான போதும்கூட இறுதி ஆண்டு வரை தொடர்ந்தது என்பதுடன் ஒவ்வொரு இதழிலும் அந்த நேரத்தில் பிரபலமான ஒரு செய்தியின் – அரசியல், கல்வி, சினிமா - அடிப்படையில் பேராசிரியர்கள், பொதுமக்கள், மாணவர்கள் எனக் கருத்துக் கணிப்பு நடத்தி அதையும் பிரசுரித்து வந்தோம். அதற்காகப் பேராசிரியர்களிடம் பாராட்டுப் பெற்றோம்.

எங்கள் இதழ் எப்படியிருக்க வேண்டும்... என்னென்ன வைத்தால் சிறப்பாக இருக்கும்... என்பதையெல்லாம் எங்களுக்கு எங்கள் பேராசான் மு.பழனி இராகுலதாசன் ஆலோசகராக இருந்து சொல்லிக் கொடுத்தார்.

அதே கல்லூரியில் நானும் என் நண்பனும் – இப்போதும் அங்குதான் பணி செய்கிறான் - வேலை பார்த்தபோது எங்களின் ஆசிரியர்கள் உங்க ‘மனசு’ பத்திரிக்கையை நீங்க ஆலோசகரா இருந்து பசங்களை வைத்துக் கொண்டு வாங்களேன் என்று சொன்னபோது எங்கள் இதழ் காலம் கடந்தும் அவர்கள் மனதில் நிற்கும் விதமாக ஏதோ செய்திருக்கிறோம் என்று தோன்றியது.

அதேபோல் இப்பவும் ஒரு சில கல்லூரி நட்புக்களிடம் பேசும்போது மனசு குறித்துப் பேசுவது ரொம்பவே மகிழ்ச்சியாக இருக்கும்.

மனசு ஆசிரியர் குழுவில் இருந்த நண்பர்களுடன் தொடர்பு என்பது சுத்தமாகக் குறைந்து விட்டது, சிலர் எங்கிருக்கிறார்கள் என்பது கூடத் தெரியாது.

மனசு இதழை அச்சுப்பிரதியாக இல்லாவிட்டாலும் இணைய இதழாகக் கொண்டு வரலாம் என்ற ஆசை எனக்குள் துளிர் விட்டுக் கொண்டே இருக்கிறது, இருந்தாலும் யாருடன் நட்பில் இல்லாத போது அதைச் செய்வதென்பது இயலாத காரியமே.

ஒருவேளை அப்படி நடக்க வேண்டும் என்றிருந்தால் கண்டிப்பாக நடக்கும்தானே...

சிற்றிதழ்களின் வளர்ச்சிப் பாதையில் ஈழத்து முஸ்லிம் எழுத்தாளர்கள் ஒரு பார்வை!

ஏ எம் கஸ்புள்ளா

ஈழத்து இலக்கிய பரப்பில் எழுத்தாளுமைகளின் ஆரம்ப தளமாக,களமாக இலக்கிய இன்ப பசிக்கு தீனிபோட்டது சிற்றிதழ்களாகும்.

சமூகத்தில் இலக்கிய வாதியென ஒருவர் முத்திரை பதிக்கப் பட்டபோதிலும் 'தான் கற்ற ஆரம்ப பாடசாலையை எவ்வாறு மறக்க முடியாதோ; அதுபோல ஒருவரின் முதல் ஆக்கம் அது பிரசுரமான இதழ் என்பவற்றை மறத்தல் என்பது எவருக்குமே முடியாதது

1970 இலும் அதற்குப் பின்னாலும் புலமை சார்ந்த எழுத்தாளர்களை சுமந்து சிற்றிதழ்களின் வரவு அதிகரித்த தன்மையை தகவல்களின் அடிப்படையில் பார்க்கலாம்.

புதுக்கவிதையின் தோற்றமும் அது கொண்ட வேகமும் பல எழுத்தாளர்களின் வளர்ச்சிக்கு வித்திட்டது. 1970 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பேராசிரியர் எம்.ஏ நுஃமான் அவர்களின் இணைத்தொகுப்பில் வெளியான கவிஞன் சிற்றிதழ் காத்திரமான படைப்பாளிகளை கொண்ட ஒர் சிற்றிதழாகும்.

1970 ற்குப் பின்னால் ஆர். எம். நௌஷாத்தின் 'தூது' மற்றும் கவிஞர் அல் அஸூமத்தின் பூபாளம்

போன்ற சிற்றிதழ்களும் குறிப்பிட்ட இதழ்களுடன் குதூகலம் கண்டு பின் நின்று போனது . இவ்வாறான சிற்றிதழ்கள் பொருளாதார சிக்கல்கள்,அரசியல் மாற்றங்கள்,வாசகர்கள் ஒத்துழையாமை, நாட்டில் ஏற்பட்ட பிணக்குகள் என்பன அதன் நீடியாத தன்மைக்கு காரணமாக அமைந்திருக்கும் என்ற ஊகிப்புக்கு எம்மால் வர முடியும். அதையும் தாண்டி பல தஸாப்தங்களை கடந்து வசீம் அக்ரமின் 'படிகள் ' மற்றும் றிம்ஸா முகம்மதின் பூங்காவனம் போன்ற சஞ்சிகைகள் நிலையான இடத்தை தக்க வைத்திருப்பது பாராட்ட வேண்டும்.

இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்களின் இலக்கிய சிற்றிதழ்களின் கருப்பொருளை நோக்குகின்ற போது அது சமயம் சார்ந்த,சமூகம் சார்ந்த அவர்களது வாழ்வியல் சார்ந்த பிரச்சினைகள் எடுத்துச் சொல்வதாக அமைந்துள்ளது. மேலும் காதலை வெளிப்படுத்துகின்ற தனிக் கவிதை இதழாகவும் பல்சுவை இதழாகவும் வலம் வந்ததை அவதானிக்கலாம்.

சங்சிகைகளின் அமைப்பைப் பொறுத்தவரை ஆரம்பமாக கையெழுத்துப் பிரதியாகவும் பின்னர் ரோனியோ தட்டச்சாகவும் பரிணாமம் பெற்றுள்ளது. இன்று அது நவீன முறையில் கணனி மூலம் பிரதிகள் செய்யக் கூடிய வழிவகைகள் நாளுக்குநாள் வளர்ந்துள்ளதை காணலாம்.

இச்சிற்றிதழ்களின் வெளியீட்டு அமைப்பானது

மாத இதழ்,இருமாத இதழ்,காலாண்டு இதழ், அரையாண்டு இதழ், வருட இதழ் என

பயணித்து நிற்பதையும் அறியலாம்.

இங்கு சில இதழ்களை அதன் வளர்ச்சியை பற்றிய சிறியளவிலான தகவல்களை பகிர்ந்து கொள்ள விளைகிறேன்

அந்த வகையில் சிற்றிதழ்

‘ தடாகம் ‘ கலைமகள் ஹிதாயாவை ஆசிரி

யராகவும், அஷ்ரஃபா நூர்தீனை துணை ஆசி

ரியராகவும் கொண்டு, சாய்ந்தமருது ... கல்

முனை என்ற முகவரியிலிருந்து

வெளிவந்தது 1989ஆம் ஆண்டாகும்.

இந்த சிறப்பிதழின் அட்டையை

தமிழிலும் ஆங்கிலத்திலும் கவிதை எழுதிய

கல்ஹின்னை எம்.எச்.எம்.ஹலீம்தீன் அலங்கரிக்கிறார். இவ்விதழில் குறிஞ்சி தென்னவன் - ஏ.பி.வி.கோமஸ் - மேமன்கவி -

அந்தனிஜீவா - ஸ்டெலா மேரி உள்ளிட்ட பலரும் எழுதியுள்ளனர்.

நிதானிதாசன் - ஆர்.எம்.இம்தியாஸை பிரதம ஆசிரியராகக் கொண்டு , டி.எஸ்.சேனாநாயக்கா வீதி...

கண்டி யிலிருந்து ‘ விடிவு ‘ இலக்கிய சஞ்சிகை வெளிவந்துள்ளது.

1988 வது இதழில் கலா விஸ்வநாதன் , ஈழகணேஷ் , கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ் ,

நாகபூஷணி கருப்பையா , கோவை அன்ஸார்

உள்ளிட்ட பலரின் ஆக்கங்களை அது சுமந்து வந்தன.

மருதமுனையிலிருந்து மருதமலர் என்ற சஞ்சிகையும் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றதாகும்.

‘ தடம் ‘ மூன்றாம் இதழ் இது 1993 இல் எம். பௌஸரை ஆசிரியராகக் கொண்டு

அக்கரைப்பற்றிலிருந்து வெளிவந்துள்ளது. சசிதரன்- மு.பசீர் - எம்.கே.எம்.ஷகீப் - கவிப்பிரியா நிஷா போன்றோரின் ஆக்கங்களும் இதில் இடம்பெற்றுள்ளன.

‘இளம்பிறை ‘ இலக்கிய சஞ்சிகை , ஆதிருப்பள்ளித் தெரு - கொழும்புவிலிருந்து 1960

களின் நடுப் பகுதியில் வெளிவர ஆரம்பித்துள்ளது. பின்னர் 1971இல் மார்ச் இதழாகவும் இவ்விதழ் மலர்ந்தது

இதன் ஆசிரியர் எம்.ஏ.ரஹ்மான் தரமான பல இலக்கிய நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

சிங்களம் பேசும் மக்கள் செறிவாக வாழும்

அநுராதபுரத்திலிருந்து , தமிழ் இலக்கிய சஞ்சிகையான ‘ படிகள் ‘ வெளிவர ஆரம்பித்து , அதன்பொன்மலர் பூத்திருக்கிறதென்றால் அது சாதாரணமானதொரு விடயமல்ல.

இலக்கியத் தடம் பதிந்திருந்த வடமத்திய மாகாண சிறப்பு நகரில் எழுபதுகளில் கலை- இலக்கியத்தை தூக்கி நிறுத்தியதில் ,

அநுராதபுரம் கலைச் சங்கத்தினதும் , அதன் இணைச் செயலாளர்களான அன்பு ஜவஹர்ஷா...பேனா மனோகரன் ஆகியோரினதும் பன்முகப்பட்ட தொடர் பங்களிப்பை வரலாறு என்றும் பேசும்.

அதன் நீட்சியாக ‘ படிகள் ‘ வேரூன்றியமைக்கு இலக்கியவாதியும் அரசபணியாளருமான

வஸீம் அக்ரம் ஆசிரியராக அமர்ந்த

தும் அவருக்குக் கிடைத்த பக்கபலமும் காரணமெனலாம்.

இலக்கியப் பணி என்பது பெயர் ஆசைக்காகச் செய்யும் ஒரு காரியமல்ல.அதற்கொரு சமூகப் பொறுப்

புண்டு.அதை விளங்கிக் கொண்டதனால்

தானே...சமூகமாற்றம் வேண்டி நிற்கும்

கல்வி - இலக்கியம் சார்ந்த மனித நேயப் பேராசிரியர்களான

சோ.சந்திரசேகரம் , எம்.ஏ. நுஃமான் ஆகி யோர் அட்டையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

ஐம்பதின் வரவோடு அச்சீட்டுப் பிரச்சினைகளும் மேற்கிளம்பியுள்ளன.ஆனாலும்

‘ மல்லிகை ‘ யும் டொமினிக் ஜீவாவும் எதிர் கொள்ளாத பிரச்சினைகளா இவை ...! என்று எண்ணத் தோன்றுகிறது.

எதையும் போராடித்தான் வெல்ல வேண்டு

மென்பதுதானே யதார்த்தம்.

கிண்ணியா மண்ணில் பல சிற்றிதழ்கள் கையெழுத்துப் பிரதியாகவும் கணினி வடிவமைப்புடன் வெளியீடு செய்யப்பட்டுள்ளது ‘மலர்விழி ‘ எஸ் ஏ.முத்தலிப் பிரதம ஆசிரியராகவும் எம். ஐ.எம். தாஹிர் உதவி ஆசிரியராகவும் கொண்டு 1958 இல் கையெழுத்துச் சஞ்சிகையாக வெளியானது

1961இல் ‘முத்து’ மாத இதழ் எம்.ஐ.எம் தாஹிர் ஆசிரியராகவும் உதவி ஆசிரியராக ஸாலிஹ் அவர்களும் இணைய தமிழ் எழுத்தாளர் சங்கத்தால் வெளியீடு செய்யப்பட்டது.

‘தியாகி’ மாத இதழ் 1964 இல் முற்போக்கு வாலிபர் மன்றத்தால் வெளியீடு செய்யப்பட்டது.இதன் ஆசிரியராக எஸ் ஏ முத்தலிப் சேர், உதவி ஆசிரியராக எம். ஐ.எம். தாஹிர் சேரும் இணைந்து இதழை வழி நடத்தினார்கள்.

அவர்களின் காலத்திலே அச்சஞ்சிகைகள் குறிப்பிட்ட இதழ்களோடு நின்று விட்டது.

ஊர்க் குருவி என்ற சிற்றிதழ் கிண்ணியா அமீரலியை ஆசிரியராகக் கொண்டு 1988 இல் பயணித்தது. அதுபோன்று 1987 இல் குறுநகை வெளியானது ஆரம்ப காலத்தில் இதன் பிரதம ஆசிரியராக எஸ் ஏ முத்தலிப் சேர் அவர்கள் கடமை செய்தார் அதைத் தொடர்ந்து அதன் பிரதம ஆசியராக ஏ.எம். ஏ.றசூல்

அச்சஞ்சிகை வழிப்படுத்தினார்.அதன் முதல் சிற்றிதழுக்கு திக்குவலை ரதீமா,மதமகன் ஜாபீர்,எம். ஐ.எம். ஜாபீர்,திருமதி லரீனா ஏ.லலாம்,எம். ராஜன், நசுருதீன், கலைக்காதலன்,நஸார்,மருதூர் ஜமால்தீன் ,சிட்மி,நவ்பர்,ஏக்கணமலி,நூருல் ஹஸீனா ஹனிபா போன்றோரின் ஆக்கங்களைச் சுமந்து குரு நகை வெளிவந்த காலாண்டு கையெழுத்து சஞ்சிகையாகும். இதுவும் குறிப்பிட்ட வருடங்களுடன் மறைந்து போனது.

சமயம் சார்ந்த பெண்புத்திமாலை என்ற சஞ்சிகைகளும் அக்காலத்தில் வரவேற்பு பெற்றதாக விளங்கியது.

நிகழ் காலத்தில்

பேனா,நிகழ் காலம்,எறும்புகள் அண்ணல் மற்றும் சமயம் சார்ந்த சஞ்சிகைகளும் இலக்கிய பரப்பில்

நிலையான இடத்தை வகித்தன

மேலும் றிம்ஸா முகம்மத் என்பவரை பிரதம ஆசிரியராகவும் எச். எப் றிப்னா துனணயாசிரியராகவும் கொண்டு ‘பூங்காவனம்’ என்ற இலக்கிய சஞ்சிகை பல இதழ்களை கடந்த நிலையில் பல காத்திரமான எழுத்தாளர்களை சுமந்து வீறு நடைபோடுகிறது. ஒரு பெண்ணின் தனி ஆளுமையை இவ்விதழ் எடுத்துக் காட்டுகின்றது. பாராட்ட வேண்டிய தருணமாகும்.

அதுபோன்று மூதூர் முகைதீன்

அவர்களை ஆசிரியராக கொண்டு

இறுதியாக 2015 இல் வெளியிடப்பட்ட ஓசையில் அறிவியல் மேதை அப்துல் கலாமின் அட்டைப் படத்தை தாங்கி உள்ளே

மருதூர் ஜமால்தீன்

தாமரைத் தீவான்

கலாபூஷணம் கிச்சிலான்

மூதூர் கலைமேகம்

தொன்மையூர் கவிராயர்

தோப்பூர் பாசிர்

எம.எம்.அலி அக்பர்

ஜெ.ரஸாட் அஹமட்- கட்டுரை

மாவலி மைந்தன்

எம். நிகாஸ் நெய்தல் நிலா

கலாபூஷணம் சீ.என்.துரைராஜா

பாத்திமா சபி மூதூர்

யாழினி மொரட்டுவ

நல்லை அமிழ்தன்

ஏ.சி.ஜரீனா முஸ்தபா

எம். வை.எம். மீஆத்

சமயவேல்

ரிம்ஸா பர்வின் -அஸ்லம யகலதன்ன

ஏ.சீ.எம். இப்றாஹிம்

கவிமணி அ.கௌரிதாசன்

ஏ.எம் கஸ்புள்ளா போன்றவர்களின் கவிதையும் அச்சஞ்சிகையை அலங்கரித்துள்ளது. இதுவொரு கவிதை சிற்றிதழ் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் 2005 தொடக்கம் 2015 வரை வெளியான ஓசை சிற்றிதழ்களை ஒன்றினைத்து அதில் எழுதிய 100 கவிஞர்களின் கவிதைகளை உள்ளடக்கி சங்கமம் என்ற கவிதை தொகுப்பை வெளியீடு செய்ததும் சிறப்பான விடயமாகும். இவ்வாறு முஸ்லிம் எழுத்தாளர்களின் சிற்றிதழ்களின் வளர்ச்சிப் போக்கினை அறியலாம்.

கலாவல்லி

கோவிலூர். செல்வராஜன்

1970 களின் ஆரம்பம்,இலங்கையில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பிரதமராக இருந்து ஆட்சி செய்கின்றார். அவரது தலைமையின் கீழ் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி நாட்டை ஆளுகின்றது.பல திட்டங்களையும்,புதிய சட்டங்களையும் நாடாளுமன்றம் அமுல் படுதுகின்றது.

அப்படி கொண்டுவரப்பட்ட பல சட்டதிட்டங்களில் மக்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்களும் இருந்தன. குறிப்பாக விவசாயிகளும்,அதிலும் பயிர்செய்கைகாரருக்கு மிக அனுகூலமான காலமாக இருந்தது. அதேபோல் பத்திரிகை துறைக்கும் அது ஒரு நல்ல காலமாகவே இருந்தது.

அதிலும் தமிழ் பத்திரிகை துறைக்கு அதுவொரு பொற்காலம். காரணம்,அரசு இந்திய பத்திரிகைகளை இறக்குமதி செய்ய தடை விதித்து இருந்தது. தமிழகத்திலிருந்து ஆனந்தவிகடன்,குமுதம்,கல்கி போன்ற சஞ்சிகைகள் இலங்கையில் இறக்குமதி செய்ய தடை இருந்தது.

இதனால் கொழும்பில்,யாழ்ப்பாணத்தில் பல தமிழ் சஞ்சிகைகள் வெளிவரத் தொடங்கின. 1974 ம் ஆண்டு கொழும்பு மெய்கண்டான் நிறுவனத்தால் "கலாவல்லி" என்ற சஞ்சிகை மாத சஞ்சிகையாக வெளிவரத்தொடங்கியது. மெய்கண்டான் நிறுவனத்தின் ஸ்தாபகர் திரு. இரத்தினசபாபதி அவர்கள் தனது முழு ஆதரவையும் கொடுத்து தனது மகன், திரு குமரகுருநாதன் அவர்களை ஆசிரியராக நியமித்து கலாவல்லி சஞ்சிகையை வெளியிட்டார். பின்னர் நாளடைவில் திரு குமரகுருநாதனே சஞ்சிகையின் முழுப்பொறுப்பையும் ஏற்று தனக்கு உதவி ஆசிரியர்களாக சிலரை நியமித்துக் கொண்டார்.

அப்படி உதவி ஆசிரியர்களாக இருந்தவர்கள் திரு. அ.தேவதாசன், திரு, வே .சுகுமாரன், திரு. கோவிலூர் செல்வராஜன் ஆகியோர். தேவதாசனும்,சுகுமாரனும்

கொழும்பில் கிறீன்லாய்ஸ் வங்கியில் பணிபுரிந்தவர்கள். கோவிலூர் செல்வராஜன், கொழும்பு சிவா என்டர்ரைமெண்ட்சில் இருந்தார். தமிழ் பொப் இசை நிகழ்சிகள் பிரபலமாக இருந்த காலம் அது. பல நிகழ்ச்சிகளை சிவா என்டர்ரைமெண்ட்ஸ் நடத்தியது.

மாத சஞ்சிகையாக வெளிவந்த கலாவல்லி, ஒரு ஜனரஞ்சக இதழாக வெளிவந்தது. சிறுகதை,தொடர்கதை, புதினங்கள்,கட்டுரை, கேள்விபதில்,நேர்காணல், அரசியல் என்று பல தளங்களில் பரிணமித்தது. இதற்கு ஆசிரியர் குழுவினர் அளித்த ஒத்துழைப்பும்,அவர்கள் ஒவ்வொருவரும் எடுத்துக்கொண்ட பொறுப்புகளுமே

காரணம் என்று சொல்லலாம் தமிழக சஞ்சிகைகளில் பெரும் நாட்டம் கொண்டிருந்த வாசகர் மத்தியில் கலாவல்லியை கொண்டு சேர்க்க பகீரதப் பிரயத்தனம் எடுக்க வேண்டி இருந்தது. அதற்கு மெய்கண்டான் பதிப்பகம் உறுதுணையாக இருந்தது. வண்ணத்தில் அட்டைப்படம், ஆக்கங்களுக்கு தக்கபடி படங்கள், தேவைப்படும் இடத்தில் மூன்று வண்ணத்தில் .படங்கள் என்று அனைத்தையும் பதிப்பகம் கச்சிதமாக செய்து தந்தது. அன்று பிரபலமாக இருந்த எழுத்தாளர்களும் தங்களது படைப்புகளை அனுப்பினார்கள்.

இலங்கையில் பிரபலமாக இருந்த வரைஞர்கள் படங்களை வரைந்தார்கள், அவர்களில் திரு கூனா ,மொரைஸ் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

அன்று வடக்கு,கிழக்கு,மலையகம் மற்றும் கொழும்பு மாவட்டம், என்று பல இடங்களிலுமிருந்து எழுத்தாளர்கள் ஆக்கங்களை அனுப்பினார்கள். கலாவல்லி ஒரு கலை இலக்கிய சஞ்சிகையாக வெளிவந்து கொண்டிருந்த காலக்கட்டத்தில் இந்திய இலங்கை கூட்டுத்தயாரிப்பில் பைலட் பிரேம்நாத் திரைப்படம் இலங்கையில் தயாரிக்கபட்டுக்கொண்டிருந்தது. அந்த படத்தில் நடிப்பதற்கு இலங்கை வந்திருந்த சிவாஜி கணேசன், மேஜர் சுந்தரராஜன்,விஜயகுமார்,தேங்காய் சீனிவாசன்,பிரேம் ஆனந்த் ,ஆச்சி மனோரமா,ஸ்ரீ தேவி,சத்தியபிரியா இயக்குனர் ஏ. சி. திருலோகச்சந்தர்,ஆகியோரை நேர்காணல் செய்த கலாவல்லி அந்த திரைப்படம் பற்றிய செய்திகளையும் வெளியிட்டது.

காவலூர் ஜெகநாதான்,கோவிலூர் செல்வராஜன் ஆகியோரின் தொடர்கதைகள் கலாவல்லி சஞ்சிகைக்கு வாசகர்களை அதிகரிக்கச் செய்தன. “சொன்னார்கள்” என்ற தலைப்பில் அரசியல் புதினங்கள்,,

“தேவா அமிர்தம்” பிரயாண கட்டுரை, திரைப்பட விமரசனம், நகைச்சுவை துணுக்குகள்,ஈழத்து கலைஞர் நேர்காணல், என்று கதம்பமாக கலாவல்லி திகழ்ந்தது. மாதம் எட்டாயிரம் பிரதிகளை அச்சிட்டு வடகிழக்கு,மலையகம், கொழும்பு மாடவட்டம் ஆகிய இடங்களுக்கு விநியோகம் செய்ய முடிந்தது. கலாவல்லி தனது மூன்றாவது ஆண்டு நிறைவை பெரிய விழாவாக 1977 ம் ஆண்டு கொண்டாடியது. வெள்ளவத்தை ராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் முழுநாள் பல்சுவைநிகழ்ச்சிகளை உள்ளடக்கி “செந்தூரம்” என்ற தலைப்பில் கலாவல்லி நடத்தியது.

இந்த நிகழ்வில்தான் முதன் முதலில் அன்று இலங்கையில் மிகப் பிரபலமாக இருந்த தவில்,நாதஸ்வர வித்வான்களின் புதல்வர்களை தலைநகருக்கு அழைத்து,அவர்கள் கச்சேரியை சிறப்பாக செய்ய களம் அமைத்து கொடுத்தது கலாவல்லி.

மண்டபம் நிறைந்த மக்களுடன் கலாவல்லியின் மூன்றாம் ஆண்டு நிறைவை முன்னெடுத்து கொண்டடியாடியா செந்தூரம் நிகழ்ச்சி சிறப்பாக நடந்தேறியது. இதற்கு ஆசிரியர் குழுமத்தின் சிறப்பான ஒழுங்கமைப்பும் ஒரு காரணம்.

அடுத்த ஆண்டுகளில் கலாவல்லிக்கு, ஒரு சகோதர சஞ்சிகையாக “நட்சத்திர மாமா” என்ற சிறுவர்களுக்கான ஒரு சஞ்சிகையும் வெளிவந்தது. இது தமிழ்நாட்டு, அம்புலிமாமா சஞ்சிகைபோல் இருந்ததால் அதுவும் தனக்கென ஒரு வாசகர் வட்டத்தை பிடித்துக் கொண்டது. இப்படி நன்றாகப் போய்க்கொண்டிருந்த ஈழத்து சஞ்சிகைகளின் வளர்ச்சியில் 1977 ம் ஆண்டு ஆட்சிமாற்றம் ஏற்பட்டபின் தடை ஏற்பட்டது. காரணம் புதிய அரசு இந்தியப் பத்திரிகைத் தடையை நீக்கியதால். மீண்டும் தமிழ் நாட்டு சஞ்சிகைகள் இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்டன, இலங்கை தமிழ் வாசகர்கள் எப்பொழுதும் இந்திய சஞ்சிகைகளுக்கு முன்னுரிமை கொடுப்பவர்கள். அதை அவர்கள் தொடர்ந்தும் செய்ததால் ஈழத்து சஞ்சிகைகள் தொடர்ந்து வெளிவர முடியாமல் மூச்சுவாங்கியன கலாவல்லி அடுத்த ஒரு சில ஆண்டுகள் தொடர்ந்தது. அதன் ஆசிரியர்குழுவில் இருந்தவர்களும்,வெளிநாடு,மற்றும் இலங்கை வானொலி என்று வேலை வாய்புகள் பெற்று சென்றதால் அது தொடர்ந்து வெளிவர முடியாமல் போனது. இது காலத்தின் கட்டாயமும் கொடுமையுமே என்றால் அது மிகை இல்லை.

சிற்றிதழ்களில் எம்மவரின் இலக்கியம்

பொலிகை ஜெயா (சுவிஸ்)

சிற்றிதழ்களில் எம்மவர் இலக்கியம் என்னும் இக்கட்டுரையில் எல்லா சிற்றிதழ்கள்,சிறு பத்திரிகைகள்,ஏடுகள்,பிற போன்றனவற்றின் பெயர்கள்,பதிவுகளை முழுமையாக வரைய முடியாது.ஓரளவு என் மனதுள் குடிகொண்டனவற்றை மட்டும் தொகுத்து தந்துள்ளேன்.

சிற்றிதழ் என்னும்போது! இது உலகெங்கும் அந்தந்த காலச் சூழலுக்கேற்ப பிறந்து,பரந்து,விரிந்து, மறைந்தும் வருகிறது.சிற்றிதழ் என்ற பெயரிலிருந்தே நாம் அது சிறியதாகத்தான் இருக்கும் என்பதை இலகுவில் புரிந்து கொள்ளலாம்.இதில் கையெழுத்துப் பிரதிகள்,சிறிய இதழ்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றன அடங்கும்.

இலங்கையில் முதல் முதல் "உதயதாரகை"என்ற சிற்றிதளே 1841ல் வெளிவந்ததென அறிய முடிகிறது. செய்திகளை உடனுக்குடன் சுருக்கமாக,தெளிவாகத் தருவதோடு! விலையும் குறைவு,இலகுவில் கொஞ்ச நேரத்துள் படித்து முடிக்கலாம்.இப்படி ஒரு இலவச சிற்றிதழ் "20 நிமிடம்" என்னும் பெயரில் சுவிஸில் வெளிவருகின்றது. அநேகரும் இதை படிப்பதை அவதானிக்க முடிகிறது.

அக்கால சிற்றிதழ்களில் தல்ஸ் தோயு, தஸ்தஜேவிஸ்கி,தாதாகூர்,காந்தி என்போர்கள் எழுதினார்கள்.பெரும்பாலும் பரதேச நாடுகளில் பல சிற்றிதழ்கள் வெளிவந்து மறைந்த போதும்!தற்போதும் வந்துகொண்டுதான் இருக்கின்றன. முக்கியமாக எமது போராட்ட வரலாறுகள்,தாம் வாழும் நாடுகளின் அரசியல்,சமூகம்,கலாச்சாரம்,கல்வி போன்றனவற்றை உணர்ச்சிப் பெருக்கற்று சுவைபட இலக்கியமாக பலர் தருகிறார்கள்.

இலக்கியப் படைப்புக்கள்,கலைகளில் ஏற்படும் இடைவெளிகள் நுகர்வோரை உள்வாங்க வைக்கும் ஓர் உத்தியே.இடைவெளிகள் வாசிப்பை தூண்டுவதாக அமைகிறது.சொல்லி முடிக்கப்படாத படைப்புக்கள் வாசகர்களின் ஆர்வத்தை தூண்டி ஓர் எதிர்பார்ப்பை கொண்டுவருகிறது. உளவியல் நிலையில் தேடலை அருட்டி விடுகிறது.இப்போது வந்து கொண்டிருக்கும் சின்னத்திரை தொடர் நாடகங்களின் அங்கம் பகுதி முடிவடைந்து,ஆவலுடன் அடுத்த பகுதிக்கான காத்திருப்பு போன்று.

ஓர் இலக்கியத்திற்கு அழகியலுரு கொடுக்க இடைவெளி துணை நிற்கிறது.எமது தமிழ்ச் செய்யுள் மரபில் இடைவெளியை நிறைவு செய்யும் ஓர் உபாயமாக "அந்தாதி அமைப்பு" உருவாக்கம் பெற்றது என்கிறார்கள். ஒரு செய்யுளின் இறுதிச்சொல் தொடர்ந்து வரும் செய்யுளின் முதற் சொல்லாக அமைத்தலே அந்தாதி தொடராகிறது.இவைகள் சிறிது கடுமைகொண்ட இலக்கியமாக இருப்பினும் வரவேற்பை பெற்று நிற்கின்றன.இப்படி நீண்ட கட்டுரையற்று குறும் இலக்கிய வடிவங்களை சிற்றிதழ்களே தாங்கி வரும். அத்தோடு` இது சிற்றிதழுக்கான கனத்தையும் கொடுக்கின்றது.

நம்மவர்களின் இலக்கிய இதழ்களாக பலர் அறிந்தளவில் பார்வையை செலுத்தினால்`கனடாவில் திரு. செல்வத்தை ஆசிரியராக கொண்ட"காலம்" காத்திரமான பங்கை 1990ல் இருந்து வகித்து வருகிறது.எமது போராட்ட வரலாறுகளுடன் ஒட்டிய புகலிடத்தமிழர்களின் பிரச்னைகளை காத்திரமாக சொல்லுகிறது.இதில் பலர் வரைந்தாலும் ஈழக்கவி சேரன், அ.முத்துலிங்கம், சோபாசக்தி,கே.நவம் இன்னும் பலரின் இலக்கிய கட்டுரைகள்,கதைகள், கவிதைகள் சிறப்பின் நிலையில் காணப்படுகின்றன. கே.நவத்தின் நான்காவது பரிமாண சிற்றிதழும் 1991 ல் இருந்து 1994 வரை முழுக்க முழுக்க இலக்கியத்துள் நின்று நகர்ந்தது.அத்தோடு!இதில் மொழிபெயர்ப்பு கவிதைகள்,கட்டுரைகளையும் தாங்கி வந்தது பேசுபொருளாக இருந்தது.

பிரான்ஸிலிருந்தும் பல சிற்றிதழ்கள்.இவற்றில் "உயிர்நிழல்,நடு" போன்றன பல இலக்கிய அம்சங்களை உள்வாங்கி நின்றன.உயிர் நிழலில் பல இலக்கிய வாதிகளின் கட்டுரைகளை காண முடியும்.மறைந்த கே.டானியல் அவர்கள் பற்றிய கட்டுரையில் ★பேனாவை கையில் எடுத்து வைத்துக்கொண்டு அப்பேனாவுக்கு தீனி போட சமூகத்தை மேலாக நோட்மிட்டு தசை உணர்வுகளை பேனா வசப்படுத்தி எழுதும் வகை பலரை கவரும் எனவும்,தாழ்ந்த சாதியினர் குளத்து மீனே உண்ண வேண்டும்.சுறாமீன் நெய்க்கு ஆசைப்படக் கூடாது என்ற மேட்டுக் குடியினரின் மனவோட்டத்தை அப்பட்டமாக இலக்கிய ரசனையில் தந்திருந்தது.★ வி.ரீ.இளங்கோவனின் தலித் இலக்கிய கட்டுரைகளும்

பல அறியா விடயங்களை கண்முன் நிறுத்தின.

இலண்டன் சுடரொளி,1990 ல் வந்த இலண்டன் முரசு,அந்திமழை,இலக்கிய தீபம் இப்படி பலவும் பல் சுவை சிற்றிதழ்களாக அப்பப்போ வெளிவந்து செய்திகளை வாசகர் மனதுள் போட்டு சென்றன.

இலக்கியத்தில் இற்றைக்கு எமது பழமை வாய்ந்த அகத்தியரின் அகத்தியத்திலிருந்து பரிபாடல்,முதுநாரி தொடங்கி சங்க இலக்கிய தொல்காப்பியம்,புராணம்,பதினெண் கணக்கு,கலித்தொகை, புற நானூறு,நாலடியார் பாடல்,குறள் இப்படியான இனிக்கும் இலக்கிய இரசனைகளை உள்வாங்கி மு.அனாதரட்சகன் என்ற எழுத்தாளர் தனது பாணியில் தமயந்தி திருமணத்தில் அவள் நளனுக்கு மாலை சூட்டலை இலக்கிய நயம் வழிய எழுதியிருந்தார். மாலையுடன்,நிட்சயமற்ற மனநிலையில் அவள் மனமோ விருப்பு காதலன் நளனைத் தேடுகிறது. மணமாலையை தமது கழுத்தில் வாங்க வந்திருந்த இந்திரன்,தேவர்கள், அரக்கர்கள்+அரசர்கள் என சகலரும் நளனின் வடிவத்திலேயே உருமாறி உட்கார்ந்து இருந்தார்கள்.இவர்களில் யார் நளன் என்பதை கண்டு பிடிப்பது முயற்கொம்பு.இருந்த போதும்! தேவர்களின் கண் இமைக்காது.இமைக்காத கண்கொண்டவர் இமையார்.விண்ணுலகத்தில் வாழும் அவர்களது கால்கள் நிலத்தில் தோயாது,அவர்கள் சூடிய மலர்கள் வாடாது.நளனிடத்தில் இவை யாவும் எதிர்மறையாக இருந்ததால்` இவன்தான் உண்மையான நளன் என்று தெரிந்து மாலையிட்டாள் தமயந்தி.

"கண்ணிமைத்தலால் அடிகள்
காசினியில் தோய்தலால்
வண்ண மலர் மாலை
வாடுதலால் எண்ணி
நறுந்தாமரை விரும்பு
நன்னுதலே அன்னாள்
அறிந்தாள் நளன் தனை ஆங்கு"

இப்படி மாலை அணிவிக்கும் காட்சிப்படலத்தை இலக்கிய இரசனையோடு தந்திருந்தார்.

சமூகப்புரிந்துணர்வு தனி மனிதனுக்கு மிகவும் இன்றியமையாத ஓர் அம்சம் என்பதை உணர்ந்த வள்ளுவன் "உலகத்தோடு ஒட்ட ஒழுகல்" பற்றி குறிகாட்டுகிறார்.பிறருக்கு இன்னா செய்யாதிருத்தல் வேண்டும்.அவ்வாறு ஒழுகுதல் மூலம் அடுத்தவருக்கு சுகமாக வாழலாம் என்பதை பின்வரும் குறள்களில் விளக்குகிறார்.

"மறத்தும் பிறன்கேடு சூழற்கு சூழன்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு"
"பிறர் பழியும் தன்பழியும் நாணுவார்
நாணுக்கு உரைப்பது என்னுமலகு"

சமூகத்தில் ஏழைகள்,வலது குறைந்தோர், அவலட்சணமானோர், திருமணமாகாது தவிப்போர் போன்றோர்களை மனித நேயத்தோடு உறவாட வேண்டும். இதை இலங்கை கலைக்கேசரி சிற்றிதழ் கூறி நிற்கிறது.

கலாச்சாரத்திலும் பல் பரிமாணத் தன்மையுள்ள இலக்கிய வெளிப்பாடுகள் சிங்களம்,பிற மொழிகளிலும் காண முடிகிறது.வித்தியாசமான படைப்பு வெளிப்பாடுகளை வெளிப்படுத்தும் கவிதை,கதை,குறுநாவல்,நாவல்,நாடகம் போன்றன இலக்கிய உலகுக்கு உந்துதலை கொடுக்கின்றது. பல பிறமொழி இலக்கியம் வந்தாலும் அண்மையில் ஆபிரிக்காவில் இருந்து சைனா கெரி என்பவரின் "குழந்தைப் போராளிகள்" என்ற மொழிபெயர்ப்பு நாவல் எமது மண்ணின் போராட்ட வரலாற்றின் கடுமை கொண்ட சில பக்கங்களை எம் கண்முன் நிறுத்தியது.ஒரு போராளி போதிய தூக்கம்,உணவற்று,காடு, மேடெல்லாம் அலைதல்.கடுமை கொண்ட பயிற்சி,ஆபிரிக்க மண்ணில் போராளித்தலைமை, இராணுவத்தின் பெண்கள் மீதான வன்புணர்வு, எதிரியை சித்திரவதை செய்தல் போன்ற பயங்கரமான விடயங்களை வரைந்திருந்தார்.இந்த குழந்தைப் போராளி பற்றிய நூலை அலசி ஓர் இலக்கிய ரசனையுடன் சுவிஸ் தமிழன் சஞ்சிகை தந்தது.

எந்த நூல் ஒரு பண்பாட்டினரால் உயர்வான நூலாக பார்க்கப்படுகிறதோ, சாதீய சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்படுகிறதோ,தமிழர் வரலாற்றை மறைத்து அல்லது திரித்து கூறும் இராஜ வலிய,பூஜா வலிய,சூழ வம்சம், தீபவம்சம் போன்ற நூல்களைப்போல் அல்லாது`இலக்கியச்செருக்குத் துணிவுடன் நிய வரலாற்றை எந்த நூல் சொல்லுகிறதோ அது எவ்விதம் பல பண்பாட்டு மக்களது மனதைத் தொடுகின்றதோ,எந்த நூல் காலம் கடந்தும் உயிரூட்டத்துடன் மக்கள் வாழ்வை மேம்படுத்துகிறதோ,எந்த நூல் படிக்கப்படிக்க புதுக்கருத்துக்களை சுரந்து கொண்டே இருக்கிறதோ அந்நூல்களே மனித சமுதாயத்தின் பெறுமதிமிக்க புதையல்கள். இப்படியான நூல்களை வாசகர்கள் தேடி,தெரிந்து படிக்கும்போது! தமிழ் இலக்கியமல்ல எந்த மொழி இலக்கியமாகிலும் நிலைத்து நிற்கும். அமரர்களான தெணியான்,கே.டானியல், கே.கணேசலிங்கம்,மல்லிகை ஜீவா மற்றும் தனுஷா,சோபா சக்தி இன்னும் பலரது எழுத்துருவாக்க இலக்கியங்கள் சிற்றிதழ்களை மேன்மைப் படுத்துவதை நேரடியாக பார்க்க முடிகிறது.

அழகியலுக்கும்,அகநிலை உணர்வுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து மானிடர்களின் அகமனப் போராட்ட பிணக்குகளை புரிந்து கொள்ளுமளவு சித்தரிக்கும் திறமையும், அதி தீவிரமான சமூக விமர்சனங்களை மெல்லுணர்வோடு வருடல் மொழியால் வெளிப்படுத்தும் திறமை மிக்க ஒரு சிறுகதை எழுத்தாளரும், இந்திய கதை சொல்லி பபி செல்லத்துரை போன்று குப்பிளான் ஐ.சண்முகனும் கதை சொல்லியென பட்டம் பெற்றவர். இவர் பற்றிய தனிச் சிறப்பிதழை அல்வாய் ஜீவநதி சஞ்சிகை வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இன்னும் பெருமளவு எம்மவர் சிற்றிதழ் இலக்கியச் சிறப்பை தொடர்ந்து பார்ப்போம்.

ஈழத்துச் சிறுசஞ்சிகைகள் வரிசையில் ‘சமர்’’:

என். செல்வராஜா,

ஓர் அறிமுகம்

‘ஈழத்தின் முதலாவது இலக்கியச் சஞ்சிகை ‘பாரதி’’ 1946ஆம் ஆண்டு ஜனவரியில் வெளியாகியது. இந்த இதழை முதுபெரும் எழுத்தாளர் கே. கணேஷ் தமது நண்பரான கே. ராமநாதனுடன் இணைந்து வெளிக்கொணர்ந்தார்’’ என்று தன் கட்டுரையொன்றில் ‘ஞானம்’’ கலை இலக்கியச் சஞ்சிகை ஆசிரியர் திரு. தி.ஞானசேகரன் குறிப்பிட்டுள்ளார். பாரதி, 1946ஜனவரி முதல் 1946ஆகஸ்ட் வரையான எட்டு மாதங்களில் ஐந்து இதழ்கள் மட்டுமே வெளிவந்திருந்தன. கே. ராமநாதன் இந்தியா சென்றபின் நின்றுபோன பாரதியை, இரண்டாண்டுகள் கழிந்த நிலையில் கே.கணேஷ் அவர்கள் அ.ந. கந்தசாமியுடன் இணைந்து உயிர்ப்பித்து, 1948 ஜனவரியில் ஆறாவது இதழாக வெளிக்கொணர்ந்தனர்.

‘பாரதி’’ சஞ்சிகை வெளிவரத் தொடங்கிய நிலையில், 1946 மார்ச் மாதத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து ‘மறுமலர்ச்சி’’ சஞ்சிகை வெளிவரத் தொடங்கியது. அக்காலத்தில் புத்திலக்கியம் படைக்கும் ஆவல் கொண்டிருந்த பலரை ‘மறுமலர்ச்சி’’ இணைத்துவைத்தது. யாழ்ப்பாணத்தில் இயங்கிய ‘தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக் கழகம்’’ இதனை வெளியிட்டது. இச்சஞ்சிகையானது 1948 இல் இடைநிறுத்தப் பட்டு அரை நூற்றாண்டுகளுக்குப் பின்னர் 1999 ஆம் ஆண்டு மறு வருகை கண்டிருந்தது. மறுவருகையின் நிர்வாக ஆசிரியராக வரதர் என்கின்ற தி.ச.வரதராஜன் இயங்கினார். மறுமலர்ச்சியும் காலக்கிரமத்தில் நின்று போயிற்று.

இவ்வாறு தொடங்கிய ஈழத்தின் தமிழ்ச் சஞ்சிகை வெளியீட்டுத் துறையின் பாதையில் இன்றளவில் ஏராளமான கலை இலக்கியச் சஞ்சிகைகள் மாத்திரமல்லாது பல்துறை சார்ந்த சஞ்சிகைகளும் வெளிவந்து வரலாற்றில் தடம்பதித்தும் பதியாமலும் நின்று போயுள்ளன. இவற்றில் ஓரிரு இதழ்களுடன் நின்றுபோனவையே ஏராளம். சில சஞ்சிகைகள் குறுகிய காலமே வெளிவந்த போதிலும் அவை இன்றும் இலக்கியவாதிகளின் மனங்களில் நிலைத்து, இலக்கிய ஆய்வாளர்களின் ஆய்வுக் கட்டுரைகளிலும் அடிக்கடி தலைகாட்டிவந்தவண்ணம் உள்ளன. சில சஞ்சிகைகள் வந்த சுவடே இன்றி எவ்வித ஆவணங்களிலும் இடம்பெறாது அழிந்துபோய்விட்டன.

இந்த வரலாற்றுப் பின்புலத்தில் நின்று 1979 ஏப்ரல் தனது முதலாவது தடத்தைப் பதித்து 1990 மார்ச் மாதத்தில் தனது இறுதித் தடத்தைப் பதிந்து 8 இதழ்களுடன் நின்றுபோன ‘சமர்’’ பற்றிய அறிமுகமாக இக்கட்டுரை அமைகின்றது.

‘சமர்’’ கலை இலக்கிய விமர்சன சஞ்சிகையின் ஆசிரியர் டானியல் அன்ரனி ஈழத்தின் சிறு சஞ்சிகைகளின் வளர்ச்சிப்போக்கை நன்கு புரிந்துவைத்துள்ளதை அவரது முதலாவது இதழின் ஆசிரியர் தலையங்கத்திலேயே (பார்வை) அறிந்துகொள்ள முடிகின்றது.

‘ஸ்தாபிதமாகிவிட்ட பெரும் சஞ்சிகைகளின் ஏகபோக ஆக்கிரமிப்பினால் இலக்கியப் பிரக்ஞை அமுக்கப்பட்டு சர்வமும் வர்த்தகம் என்ற நியதியாகிவிட்ட சமூகச் சூழ்நிலையிலும், சுரணையுள்ள சிலர் முக்கி முனகி சில இதழ்களை சில காலம் நடத்தி ஆக்கபூர்வமான-ஆரோக்கியமான இலக்கியச் சூழ்நிலைகளுக்கு வழிதிறந்துவிட்டுச் சென்றிருக்கின்றனர்.

‘வாழ்ந்து மறைந்த அத்தகைய சஞ்சிகைகளினதும் வளர்ந்துகொண்டிருக்கும் சில சிற்றேடுகளினதும் அந்தரிப்புக்கள், அனுபவங்கள் சகலவற்றையும் எதிர்பார்த்துக்கொண்டே இந்த இதழும் வெளிவருகிறது. எமது பார்வை ஏற்கெனவே தீர்மானமாகிவிட்டதொன்று. அந்த மனுசீகத்தை மகிமைப்படுத்தும் தத்துவத் திராணியின் அடிப்படைப் பலத்தில் நின்று-அனைத்துக் கருத்துக்களுக்கும் களம் தருவோம். அவ்வப்போது ‘சமர்’’ உசிதம் போல அவற்றிற்கான தனது கருத்துக்களையும் சுய விமர்சனங்களையும் சிலிர்க்கும். ஆரோக்கியமான சூழ்நிலையில் விவாதங்களையும் விமர்சனங்களையும் வழிநடத்தும். திறந்த மனம் கொண்ட விசாரணைகளையும் சுயபரிசீலனைகளையும் வரவேற்கும். ஒரு அறிவார்ந்த தளத்தில் நின்று விமர்சனபூர்வமாகத் தங்கள் பார்வையை முன்வைக்க விரும்புவோர்களினது கலை இலக்கிய முயற்சிகளை அரசியல் சமூகத் தளத்திற்கு கலாபூர்வமாக நகர்த்திச் செல்லும் ஆண்மையுள்ள ஆக்கங்கள் முதன்மை கவனிப்புப் பெறும்.

‘இது வெறும் தனிமனிதனோடு கொண்ட உறவல்ல. அறிவார்ந்த பலமும் ஆக்கபூர்வமான துணையும் எமக்குத் தேவை. அரசியல் கலை இலக்கியம் - நச்சு நசிவுத் தனங்களின் எல்லா மட்டத்திலும் இது பிரகடனப்படுத்தப்படாத சமர் தான் என்பதை நினைவில் கொள்ளுங்கள்’’.

இவ்வாறு தொடங்கும் 1979 ஏப்ரல் ‘சமர்’’ 24 பக்கங்களைக் கொண்ட தனது முதலாவது இதழில்

'உரத்த சிந்தனை'' என்ற தலைப்பில்; 1979இல் ஞானபீடப் பரிசுபெற்ற டாக்டர் சிவராமகாரந் அவர்களின் கருத்துகள் தேர்ந்து தரப்பட்டுள்ளன. மேலும், செ.யோகநாதன் எழுதிய 'சாதிகள் இல்லையடி பாப்பா'' என்ற சிறுகதை, கவியரசன் (காத்திருப்பு), வ.ஐ.ச.ஜெயபாலன் (கறுத்த ஆகஸ்ட், நீண்ட பயணம், புதிய பாலஸ்தீனம்) ஆகியோரின் கவிதைகள், 'புதிய நாடகங்களில் கூத்து முறைகள் சில குறிப்புகள்'' என்ற தலைப்பில் சி .மௌனகுரு எழுதிய அரங்கியல் கட்டுரை, எம்.ஏ.நுஃமான் தமிழாக்கம் செய்த பல்கேரியக் கவிஞர் நிகோலொ வப்சறோவ் படைத்த எனது மனைவியிடம் ஒரு பிரியாவிடை, ஒரு பாடல், எனது நாடு எனதே, மனைவியின் பாடல் ஆகிய கவிதைகள் என்பன இடம்பெற்றுள்ளன.

'சமர்'' சஞ்சிகையின் அனைத்து இதழ்களிலும் டானியல் அன்ரனி பார்வை, அதிர்வுகள் ஆகிய இரு பத்திகளையும் தனதாக்கிக் கொண்டுள்ளார். ஒவ்வொரு இதழிலும் சமகால கலை இலக்கிய சர்ச்சைகள் பலவற்றிற்கு இப்பகுதி; வழிகோலியுள்ளது. டானியல் அன்ரனியின் துணிச்சலான பார்வை இப்பத்தியில் வெளிப்படுகின்றது. அவருக்குப் பல இலக்கிய எதிரிகளையும் நண்பர்களையும் இப்பத்தி உருவாக்கித் தந்திருக்கிறது.

சமர் இதழ்களில் தமது சிறுகதைகளை த.ஆனந்தமயில், சாந்தன், சி.சுதந்திரராஜா , செ.யோகநாதன், எம்.ஏ.நுஃமான், மாத்தளை வடிவேலன் ஆகியோர் எழுதியுள்ளனர்;. ஆசிரியர் டானியல் அன்ரனியும் 'இழப்பு'' என்ற ஒரு சிறுகதையை மட்டும் சமரில் எழுதியுள்ளார்.

சசி கிருஷ்ணமூர்த்தி, கே.எஸ்.சிவகுமாரன், இ.முருகையன், உதயன், சி. மௌனகுரு, மௌ.சித்திரலேகா, க.கைலாசபதி, கோ.கேதாரநாதன், கே.சண்முகலிங்கம், சமுத்திரன், வ.ஐ.ச.ஜெயபாலன், சி.வன்னியகுலம், சோ.கிருஷ்ணராஜாஆகியோர் கட்டுரைகளை வழங்கியுள்ளனர்.

கவிதைகளை அ.ரவி, அன்புநெஞ்சன், த.ஆனந்தமயில், இதயராசா, இன்குலாப், உதயன், எஸ்.ஜி.கணேசவேல், கவியரசன், சாருமதி, சுபத்திரன், சேரன், தேவி பரமலிங்கம், நல்லை அமிழ்தன், இ.முருகையன், பாலசூரியன், மேமன் கவி, வ.ஐ.ச.ஜெயபாலன், வண்ணநிலவன், வளவன், எம்.ஏ.நுஃமான், சி.இரா.தனபாலசிங்கம், ஏ.ஆர்.ஏ.ஹஸீர் ஆகியோர் எழுதியுள்ளனர்.

1979 ஜுலையில் வெளிவந்த 2ஆவது 'சமர்'' இதழில் க.கைலாசபதி அவர்களின் 'முற்போக்கு இலக்கியமும் அழகியல் பிரச்சினைகளும்'' என்ற கட்டுரை முக்கிய இடம்பிடித்துள்ளது. தொடர்ந்து கே.சண்முகலிங்கம் (சறுங்கலேயும் இனவாதமும்), மௌ.சித்திரலேகா (ஈழத்து இலக்கியமும் இடதுசாரி அரசியலும்: சில குறிப்புகள்) ஆகியோரின் கட்டுரைகளும், உதயன் (காத்திருப்பு), கவியரசன் (சமாந்தரம் கொள்ளாத உலகங்கள், தொடரும் இருப்பு), சேரன் (மழைகாலமும் கூலிப் பெண்களும்) ஆகிய கவிதைகளும், டானியல் அன்ரனியின் 'இழப்பு'' என்ற சிறுகதையும் இடம்பெற்றுள்ளன.

3ஆவது 'சமர்'' இதழ் 1979 செப்டெம்பரில் வெளிவந்துள்ளது. இவ்விதழில் சி.வன்னியகுலம் எழுதிய 'ஈழத்துப் புனை கதைகளில் சமுதாயச் சித்திரிப்பும் பேச்சு மொழி வழக்கும்'' என்ற கட்டுரையும், வளவன் (மாறத்தான் போகிறது), மேமன் கவி (அணு சிசு), இ.முருகையன் (முயல்வு, ஆற்றல், இனிமை), சி.இரா. தனபாலசிங்கம் (புதிய குழந்தை), ஏ.ஆர்.ஏ.ஹஸீர் (சாஹித்யவான்) ஆகியோரின் கவிதைகளும், பன்காரிகள் - எம்.ஏ.நுஃமான் எழுதிய 'பன்காரிகள்'' என்ற சிறுகதையும், திஸ்ஸ அபயசேகர ஆங்கிலத்தில் எழுதி கே.சண்முகலிங்கம் தமிழாக்கம் செய்த 'திரைக்கதை எழுதும் கலை'' என்ற மொழிபெயர்ப்புக் கட்டுரையும், அ.தாசீசியஸ் அவர்களின் நெறியாழ்கையில் அமைந்த 'பொறுத்தது போதும்'' என்ற நாடகம் பற்றிய உதயனின் விமர்சனமும் இடம்பெற்றுள்ளன.

4ஆவது 'சமர்'' இதழ் 1980 ஜனவரியில்;; வெளிவந்துள்ளது. இவ்விதழில் 'சிங்கள சினிமா 70-79 நம்பிக்கை தரும் பத்தாண்டுகள்'' என்ற ரெஜி சிறிவர்த்தனவின் கட்டுரை க.சண்முகலிங்கம் அவர்களின் மொழிபெயர்ப்பாக வெளிவந்துள்ளது. வண்ணநிலவன் (பிரியமானவளே), வ.ஐ.ச.ஜெயபாலன் (மாயாகோஸ்கியும் நானும்), இதயராசா (மீண்டுமொரு முறை), பலஸ்தீனக் கவிஞர் மஹ்மூட் தர்வீஸ் (நான் பிரகடனம் செய்கிறேன்), பாலசூரியன் (விரியும் ஒரு பாதை, விழித்திருக்கிறேன்) ஆகியோரின் கவிதைகளும், மாத்தளை வடிவேலனின் 'வெட்டு மரங்கள்'' என்ற சிறுகதையும், 'தமிழ் நாவல்களில் மனித உரிமைகளும் மக்கள் போராட்டங்களும்'' என்ற தலைப்பில் எழுதப்பட்ட க.கைலாசபதியின் கட்டுரையும், கோ.கேதாரநாதன் தமிழாக்கம் செய்த 'லூசுன் எழுதிய புரட்சி காலத்து இலக்கியம்'' என்ற கட்டுரையின் தமிழாக்கமும், சினிமா பற்றி ருத்தரய்யா சிகரத்தில் எழுதிய கட்டுரையின் பகுதியொன்றின் மீள்பிரசுரமும் இடம்பெற்றுள்ளன.

5ஆவது 'சமர்'' இதழ் 1980 நவம்பர் மாதத்தில்;;; வெளிவந்துள்ளது. முன்னைய இதழ்களின் கால இடைவெளியைவிட பத்து மாதங்கள் கழித்து வெளிவந்த காரணத்தை இவ்விதழில் ஆசிரியர் 'பார்வை'' என்ற பகுதியில் குறிப்பிடுகிறார்.

'சமர் மிகவும் காலம் தாழ்த்தியே வெளிவருகின்றது. சிரமங்கள் பற்றி வாசகர்களுக்குப் புரியாததல்ல. குறிப்பிட்ட காலத்தில் சமர் வெளிவரும் என்ற வரன்முறை பகிரங்கப் படுத்தப்படாததும் சரியானதே. இயன்றவரை சமர் அதிக இடைவெளி இன்றி வெளிவர முயற்சிக்கிறோம்'' என்று குறிப்பிடுவதிலிருந்து 'நினைத்தபோது வெளிவரும் இதழ்'' என்பதை வலியுறுத்தி சமமான கால இடைவெளியில் சமர் இதழ்கள் பிரசுரமாகாது என்பதை மீள வலியுறுத்தியுள்ளார்.

மேலும் அவர் இப்பத்தியில் குறிப்பிடும் மற்றொரு விடயம் 'சமர்'' என்ற சொற்பதத்திற்கு அர்த்தம் தருகின்றது.

';...அது (சமர்) எதிர்கொள்ள எத்தனிக்கும் போராட்டங்களும் அகலித்தே செல்கின்றது.

பண்டிதத்தனமான தூய அழகியல்வாதிகளும் கூட முற்போக்குக்குள் முகம் புதைத்துக்கொண்டு மார்க்சியத்துள் நியாயம் தேடத் தலைப்பட்டுள்ளனர். மார்க்ஸிஸ்டுகளின் கலை இலக்கிய கருத்துகளை திரித்துப் புரட்டுவதிலும் நாட்டம் கொண்டுள்ளனர். இன்னொரு பக்கத்தில் கோஷப் பிரியர்களும், சூத்திரத்தனமானஅழகியல் மறுப்புக்காரரும், உண்மைக் கலைத்தேட்டமும் தன் சமூகப் பயன்பாடு பற்றிய உள்ளார்ந்த நம்பிக்கையும் கொண்டோரிடையே, இவர்களை தனிமைப்படுத்திக் காண்பது என்பது இன்றைய சூழ்நிலையில் சுலபமானதொன்றல்ல. இவர்களது சுயத்தை அம்பலப்படுத்துவதும், இவர்களது முரண்பாட்டின் அடிப்படையிலேயே உண்மைக் கலையை பிரபலப்படுத்துவதும் கூட தனது முக்கிய பணியாக 'சமர்'' ஏற்றுக்கொண்டுள்ளது.''

5ஆவது 'சமர்'' இதழில் வ.ஐ.ச. ஜெயபாலனின் 'சாதி அமைப்பும் இலங்கைத் தமிழர்களும்'', இ.முருகையனின் 'எங்கள் இலக்கியத்தின் அழகியல்'', மிர்னான் சென் எழுதி கே.சண்முகலிங்கம் தமிழாக்கம் செய்திருந்த 'கலைஞனும் கலைக் கொள்கையும்'' ஆகிய கட்டுரைகளும், கவியரசன் (வேர்களிலிருந்து பூக்கள், கானல்வரி) ஆகியோரின் கவிதைகளும், எம்.ஏ.நுஃமான தமிழில் மொழிபெயர்த்த முயின் பெசைசோவின் 'எதிர்த்து நில்'' என்ற பாலஸ்தீனக் கவிதையும், இ.முருகையன் தமிழாக்கம் செய்த இஸ்ரேலிய யூதன் ஒருவனுக்கும் அராபியன் ஒருவனுக்கும் இடையேயான உரையாடலும், சி.சுதந்திரராஜா எழுதிய 'பூபாளமும் புதுச்சிலிர்ப்பும்'' என்ற சிறுகதையும், ஐ.சாந்தன் எழுதிய 'ஒரு விருந்தின் முடிவு'' என்ற குறுங்கதையும் இடம்பெற்றுள்ளன.

6ஆவது 'சமர்'' இதழ் 1981 மே மாதத்தில்;;; வெளிவந்துள்ளது. இவ்விதழில் அ.ரவி (விலகல்), த.ஆனந்தமயில் (மாதுளம் பிஞ்சுகள்), இன்குலாப் (விலங்குகள் நொறுங்குக), நல்லை அமிழ்தன் (நிலைமைகள், தூரத்து விளக்குகள்), அன்பு நெஞ்சன் (கீறல்கள்) ஆகிய கவிதைகளும், சி. சுதந்திரராஜாவின் 'வசதி படைத்தவன் தரமாட்டான் வயிறு பசித்தவன் விடமாட்டான்'', த.ஆனந்தமயில் எழுதிய 'நண்பனும் ஒரு புளியமரமும்'' ஆகிய சிறுகதைகளும், சமுத்திரன் எழுதிய 'கலை இலக்கியத்தில் உள்ளடக்க உருவ உறவும் மார்க்சீய விமரிசனமும்'', அனுரப் பபானி எழுதி இ.முருகையன் மொழிபெயர்த்த 'பப்ளோ நெருடா'', டானியல் அன்ரனியின் 'இலங்கை இலக்கியச் சூழலும் விவாதமும்-படிகள்: ஓர் அவசரக் குறிப்பு'' ஆகிய கட்டுரைகளும், கலாநிதி க.கைலாசபதியின் 'சமூகவியலும் இலக்கியமும்'' என்ற நூலுக்கான க.சண்முகலிங்கம் எழுதிய நூல் விமர்சனமும் இடம்பெற்றுள்ளன.

7ஆவது 'சமர்'' இதழ் 1981 செப்டெம்பர் மாதத்தில்;;; வெளிவந்துள்ளது. இவ்விதழில் யென்ஃபெங் எழுதி இ.முருகையன் தமிழாக்கம் செய்திருந்த 'தலைவர் மாஓவின் கலை இலக்கியப் பாதை: ஒரு கண்ணோட்டம்'';, கே.எஸ்.சிவகுமாரன் எழுதிய 'கலையும் விவாதங்களும்'', எச்.ஏ.செனிவிரத்தின எழுதிய 'பெத்தகம' திரைப்படம்: வியனாட் வூல்வும் லெஸ்ரர் யேம்ஸ் பீரிசும்''ஆகிய கட்டுரைகளும், வ.ஐ.ச. ஜெயபாலன் (மீன் பாடும் தேன் நாடு, துறவியும் நாங்களும்), கவியரசன் (நெய்தல்), மேமன்கவி (கறல் பிடித்த சைக்கிளும் சாப விமோசனமும்), உதயன் (வாடை, உயிர் தரித்தல்), சுபத்திரன் (சிவந்த பூமி) ஆகியோரின் கவிதைகளும், சாந்தன்; எழுதிய 'மனிதர்களும் மனிதர்களும்'' என்ற சிறுகதையும் இடம்பெற்றுள்ளன.

ஏழாவது இதழுடன் 'சமர்'' வெளியீடு நீண்டகாலம் வெளிவரவில்லை. யாழ்ப்பாணப் பொது நூலக எரிப்புடன் யாழ்ப்பாணத்தில் இயல்புவாழ்க்கை படிப்படியாகச் சீர்குலைந்த நிலையில் 1981 செப்டெம்பரில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்திருக்கும் ஏழாவது இதழில் யாழ் நூலக எரிப்பு பற்றிய எவ்வித சலனமும் கட்டுரைகளிலோ செய்திகளிலோ காட்டப்படவில்லை- இவ்விதழில் வெளிவந்த வ.ஐ.ச.ஜெயபாலனின் 'துறவியும் நாங்களும்'' என்ற கவிதையில் மாத்திரம்

'சாம்பல் மேடாய் சிறுகாற்றுக்கே
அலைப்புண்ட யாழ்ப்பாணத்தில்
சுவர்களைத் தாமே காத்தவர் போல
நிமிர்ந்து நடந்தனர் படைவீரர்கள்.
கண்ணீர் மீதும் வியர்வையின் மீதும்
கரியும் சாம்பலும் படிந்து கறுத்த
ஆயிரம் ஆயிரம் ஆயிரம் முகங்கள்.
அக்கினி குமுறும் எரிமலை போன்று
எத்தனை கண்கள் எத்தனை சபதம்
யாழ்ப்பாணத்து பொது நூலகத்தை
எரித்ததன் கரியை எமது முகங்களில்
பூசி விட்டது பெருஞ்சாதனை போல்
காவல் நிலைய முன்றலில் பரந்த
விளையாட்டரங்கில் பிசாசுகள் கூத்திடும்'' என்ற

கவிவரிகளின் வாயிலாக தன் கருத்தை பதிவுசெய்து 'சமர்'' திருப்தியடைந்து கொண்டது.

'சமர்'' சஞ்சிகையின் எட்டாவது இதழை மார்ச் 1990இல் மீண்டும் நம்பிக்கையுடன் வெளியிட முனைந்தார் டானியல் அன்ரனி. ஈழ விடுதலைப் போராட்டச் சூழ்நிலையும் அக்காலகட்டத்தில் நிலவிய வரையறுக்கப்பட்ட படைப்புச் சுதந்திரமும், அவரது சுகவீனமும் தனது கலை இலக்கியச் சமரை தொடரும் சாத்தியத்தினை அவருக்கு தொடர்ந்தும் வழங்கியிருக்கவில்லை.

மார்ச் 1990இல் இறுதியாக வெளிவந்த சமரின் எட்டாவது இதழில் டானியல் அன்ரனியின் 'போராட்ட சூழ்நிலையும் படைப்புச் சுதந்திரமும்'' என்ற பத்தி எழுத்து அன்றைய காலகட்டத்தின் கலை இலக்கிய இயலாமையை கோடிட்டுக் காட்டியுள்ளது. அமெரிக்கரான மார்கரேட் வாக்கர் எழுதிய 'புதிய பூமி எழுந்து வரட்டும்'', வடக்கு கரோலினா-கார்ல் வெண்டல் ஹைன்ஸ் எழுதிய 'செத்துப் போனவர்'', ஹங்கேரியரான சாந்தோர் பெட்டோல்ஃபி எழுதிய 'எத்தனை நாள்

துயின்றிருப்பாய் என்னருமைத் தாய்நாடே'', தேவி பரமலிங்கம் எழுதிய ''புதுமையில்லை'', 'திணறல்'', மாசேதுங்கின் 'ஒரு கவிதை'', 'இரு பறவைகள்: ஒரு உரையாடல்'' எஸ்.ஜி.கணேசவேல் எழுதிய 'நினைக்க மறந்த 71''ஆகிய கவிதைகளும், அமெரிக்கரான வில்லியம் மெல்வின் கெல்லி எழுதிய 'துணைக்கு வராத துப்பாக்கிகள்'', சாந்தன் எழுதிய 'தரிசனங்கள்'' ஆகிய சிறுகதைகளும், கே.கணேஷ் தமிழாக்கம் செய்த 'பார்பரா கவிதைகள்'' பற்றிய கே.எஸ். சிவகுமாரனின் பார்வை, சோ.கிருஷ்ணராஜா எழுதிய 'மாக்ஸிச அணுகுமுறை'', சசி கிருஷ்ணமூர்த்தியின் 'திரு.ஐ.விஸ்வலிங்கம்: மரச் செதுக்குச் சிற்பங்கள்'', நீலகியின் 'பெண் திரைப்பட நெறியாளர் அபர்ணா சென்'' ஆகிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

இவ்விதழில் மொழிபெயர்ப்புப் படைப்பாக்கங்கள் அதிக பக்கங்களை நிரப்பியிருக்கின்றன. ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர் யாழ்ப்பாண மண்ணில் 'விடுதலைப் போராளிகளின்'' அச்சுறுத்தல்கள், ஊடகக் கட்டுப்பாடுகள் என்பனவற்றின் மத்தியில் 'சமரை'' தொடர முயற்சித்த டானியல் அன்ரனி விரக்தி நிலையில் நின்றே தனது 'பார்வையை'' இவ்விதழில் பகிர்கின்றார்.

'சில சஞ்சிகை ஆசிரியர்கள் கற்பிதம் செய்வதுபோல அல்லாமல் சமர் வெளிவராத காரணத்தினால் இலக்கிய உலகிற்கு நட்டம் எதுவும் ஏற்பட்டதாக நான் கருதவில்லை. இந்த பத்து வருட தவத்திற்கு பல காரணங்கள் சொல்லலாம். இது பற்றி வாசகர்களுக்கு அக்கறை இருக்கப் போவதில்லை. இந்த தேசத்தைப் போலவே சமருக்கும் பல பாதிப்புக்கள். பல தடவைகள் வெளியிடுவதற்கு முயற்சி எடுத்தபோதும் சூழ்நிலை கைநழுவிப் போய்க்கொண்டே இருந்தது. இந்தத் தேசம் புதிய அனுபவங்களை பெற்றிருக்கின்றது. போராட்டங்களை சந்தித்து இருக்கின்றது. புதிய பாடங்களை படித்திருக்கிறது. புதிய பாய்ச்சலை பார்த்திருக்கிறது. தேவைக்கும் அதிகமாகவே இரத்தம் சிந்தியிருக்கின்றது. மனிதர்களை இழந்திருக்கிறது. இவை கலை இலக்கியத்திலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கவேண்டும். சில கவிதைகள், சில கதைகள், சில ஓவியங்கள், சில அழகான ஒப்செட் அஞ்சலிச் சுவரொட்டிகள் இதற்கும் மேல் இலக்கியத்தில் எதைச் சாதித்திருக்கிறோம்?'' என்ற கேள்விக்கு அவரால் மரணம் வரை பதில் தேட முடியவில்லை.

சமரின் முதல் மூன்று இதழ்கள் யாழ்ப்பாணத்திலிருந்து சமர் இலக்கிய வட்டக் குழுவினரால் 310, மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள சித்திரா அச்சகத்திலும் நான்காவது இதழிலிருந்து ஆறாவது இதழ் வரை சாவகச்சேரி மட்டுவில் திருக்கணித அச்சகத்திலும், ஏழாவது இதழ் யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா அச்சகத்திலும், எட்டாவது இதழ் யாழ்ப்பாணம் புதிய சித்திரா அச்சகத்தில் அச்சிடப்பட்டுள்ளது. சராசரியாக ஒவ்வொரு இதழும் விளம்பரங்களைத் தவிர்த்து 20 முதல் 24 பக்கங்களை கொண்டுள்ளது. சமர் இதழ்களுக்கான முகப்போவியங்களை ஓவியர் கோ.கைலாசநாதன் வரைந்துள்ளார்.

17.03.1993 அன்று மறைந்த டானியல் அன்ரனியின் நினைவாக மல்லிகையின் 1994 மே இதழில் சசி. கிருஷ்ணமூர்த்தி எழுதியிருந்த அஞ்சலிக் கட்டுரையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

'டானியல் அன்ரனியின் கடைசி நாட்கள் மிகவும் சோகமானவை. இன ஒடுக்குமறையின் குரூரம் அவரையும் விட்டுவைக்கவில்லை. தொழில்பார்த்த நிறுவனம் குலைந்து போக, நிரந்தர வேலையின்மை, குடும்ப பாரத்தின் அழுத்தம், இவற்றுக்கிடையேதான் இவரைக் கொடிய நோய் பற்றிக்கொண்டது. ஆரம்ப நிலையில் அந்த நோயின் தன்மை கண்டுபிடிக்கப்பட்டு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டிருந்தால் அந்தக் கொடிய நோயிலிருந்தும் அவர் மீண்டிருக்கக்கூடும். நோய் முற்றிய நிலையில் மிகவும் அச்சந் தரும் பயணத்தை மேற்கொண்டு கொழும்பு சென்றும் அவரால் மீள முடியாது போய்விட்டது''

டானியல் அன்ரனி (13.07.1947- 17.03.1993) திருமணமாகி இரு குழந்தைகளுக்குத் தந்தையானவர். யாழ்ப்பாணத்தில் நாவாந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ். மத்திய கல்லூரியில் கல்வி பயின்றவர். வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் வெளிக்கள உத்தியோகத்தராகப் பணியாற்றியவர். இவர் இந்தப் பிரதேசத்தில் மூன்று தளங்களில் நின்று தனது செயற்பாட்டை தொடர்ந்து நடத்திவந்தார். ஒரு தளம் சமூக முன்னேற்றம். இன்னொரு தளம் விளையாட்டுத் துறை. பிறிதொரு தளம் இலக்கியக் களம். இவை மூன்றையும் தனது ஆளுமையைக் கொண்டு செழுமைப்படுத்தி வந்துள்ளார்.

படைப்பாளியாக அறியப்பட்டிருந்த இவர்;. ஆரம்பத்தில் ராதா, சிந்தாமணி, சுந்தரி போன்ற இதழ்களில் சிறுகதைகளை எழுதி வந்தார். பின்னர் முற்போக்கான கதைகளை, தான் வாழ்ந்த கடல்-சார் மக்களின் வாழ்வியலை மையமாகக் கொண்டு எழுதலானார். மல்லிகை, வீரகேசரி, சிரித்திரன், கணையாழி போன்ற இதழ்களில் இவரது கதைகள் வெளிவந்தன. வேறு சில இலக்கிய நண்பர்களுடன் இணைந்து 1970களில் 'செம்மலர் இலக்கிய வட்டத்தை'' ஆரம்பித்து அதன் தலைவராகவும் செயற்படலானார். இவ்வட்டத்துடன் விரைவில் வ. ஐ. ச. ஜெயபாலன், நந்தினி சேவியர், உ.சேரன் போன்றோர் இணைந்தனர். வட்டம் சார்பில் 'அணு'' என்ற இலக்கிய இதழை வெளியிட்டனர். இது மூன்று இதழ்களுடன் நின்று போனது. அணுவில் தான் பெற்ற அனுபவங்களை முன்வைத்தே 'சமர்''; கலை இலக்கிய சஞ்சிகையினை டானியல் அன்ரனி வெளியிட்டுள்ளார். இலக்கியச் சர்ச்சைகளுக்குள் புகுந்து விளையாடும் இவரது இலக்கியப் பார்வை ஒரு புதிய பரபரப்பையே இந்த மண்ணில் ஏற்படுத்தி விட்டது.

(நன்றி:ஜீவநதி சிறுசஞ்சிகைச் சிறப்பிதழ் 2022)

மனிதநேயமும் மண் சஞ்சிகையையும்

அம்பலவன்புவனேந்திரன்.. (யேர்மனி)

இந்த மண்ணில் ஜனித்த ஒவ்வொருவரும் ஏதோ ஒருவகையில் சமூகத்துடன் கட்டுண்டே வாழவேண்டியவர்களாகவே உள்ளோம். அதிலும் ஒரு பகுதியிரே சமூகத்தின் மீதான மிகுந்த அக்கறையுடனும் கட்டுப்பாடுகளுடனும் வாழுகின்றனர் என்பதை எவரும்மறுப்பதற்கில்லை. சமூகத்தின் மீதான நேசத்துடனும் அறத்தைப்பேணி எதிர்கால சந்ததியின்மீது கரிசனையோடு செயற்படுபவர்கள் இதில் சிலரென்பது மறுக்கமுடியாத உண்மையாகும். நாமறிந்தவரை பல சான்றோர்களும் அறிஞர்களும் தாம் வாழுகின்ற சமூகத்தின் நலன்கருதி உழைத்தார்கள் அல்லது உழைத்துக் கொண்டிருக்கின்றர்கள் என்பது நிதர்சனம். இந்த வகைக்குள்ளே தனி நபர்களைத் தவிர்த்து, அச்சு ஒலி மற்றும் ஒளி ஊடகங்களின் வாயிலாக தம் பங்களிப்புகளை நல்கிவருகின்ற இலக்கியவாதிகள் புத்திஜீவிகள் படைப்பாளிகள் எனப் பலர் அடங்குகின்றனர். ஊடகங்களின் வாயிலாக பல்வேறுவகைகளில் மொழி மற்றும் கலைகலாச்சார பண்பாட்டு மூலக்கூறுகளைச் சிதையவிடாமலும் பாதுகாப்பதென்பது மிகப்பெரிய சமூகப்பணி என்பது பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும்.

அந்தவகையில் சமூக ஊடகங்கள் உலகின் சகல மொழிகளிலும் பல்கிப்பெருகிய 21ம் நூற்றாண்டில், கணனியின் வருகையைத்தொடர்ந்து இணையத்தின் வகிபாகம் சிறப்பான உயரிய இடத்திலுள்ளது எனலாம். இணையமோ காட்சி ஊடகங்களின் வருகையோ அச்சு ஊடகங்களுக்கு எந்தவகையிலும் ஊறுவிளைவிக்கவில்லை என்றொருகருத்து நிலவினாலும் அச்சு ஊடகங்கள் தமது பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்த வண்ணமேயுள்ளன. அவற்றின் வாசகர்வட்டம் காலத்துக்குக்காலம் மாறுபட்டாலும், அச்சு ஊடகங்கள் தத்தமது பணிகளை செவ்வனனே நிறைவேற்றிக்கொண்டே இருக்கின்றன. இவற்றுள் நாளிதழ்கள், சஞ்சிகைகள், மாதஇதழ்கள் என்று பல்வகைப் பரிமாணங்களுக்குள் அடங்கினாலும் அவை எவையும் ஜகரஞ்சக தரத்திலிருந்து மாறுபடாமல் தம் பங்களிப்புகளை நல்கின்றன என்பது யதார்த்தமாகும். தமிழ் கூறும் நாடுகளில் இவற்றின் ஆதிக்கம் பல்கிப்பெருகிருந்தாலும், புலம்பெயர்ந்த தேசங்களில் இவ்வாறான அச்சு ஊடகங்களின் சுழற்றிவட்டமென்பது மிகக்கடினமான நகர்வுகளையே எதிர்நோக்குகின்றன என்பது ஒரு கசப்பான உண்மையாகும்.

இப்பேற்பட்ட சூழ்நிலைகளிலும் புலம்பெயர் தேசங்களில் எம்தமிழர்சார்ந்த அச்சு ஊடகங்களின் பங்களிப்பென்பது எமக்கெல்லாம் பெரும் வரப்பிரசாதமாகும். இலங்கைத் தமிழர்கள் புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளில் வாழ்ந்துவந்தாலும் எமது மொழியோடு கலாச்சார பண்பாட்டு விழுமியங்களைப் பேணிவருவதற்கு இவ்வாறான அச்சு ஊடகங்களின் பங்களிப்பென்பது மிகவும் உன்னதமானதென்றால் மிகையில்லை. நானறிந்த வகையில் புலம்பெயர்தமிழர்கள் பெருவாரியாக வாழுகின்ற யேர்மனியில் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு சஞ்சிகைகள் வெளிவரத்தொடங்கி தமது நோக்கங்களை நிறைவேற்றி வந்தாலும், காலப்போக்கில் வௌ;வேறுகாரணிகளால் ஒருசில சஞ்சிகை தம்போக்கில் நலிவடைந்து தன் பயணத்தை இடைநிறுத்திக்கொண்டன என்பது வேதனையே. என்றாலும் சில சஞ்சிகை இன்னும் தத்தம் பணிகளை முன்னெடுத்த

வகையில் உள்ளன என்பது மகிழ்வைத்தருவதோடு பாராட்டவேண்டியதொரு விடயமாகும்.

இதனடிப்படையில் உதாரணத்துக்கு இங்கே ஒரு சஞ்சிகையைக் குறிப்பிடுதல் பொருத்தமானதாகுமென நான் கருதுகிறேன். யேர்மனியிலிருந்து வெளிவருகின்ற மண் சஞ்சிகையைக் குறிப்பிட்டுச்சொல்வதற்குப் பல்வேறு காரணங்களை இங்கே முன்வைக்க முடியும்.

கடந்த 1990 தை மாதம்முதல் தங்குதடையின்றி யேர்மனியிலிருந்து வெளிவருகின்ற மண் சஞ்சிகை தனது வெள்ளிவிழாவினை 2015ல் கொண்டாடி வாகை சூடிக்கொண்டது. யேர்மனியில் கையெழுத்துப்பிரதியாக உருவாகி பின் தட்டச்சுவாகனமேறிப் பவனிவந்து தற்சமயம் அச்சுவடிவிலான சஞ்சிகையாக உலகெங்கு பவனி வருகின்றது. யேர்மனி டுயிஸ்பேக் நகரில் வாழ்ந்துவருகின்ற திரு.வைரமுத்து சிவராசா அவர்களும், தற்போது இலங்கையில் வாழ்ந்து வருகின்ற திரு பே.அமிர்தநாதன் அவர்களும் இணையாசிரியர்களாக பணியாற்றிய மண் சஞ்சிகையானது இரு மாதங்களுக்கொரு இதழாக வலம்வந்தது. 1995ம் ஆண்டுக்குக்பின் திரு. பே.அமிர்தநாதன் அவர்கள் தாயகம் திரும்பியதான் காரணத்தினால் திரு.வைரமுத்து சிவராசா அவர்கள் பிரதம ஆசிரியராகவும் திரு.பசுபதி செளந்தரராஜா அவர்கள் துணையாசியராகவும் மண் சஞ்சிகையை தொடர்ந்து வழிநடாத்தினர். வெள்ளிவிழாக்கண்ட மண் சஞ்சிகையைத் தற்போது தற்போது திரு.வைரமுத்து சிவராசா அவர்கள் பிரதம ஆசிரியராகவும் திருமதி ராஜேஸ்வரி சிவராசா அவர்கள் துணை ஆசிரியராகவும் செயற்பட 33ஆண்டுகளை நோக்கிய பயணத்தைத் தொடர்கின்றது.

கல்வி,கலையிலக்கிய சமூக இருமாத இதழாக வெளிவருகின்ற மண் சஞ்சிகையானது வெறும்பொழுதுபோக்கு ஊடகமாகவில்லாது இளையோருக்கான தமிழ்மொழியறிவினை மேம்படுத்தலில் தொடங்கி இலைமறைகாய்களான கலைஞர்பலரின் ஆற்றல்களை வெளிக்காட்டப் பேருதவி செய்துவருதல் உன்னதமான பணியென நான் கருதுகிறேன். உலகத்தலைவர்களின் நினைவுமலர்கள், பேரறிஞர்களின் சமூக இலக்கியப் பணிகளைப்பாராட்டி கௌரவித்தல், படைப்பாளிகளை இளையதலைமுறைக்கு ஊக்குவித்துப்பாராட்டுதல் போன்றவை சிறப்பான சேவையாகும். இதுமட்டுமன்றி, மண் சஞ்சிகையானது பல்வகையிலான மனிதநேயப்பணிகளையும் முன்னெடுத்துவருதல் போற்றுதற்கும் பாராட்டுதலுக்கும் உரிய உயரிய பணியாகும். அதாவது தாயகத்தில் அல்லலுறுகின்ற மக்களுக்கு தமது வாசகர் வட்டத்திலிருந்து தம்மாலான உதவிகளைத்திரட்டி காலத்துக்குக்காலம் உரியமுறையில் நேர்த்தியாக வழங்கிவருதல் சிறப்பான பணியென்பது எல்லோராலும் ஏற்றுக்கொண்ட உண்மையாகும். உண்டிகொடுத்தோர் உயிர்கொடுத்தோர் என்பதற்கிணங்க, மண் சஞ்சிகையின் மனிதநேயப்பணியென்பது இச் சஞ்சிகைக்கு மகுடம் சூட்டுகின்ற உன்னத செயற்பாடு என்பதை ஆண்டு தோறும் மண் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் திரு. வைரமுத்து சிவராசா அவர்கள் நிரூபித்துக்கொண்டிருப்பது வியக்தக்க ஒரு விடமென்றால் மிகையாகாது.

தாயத்தில் போரினால் பாதிப்புக்குள்ளான எமதுறவுகள், மாற்றுத்திறனாளிகளின் காப்பகங்கள், உறவுகளை இழந்த குழந்தைகளின் பராமரிப்பு இல்லங்கள் என்று தமிழர் தாயகத்தின் சகலபாகங்களிலுமிருந்து விபரங்களைத்திரட்டி அவர்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்திசெய்யும் வகையில் உதவிகளை வாசர் வட்டத்தினூடாகவும் பிற கொடையாளிகளின் மூலமும் திரட்டி வழங்கிவருதல் என்பது மண் சஞ்சிகையினதும் பிரதம ஆசிரியர் அவர்களினதும் அரிய பணியாகும். இதுமட்டுமன்றி, பெற்றோரை இழந்த பிள்ளைகளைத் தத்தெடுத்து வளர்க்கும் மகோன்னத செயற்பாட்டை புலம்பெயர்ந்து வாழுகின்ற தழிழுறவுகளின் உதவிகளுடன் நடைமுறைப்படுத்துவதென்பது சுலபமான பணியல்ல. நற்பணிகளை முன்னெடுக்கின்ற நம்பிக்கையுடனும் நேர்மையுடனும் செயற்படுகின்ற மண் சஞ்சிகையினதும் பிரதம ஆசிரியர் அவர்கள் வருடாவருடம் தாயகத்திற்கு சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு வழங்கப்படுகின்ற மனிதநேய உதவிகளைசீராகப்பேணப்படுகின்ற தாவெனக் கண்காணித்து வருவதுடன் அங்குள்ள நிலைமைகளை ஆய்வுசெய்து எங்கெங்கு பங்களிப்புகள் தேவைப்படுகின்றதென்ற தகவல்கைளயும் மண் வாசகர்களிடத்தும் பிற கொடையாளிகளுக்கும் பரிந்துரைசெய்து வருவது போற்றுதற்குரியதாகும்.

..அன்ன யாவிலும் புண்ணயம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்.. என்ற பாரதியின் வரிகளுக்கேற்ப ஆதரவற்ற குழந்தைகளின் கல்வி நலப்பணிகளுக்கும் தமது அறப்பணிகளை முன்னெடுத்தவருகின்றது. 29.9.1991-31.12.3021 வரை மண் வாசகர்களிடத்தும் பிற கொடையாளிகளிடத்தும் பெற்று தாயத்திற்கு வழங்பட்ட விபரங்களினடிப்படையில், சுமார் 43997.35 யேர்மன் மார்க்குகளும், 96486.46 ஒயிரோக்களும்,3518.00 பிரித்தானிய பவுண்ஸ்களும் அல்லலுறும் தாயக உறவுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. இருமாதங்களுக் கொருமுறை அனுப்பிவைக்கப்படுகின்ற உதவித்தொகைகளின் விபரங்கள் யாவும் அவ்வப்போது பற்றுச்சீட்டுகளுகளுடன் பிரசுரிக்கப்படவதோடு, இதுவரை அனுப்பிவைக்கப்பட்ட உதவித்தொகையின் முழுமையாக கணக்குவிபரங்கள் இந்த ஆண்டின் இறுதிப்பகுதிலே மொத்தமாக வெளியிடப்படும். எனினும் இவ்வாறான செயற்பாடுகளை நானறிந்தவரையில், மண் சஞ்சிகையைத்தவிர வேறு எந்தவொரு சமூகஇலக்கிய சஞ்சிகையும் முன்னெடுக்கவில்லையென இங்கு உறுதியாக பதிவிடுகிறேன். எது எவ்வாறாயினும் தமிழ்மொழி, கல்வி,கலையிலக்கிய சமூக சஞ்சிகையாக உலகெல்லாம் வலம்வருகின்ற மண் சஞ்சிகையை தமிழர்களாகிய நாமெல்லாம் வாழ்த்துவதோடு நின்றுவிடாது, அது முன்னெடுக்கின்ற மனிதநேயப் பணிகளைப்பாராட்டிப் பங்களிப்போமாக.

அரங்கக் கலை வளர்ச்சிக்கு உரமாக வெளியாகிய 'அரங்கம்' சஞ்சிகையும் அதன் ஆசானும்

தமிழ் பாணன்

ஈழத்தின் தமிழ் இலக்கிய வளர்ச்சிப்பாதையில் முதன் முதலில் தோன்றிய சஞ்சிகை "பாரதி". இந்த இதழ் 1946ஆம் ஆண்டு தை மாதம் முதுபெரும் எழுத்தாளர் கே. கணேஸ் அவர்கள் அவரது நண்பரான கே. இராமநாதனுடன் இணைந்து வெளியிட்டார். அதைத் தொடர்ந்து அடுத்தடுத்து பலவேறு சஞ்சிகைகள் வெளிவரலாயின. அவற்றில் சில தொடந்து வெளிவந்து கொண்டிருக்க சில பல்வேறு காரணங்களால் இடையிலேயே நின்று போயின. இவ்வாறு வெளிவந்த சஞ்சிகைகளில் அனேகமானவர்களின் முக்கியமாக அரங்க கலைஞர்களினதும் எழுத்தளர்களினதும் வரவேற்பை பெற்று வெளிவந்தது "அரங்கம்" என்ற சஞ்சிகை. இந்த சஞ்சிகையின் முதலாவது இதழ் 1981ஆம் ஆண்டு மாசி மாதம் (தை மற்றும் மாசி) இதழாக வெளி வந்தது. இந்த அரங்கம் சஞ்சிகையையும் அதன் ஆசானையும் பற்றியதான அலசலே இந்த கட்டுரை.

எண்பதுகளில் பிரபலமான பாரம்பரிய இசைநாடக கலைஞர்களுள் ஒருவர் வேலு மார்க்கண்டு அவரைப்போலவே அவரது வாரிசு வே. மா. குகராஜாவும் (வீ. எம். குகராஜா) ஒரு கலைஞரும் அரங்க ஆற்றுகைச் செயற்பாட்டாளரும் ஆவார். ஈழத்தின் வடபுலத்தில் இருக்கும் வசாவிளான் எனும் ஊரின் திடற்புலம் கிராமத்தில் 1950இல் பிறந்தவர் குகராஜா. இவர் எழுபதுகளில் அரங்கச் செயற்பாடுகளுள் நுழைந்தவர். சுண்ணாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எழுது வினைஞராக கடமையாற்றிய இவர் அதே நிறுவனத்தில் பணியாற்றியவரை திருமணம் செய்து மண வாழ்க்கையில் காலடியெடுத்து வைத்தவர். தனது 36வது வயதில் மரணத்தை தழுவிக்கொண்ட இவருக்கு இரண்டு பெண் பிள்ளைகள் அப்போது ஒருவர் ஏழு வயதையும் மற்றயவர் இரண்டு வயதையும் எட்டியிருந்தனர்.

"இந்த நாட்டில் சிறிய ஒரு வட்டத்தினர்தான் நாடகக்கலையை இரட்சித்தார்கள் என்று சரித்திரம் கூறக்கூடாது. பாடுபட்டவர்கள் இருட்டடிப்புச் செய்யப்படவும்கூடாது".

என்ற தனது ஆழமான கருத்தை உலகிற்கு அரங்கக் கலைக்காக தான் வெளியிட்டுவைத்த முதல் அரங்கக்கலை வளர்ச்சிக்கான சஞ்சிகையிலேயே தெரியப்படுத்திய அரங்கக் கலைக்கு உரமூட்டிய மிகச் சிறந்த கலைஞன் மற்றும் சிறந்த ஆழுமை கடைசியில் அவர் கூறியதைப்போல் அரங்கக் கலைக்காக பாடுபட்ட இவரைப்பற்றியே அறியக்கூடியதான பதிவுகள் இல்லாமல்போனது வருத்தத்திற்குரியதே. உண்மையிலேயே நாடகக் கலையை இரட்சிப்பதற்கான ஈடுபாட்டில் தனது வாழ்க்கையையே முழுமையாக அர்ப்பணித்த அளப்பரிய கலைஞன் குகராஜா என்றால் அது மிகையாகாது.

இவரது அரங்கக் கலை செயற்பாடுகளும் ஈடுபாடும் "படலை திறக்கிறார்கள்" என்ற படைப்புடன் ஆரம்பமாகிறது.இவரது எழுத்தில் உருவாகிய "மனிதனும் மிருகமும்" என்ற நாடக ஆக்கம் 1975இல் தேசிய கலாசார நிறுவனத்தினால் முதலாவது பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டமையானது இவரது அரங்கக் கலை வளர்ச்சிப் பணியில் ஒரு மைல்கலாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. குழந்தை சண்முகம், தார்சீசியஸ், மௌனகுரு, அரசர், ஏ. ரி. பொன்னுத்துரை, இளைய பத்மநாதன் மற்றும் பிரான்சிஸ் ஜனம் போன்றவர்களுடன் இவரும் இணைந்து நாடக அரங்கக் கல்லூரி என்ற அமைப்பினை செயற்படுத்தினர். அரங்க ஆற்றுகையின் வளர்ச்சிக்காக ஆர்வத்துடன் செயற்பட்டவர். 1982இல் தார்சீசியஸ் அவர்களின் "பொறுத்தது போதும்" என்ற நாடகத்தில் அவருடன் இணைந்து உதவி இயக்குனராக பணிபுரிந்தார் அந்த நாடகத்திற்காக ஜனாதிபதி விருதுகள் நான்கு கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து மகாகவியின் "கோடை" மற்றும் குழந்தை சண்முகலிங்கத்தின் "உறவுகள்" என்ற நாடகத்தை நெறியாள்கை செய்து மேடையேற்றினார்.

இவரது அயராத முயற்சியினாலும் புதிய வடிவத்திலான படைப்புக்களை உருவாக்க வேண்டும் என்ற உத்வேகத்தினாலும் பல படைப்புகள் இவரால் உருவாக்கப்பட்டு நெறியாள்கை செய்யப்பட்டு வீதி நாடகங்களாக கிராமங்கள் தோறும் நிகழ்த்தப்பட்டன. இவை கிராம மக்கள் மத்தியல் பெரும் வரவேற்பையும் பெற்றன. இவற்றுள் "கசிப்பு" "பறயோ பரதமே" "விண்ணையும் சாடும்" போன்றவை மிகப் பிரசித்தி

பெற்றவை. போதையற்ற சமுதாயத்தை உருவாக்கும் நோக்கோடு உருவாக்கப்பட்ட வீதி நாடகம் 300க்கும் அதிகமான களங்களைக் கண்டமை குறிப்பிடத்தக்கது. மேலும் இவரால் உருவாக்கப்பட்ட படைப்புகளுள் ''விளக்கும் விரலும்'', ''அவள் ஏன் கலங்குகிறாள்'' மற்றும் ''பதிய சுவர்கள்'' போன்றவையும் வரவேற்பைப் பெற்றதோடு 1983இல் ''புதிய சுவர்கள்'' இலங்கை ரூபவாஹினி தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டமை மிகவும் முக்கியமான ஒரு சாதனையாக இவர் வாழ்வில் அமைந்தது.

அரங்கக் கலைகளின் வெற்றியைத் தொடர்ந்து இவர் ஓரடி முன்நோக்கி வைத்து ஒளிநாடாப் (வீடியோ) படங்களை உருவாக்க முனைந்ததன் பயனாக '' சிலந்தி வலை'', ''கதை இதுதான்'' மற்றும் ''தியாகங்கள்'' போன்ற ஒளிநாடா படங்களை இவரால் வெளியிட முடிந்தது. இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்பட்ட திரைக்கதை எழுதும் போட்டியில் இவரது 'வட்டத்துள் வட்டம்' என்ற திரைக்கதை 'பி' தரத்திற்கு தேர்வாகியமை இவரது மற்றொரு சாதனையாகும். இந்த முயற்சிகளின் பயனாக இவரது அரங்க செயற்பாடுகளில் ஒரு குறிப்பிட்ட அளவு தடைகளும் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. தொலைக் காட்சி வட்டம் அமைப்பின் செயலாளராகவும் கூட்டுறவு அமைப்பின் ஊழியர் கலா மன்றத்தின் முக்கிய செயற்பாட்டாளராகவும் இவர் அப்போது செயற்பட்டமையும் நினைவுகூரத்தக்கதே.

இவ்வாறாக பல முனைப்புக்களுடன் அரங்கக் கலை வளர்ச்சியில் வீ. எம். குகராஜாவின் முனைப்பினால் மேலும் சில அரங்கக்கலை அமைப்பின் உறுப்பினர்களின் ஆதரவுடனும் ஒரு புதிய முயற்சியாக உருவாகியதே ''அரங்கம்'' சஞ்சிகை. குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியல் இலங்கையின் கல்வித்திட்டத்தில் உயர் தரத்தில் ஒரு பாடமாக ''நாடகமும் அரங்கியலும்'' புகுத்தப்பட்டிருந்தது. ஆனால் அவ்வேளையில் இது சார்ந்த நூல்கள் அல்லது ஆக்கங்களோ கிடைத்தற்கரியதாகவே இருந்தது. இந்த சந்தர்ப்பத்தில் அரங்கக் கலைகள் சம்பந்தமான பல்வேறு நுணுக்கங்களையும் கருத்துக்களையும் கொண்டதான படைப்புக்களை மாணவர்களின் பயனின் பொருட்டும் அரங்கக் கலைஞர்களின் பயனின்பொருட்டும் ஆவணப்படுத்தும் நோக்கோடு ஒரு நூல் வெளியிட வேண்டும் என்ற நீண்ட நாள் ஆர்வத்தை செயலுருக்கொடுத்து வெளியிட முன்வந்தார் குகராஜா. அப்போது இதனை நாடக அரங்கக் கல்லூரியின் ஒரு வெளியீடாக வெளியிடுவது சிறந்தது என்ற கருத்து அரங்கக் கல்லூரியின் ஏனைய உறுப்பினர்களிடமிருந்து எழவே அதனை ஆமோதித்து ''அரங்கம்'' சஞ்சிகையை நாடக அரங்கக் கல்லூரியின் ஒரு வெளியீடாக அதன் ஆசிரியப்பொறுப்பை தானே கவனித்துக்கொண்டு 1981ஆம் ஆண்டு மாசி மாதம் முதலாவது வெளியீட்டை வெளியிட்டார்.

'' வேண்டியவாறு வேண்டிய விளைக்கும்

வேட்கையில் வீறுடன் முயல்வோம்'' - மகாகவி -

என்ற மகாகவியின் வரிகளை சஞ்சிகையின் ஆரம்ப வாக்கியமாகக்கொண்டு இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை வெளிவரும் என்ற எதிர்பார்ப்போடு வெளியிடப்பட்டது 'அரங்கம்'. இதன் முதலாவது வெளியீட்டின் ஆசிரியர் கருத்தில் ''நாமும் நமக்கோர் நலியாக் கலையுடையோம்'' என்ற 'கோடை' நாடகத்தில் மகாகவி கூறியிருந்த வரிகளே ஆரம்ப விழிப்பு வாக்கியமாகக்கொண்டு இந்த சஞ்சிகை வெளிவந்தது. முதலாவது வெளியீட்டின் ஆசிரியர் கருத்தில் அரங்கக் கலையின் அப்போதைய நிலைமையும் மாறிவரும் உலகில் அரங்கக் கலையில் மாற்றத்தின் அவசிமும் கலைஞர்களின் அர்பணிப்புகளுக்கு மத்தியில் அதில் முகம்கொடுக்கும் சிரமங்களும் கிராம நகர்ப்புற மக்களின் ஆதரவின் அவசியம் பற்றியும் தனது கருத்தை மிகத் தெளிவாக புலப்படுதியிருக்கிறார்.

இந்த இதழில் கலாலக்~;மி என்ற பெண் கலைஞரின் ஆற்றலையம் அவரது கலைத்திறமைக்கு கிடைத்த வரவேற்பையும் முதலாவது கட்டுரையிலும் பொறுப்பான பொறுப்பு என்ற தலைப்பில் நாடகம் ஒன்றின் வெற்றியில் யார் யாருக்கெல்லாம் பொறுப்பு இருக்கின்றது என்பதை மற்றொரு கட்டுரையிலும் வெளிப்படுத்தியிருக்கின்றனர். மேடைக்கு புதியவராக இருக்கும் ஒரு கலைஞருக்கான அறிவுறுத்தல்களை அடுத்த ஒரு ஆக்கத்தில் சுருக்கமாக தந்திருக்கிறார்கள். இவ்வாறு முழுக்க முழுக்க அரங்கக் கலையுடன் தொடர்புடைய பல்வேறு ஆக்கங்களை சுமந்து வரத்தொடங்கிய இந்த சஞ்சிகையில் வி. எம். குகராஜா ''நடிகனின் பணி'' என்ற தலைப்பில் ஒரு நாடகத்தில் நடிகர் ஒருவருடைய பணி ஆரம்பத்தில் இருந்து முடிவுவரை எப்படியெல்லாம் அமைய வேண்டும் என்பதை விரிவாக ஆராய்ந்திருக்கிறார். அதேபோலவே நாடகமும் இலக்கியமும் என்ற தலைப்பில் நாடகம் எப்படி இலக்கியத்திற்குள் முக்கியத்துவத்தை பெறுகின்றது என்பதையும் ஆரம்ப காலத்திற்கும் இன்றைய நாடக வளர்சிக்கும் இடையிலான மாற்றங்கள் எவ்வகை முக்கித்துவம் பெறுகின்றன

என்பது போன்ற பல முக்கியத்துவம் வாய்ந்த கருத்துக்களை பதிவிட்டிருக்கிறர் இந்த ஆக்கத்தை வழங்கியுள்ள பி. ஏ. சி. ஆனந்தராஜ் அவர்கள்.

கலைஞர் கே. எம். சண்முகலிங்கம் அவர்கள் ''உலக நாடக அரங்க வரலாறு'' என்ற தலைப்பில் உலக நாடக வரலாறு பற்றி ஆராய்ந்திருக்கிறார். மனிதனுக்கு ஒரு வரலாறு உள்ளது போலவே நாடகத்துக்கும் ஒரு வரலாறு உண்டு. மனிதனின் வரலாறே அது. அதை அறிவது மனிதனை அறியவும் நாடகத்தை அறியவும் உதவுகிறது என்று கட்டுரையை ஆரம்பிக்கிறார். நாடகம் என்றால் என்ன? நாடகத்தின் தோற்றம் வளர்ச்சி மாற்றங்கள் என்று பல விடயங்களை இந்த ஆக்கத்தின் மூலம் வெளிக்கொணர்கிறார். இந்தக் கட்டுரையை ஒரு தொடர் கட்டுரையாக வெளிவந்த அடுத்தடுத்த இதழ்களிலும் எழுதியிருக்கிறார்.

இறுதியாக ''சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்'' என்ற நாடகத்தின் சுருக்கமான திறனாய்வுடன் மொத்தம் 30 பக்கங்களில் முதலாவது இதழ் நிறைவடைகிறது. இந்த இதழை படிக்கின்றபோதே அரங்கக் கலைக்குள் இத்தனை ஆழமான விடங்கள் உள்ளனவா என்ற பிரமிப்பையும் இதன் ஆழத்தை இன்னும் அறிய தொடர்ந்து வெளிவரும் இதழ்களையும் படிக்க வேண்டும் என்ற அவாவையும் முதல் இதழிலேயே தோற்றுவித்துவிட்டார் ஆசிரியர். இந்த சஞ்சிகையின் துணையாசிரியராக எஸ். ஜே. குமார் அவர்களும் நிர்வாக குழு உறுப்பினர்களாக கே. எம். சண்முகலிங்கம், செல்வ பத்ம நாதன் மற்றும் சோ. தேவராஜா ஆகியோரும் செயற்பட்டுவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அடுத்து வந்த இதழில் ஆசிரியர் தலையங்கத்தை சத்தியம் என்று வைத்து நாடகக் கலையில் உண்மைப் பற்றுடன் ஈடுபடுபவர்களின் நிலைபேறான இருப்புப்பற்றியும் சுயநலம் கருதிய நாடக கலைஞர்களின் நிலையற்ற இருப்புப் பற்றியும் தெளிவுபடுத்தி மக்கள் மேன்மை கருதிய உண்மைப் படைப்புகள் என்றும் வாழும் என்பதை உறுதிப்படுத்தி கூறுவதன் மூலம் நாடக கலையின் அவ்வப்போதைய நிலைமைகளையும் மாற்றங்களையும் சூசகமாக தெளிவுபடுத்த முனைந்திருக்கிறார்.

இவ்வாறு தொடர்ந்து வந்த இதழ்களில் அரங்கக் கலை தொடர்பான வெவ்வேறு தலைப்புகளில் ஆக்கங்கள் படைக்கப்பட்டிருக்கின்றன. சிரிப்பூட்டிய கலைஞர் டிங்கிரி கனகரத்தினம் என்ற ஆளுமைபற்றி ஒரு கட்டுரையில் விபரிக்கப்பட்டிருக்கிறது. அதில் 'பபூன்' என்ற நகைச்சுவைப் பாத்திரம் எமது கலைப்படைப்புகளில் இளையோடிப்போய் உள்ளமை பற்றியும் பேசப்பட்டிருக்கிறது. அடுத்து சீன மேடைகளில் அந்நிய நாடகங்கள் என்ற கட்டுரையில் சீனாவில் அந்நிய நாடகங்கள் மேடையேற்றப்படுவதற்கு இருந்த தடையும் அந்தத்தடை ஜேர்மனிய நாடக எழுத்தாளர் போவோல் பிரெஜ்ட் என்பவரின் 'கலிலியோ' என்ற நாடகம் 1979 ஏப்ரலில் சீன வாலிப அரங்கில் மேடையேற்றப்பட்டதைத் தொடர்ந்து நீங்கியமையும் அதன் பின்னர் பல்வேறு அந்நிய நாட்டு நாடகங்கள் மேடையேற்றப்படுகின்றமை பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

'அரையும் குறையும்' என்ற நாடகம் பற்றியதாக சேரனால் எழுதப்பட்ட நாடக விமர்சனம் அதே தலைப்பிலேயே எழுதப்பட்டிருக்கிறது. சேரன் அவருடைய பார்வையிலும் அவருடைய போக்கிலும் இந்த நாடகத்தைப்பற்றி துளாவி எடுத்திருக்கிறார். செய்திகள் என்ற தலைப்பில் பல்வேறு அரங்க நிகழ்வுகள் மற்றும் அரங்க நிகழ்வுகளுடன் தொடர்புடைய விடயங்கள் மற்றும் அரங்க செயற்பாடுகள் சார் செய்திக் குறிப்புகள் ஒவ்வொரு வெளியீடுகளிலும் சேர்க்கப்பட்டுள்ளமை அந்த காலப்பகுதியின் அரங்கக் கலை நிகழ்வுகள் பற்றி அறிந்துகொள்ள உதவியாக இருக்கிறது. மேலும் 'கல்வி அமைச்சும் கலை வளர்ச்சியும்' என்ற மற்றொரு ஆக்கத்தில் கலை வளர்ச்சியலே கல்வி அமைச்சின் பணிகள் எப்படி இருக்கின்றன எப்படி இருக்க வேண்டும் மற்றும் 1977 தொடக்கம் நடாத்தப்பட்டு வரும் மேடை நாடக போட்டிகளிற்கான வரவேற்பு பற்றி விவரித்திருக்கிறார். முக்கியமாக இந்த கட்டுரை பாடசாலை மாணவர்களின் நாடக ஆற்றுகைகளில் விசேட திறண்களும் யுக்திகளும் பயிற்றுவிக்கப்படவேண்டும் என்பதையும் தெளிவுபடுத்துகிறது. அடுத்து நாட்டுக் கூத்துக் கலைஞர் பூந்தான் ஜோசேப்பு பற்றி பேட்டி ஒன்று மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கேள்விகளுக்கூடாக அவற்றுக்கு விடை காணப்பட்டு தரப்பட்டிருப்பது பூந்தான் ஜோசேப்பு பற்றிய பல விடயங்களை தெரிந்துகொள்ள வழிவகுத்திருக்கிறது.

செகப்பிரியரின் (இது சேக்ஸ்பியர் என்ற பெயரின் தமிழ்ப்படுத்தல் என்று கட்டுரையில் தரப்பட்டிருக்கிறது) நாடக அரங்கு என்ற கட்டுரையை திரு. கே. கே. சோமசுந்தரம் அவர்கள் அறிமுகக் கட்டுரையாக தந்திருக்கிறார். இந்தக் கட்டுரையை நம் நாட்டு நாடக கலைஞர்களின் படைப்புகள் பற்றி மட்டுமன்றி ஏனைய நாட்டுக் கலைஞர்களின் படைப்புகள் பற்றியும் நாம் தெரிந்திருக்க வேண்டியதன் அவசியம் பற்றி தெளிவுபடுத்தி முதலில் சேக்ஸபியரின் படைப்பில் ஆரம்பிக்கிறர் கட்டுரையை கட்டுரையாசிரியர். மற்றொரு இதழில் நாடக நடிகர்

நவரத்தினம் பற்றிய நினைவுகூரல் கட்டுரை மூலம் அந்த நடிகரின் கலையுலக பங்களிப்பு பற்றி விபரமாக எழுதியிருக்கின்றமை நவரத்தினம் பற்றியும் அரங்க கலை செயற்பாடுகளில் அவரது இழப்பின் தாக்கம் விளக்கப்பட்டிருக்கிறது சிறப்பாக அமைந்திருக்கிறது. அதே இதழில் கலைஞர் நவரத்தினம் பற்றிய மற்றொரு ஆக்கத்தை ம. சண்முகலிங்கம் அவர்களும் வழங்கியுள்ளார். வீ. எம். குகராஜா நாடகம் எழுதுதல் பற்றி மேலுமொரு கட்டுரை மூலமாக விபரிக்கிறார். மிக ஆளமாக ஒரு நாடகத்தை எழுதுவதில் உள்ள பல்வேறு சூட்சுமங்கள் பற்றி விரிவாக இந்தக் கட்டுரையில் ஆராய்ந்திருக்கிறார். இக்கட்டுரை பல நாடக எழுத்தாளர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையக்கூடியதாக அமைந்திருக்கிறது.

இவ்வாறு பல்வேறு தலைப்புக்களிலான கட்டுரைகள் அரங்கக்கலைபற்றிய பல்வேறு தெளிவுபடுத்தல்களுடன் வெளிவந்த இந்த சஞ்சிகை வெறும் 30 பக்கங்களுடன் மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை மிக சொற்ப கட்டுரைகளுடன் ஒவ்வொரு இதழும் வெளிவரும் நிலைமையை தோற்றுவித்திருக்கிறது. அது மட்டுமன்றி சஞ்சிகையின் வடிவமைப்பில் பல்வேறு மாற்றங்கள் அடுத்தடுத்த இதழ்களில் எதிர்பார்க்கப்பட்டபோதும் அது இடம்பெறாமல் போனது ஏமாற்றமே. மிகவும் முக்கியமாக ஏற்படுத்தப்பட வேண்டிய குறிப்பிடக்கூடிய மாற்றமாக ஒரு கட்டுரையின் ஆரம்பத்தை தனியொரு பக்கத்தில் ஆரம்பிப்பதை தவிர்த்து ஒரு கட்டுரை முடிவடையும் போதே ஆரம்பித்திருப்பதை குறிப்பிடலாம். பல கட்டுரைகளுக்கு அதனை எழுதியவர்கள் யார் என்பது குறிப்பிடப்படாமை மேலும் ஒரு கவனிக்கப்படவேண்டிய விடயமாகக்கொள்ளலாம். அதேபோலவே கட்டுரைகள் அல்லது ஆக்கங்கள் ஒரு ஒழுங்கமைப்பில் மேற்கொள்ளப்பட்டிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். இன்னும் எழுத்தாளர்களை உள்வாங்கும் பொருட்டான முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட வில்லையோ என்ற கேள்வி இந்த வெளியீட்டில் மற்றவர்களுடைய பங்களிப்புக்கான ஆர்வக்குறைபாட்டையும் சுட்டிக்காட்டுகிறது.

மேற்படி சிறு மாற்றங்களுக்குரிய விடயங்கள் இருப்பினும் இந்த சஞ்சிகை மிகமிக அவசியமான ஒரு சஞ்சிகையாகவே எடுத்துக்கொள்ள முடியும். அதற்கமைய அரங்கக் கலைபற்றிய நுணுக்கங்களை கற்றுத் தேர்ச்சிபெற நினைக்கும் பலருக்கும் இந்த சஞ்சிகை ஒரு வரப்பிரசாதம். அரங்கக் கலைபற்றிய பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய ஆங்கங்கள் ஒவ்வொரு இதழிலும் வெளி வந்து இந்த சஞ்சிகையின் தேவையை தெளிவாக புலப்படுத்தியிருக்கின்றது. இவ்வாறானதொரு சஞ்சிகையை காலத்தின் தேவையை சரியாகக் கணித்தறிந்து வெளியிட்ட பெருமைக்குரிய கலைஞராகவே வீ. எம். குகராஜாவை பார்க்க முடிகிறது. அவர் பல எதிர்பார்ப்புகளை கலைஞர்கள் மத்தியிலும் இரசிகர்கள் மத்தியிலும் தோற்றுவித்து அவற்றையெல்லாம் முழுமையாக நிவர்த்தி செய்யமுன்னரே மிகக்குறுகிய வயதில் இறைபதமெய்தியதைப்போன்றே நாடக அரங்கக் கல்லூரியின் ஒரு வெளியீடாக இவரால் ஆசிரியப் பொறுப்பிலிருந்து வெளியிடப்பட்டுவந்த ‘அரங்கம்’ சஞ்சிகையும் சில வெளியீடுகளுடன் குறுகிய காலத்தில் நின்றுபோனமை துரதிர்ஸ்ரமாதே. ஆம் இந்த சஞ்சிகை ஆரம்பித்து சில இதழ்கள் வெளிவந்த நிலையில் அதன் வெளியீடுகள் நின்று போனது அதற்கான காரணங்களை கண்டுகொள்ள முடியவில்லை. முடிந்தால் வெளிவந்த இதழ்களை தேடிப்படித்து அரங்கக் கலைகள் பற்றி வெளிவந்த விடயங்களை அறிந்கொள்க.

முந்தைய இதழ்கள்

காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
வைகாசி - 2022

சித்திரை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்

காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மார்கழி - 2021

மாசி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்



காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஆடி 2019



காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஐப்பசி 2019

தை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்



காற்றுவெளி
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ் - 2020

பங்குனி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்